ஆகஸ்ட் 2016
Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/133/News/2016

# சோதிட கேசரி

ISSN 2012-5143
மலர்: 9 இதழ்: 05
விலை ரூபா 75 /-
ஆவணி மாத இதழ்



## வரங்கள் வழங்கிடும் விநாயகர் சதுர்த்தி

## கடன் தீர அகத்தியர் பாடல்கள்

## சத்தியம் நித்தியமானது

## ஐந்து முக விநாயகர்

## ஜாதக கணிப்பில் விஞ்ஞான அணுகுமுறை



JEYECHANDRANS
The Art of Fashion
Wellawatte / Pettah
முகவர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு
ராசியான ஒரே இடம்

433, காலி வீதி, வெள்ளவத்தை
011 - 4528435, 011 - 4528438
Skype: jeyechandrans888

194, மெயின் வீதி, கொழும்பு - 11
011 - 2448870, 011 - 2448860
Skype: jeyechandrans888

Web : www.jeyechandrans.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே கிருஷ்ணா

# இலங்கை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

## கொழும்பு மாநகரில் அதி அற்புத ஆலயம்





"பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு அமைக்கப்படும் ஆலய திருப்பணியை ஆரம்பிக்கும் அல்லது அதில் பங்கு கொள்ளும் பக்தரின் ஏழு பிறப்பிற்குரிய பாவங்களும் நீக்கப்படுவதுடன் அவரின் மூதாதையரும் நரகலோகத்திலிருந்து மீட்சி பெறுவர்" என ஸ்கந்த புராணம் கூறுகிறது.

ஆலயத் திருப்பணி வேலைகளுக்காக 10 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் அரைவாசி வேலைகள் முடிந்த நிலையில், நீங்களும் பகவான் கிருஷ்ணரின் ஆலயத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் வந்து பங்கு கொண்டு பிறவிப் பயனை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.



▲ நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

நன்கொடைகளை ஹட்டன் நெஷனல் வங்கியில் அல்லது கொமர்ஷல் வங்கியில் பணத்தை வைப்புச் செய்யலாம்.

Commercial Bank - Kotahena
A/C Name : ISKCON - Temple Fund
A/C No : 1120017042

Hatton National Bank - Kotahena
A/C Name : ISKCON
A/C No : 207010000891

ISKCON

www.iskcon.lk

**சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் - இலங்கை**

ஸ்தாபக ஆச்சாரியார் : அருட்திரு அ. ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

**ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயம்**

இல. 188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13.
தொ : 011 2433325 | மின்னஞ்சல் : iskcon@slt.lk

ஆண்டு நிறைவு 1965 - 2015



பக்திவேதாந்த சிறுவர் இல்லம் "கோகுலம்" சிறுவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகிறது. இவர்களுக்கு சிறந்த கல்வியும் நற்பழக்கவழக்கங்களையும் கற்பிக்கக்கூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. தங்களின் அல்லது தங்களின் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்களின் திருமண நாள் உறவினர்களின் ஞாபகார்த்தம் பேன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறுவர்களுக்கு உதவலாம்.

தற்போதய சூழ்நிலையில் அவர்களை பராமரிக்க ஒரு நாளைக்கு ரூபா 25,000/- செலவாகிறது.

கருணை இல்லமாக விளங்கும் பக்தி வேதாந்த சிறுவர் இல்லம்

# கோகுலம்

Commercial Bank
A/C Name - ISKCON
A/C Number - 1050669901
Shift Code - CCEYLKLX

**GOKULAM** No. 607A, Negombo Road, Mabola, Wattala. Tel: 011 2948398 Web: www.iskcon.lk

**OFFICE** No. 188, New Chetty Street, Colombo 13. Tel: 011 2433325 E-mail: iskcon@slt.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதிடகேசரி
SOTHIDA KESARI
*Astrological Magazine - Tamil*
மலர்: 9 | இதழ்: 5

# மனச்சாட்சியை மனிதன் மறக்கலாகாது!



மனிதன் எடுத்துக்கொள்ளும் எந்த ஒரு காரியத்திலும் நல்லதும் கெட்டதும் கலந்தே யிருக்கும். அவ்வாறே இறைவன் மனித வாழ்வை படைத்திருக்கின்றார். இன்பத்திலும் துன்பத்திலும் நல்லதிலும் கெட்டதிலும் போராடி வாழ்வதற்கு மனிதன் புவியில் பிறக்கின்றான். புராணங்கள் அனைத்திலும் மனிதனின் முன்ஜென்ம கர்ம வினைகள் தொடர்ந்தே வருகின்றன எனச் சொல்லப்பட்டுள்ளது. எனவே இவற்றையெல்லாம் நன்குணர்ந்த மனிதர்கள், மனச்சாட்சியை மறக்காமலும் அறம் பிறழாமலும் என்றும் வாழ்வியல் சம்பவங்களை எதிர்கொண்டால் பெரும் துன்பத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

ராமர் இல்லாத அயோத்தி சோகத்தின் எல்லையை தொட்டு கொண்டிருப்பதை உணர்கின்றான் பரதன். அயோத்தி அரண்மனை வந்த பின்பு அன்பின் உருவான தந்தை மாண்டு போனதையும் அறிகின்றான். ஸ்ரீ ராமரை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வருவதற்காக கானகம் செல்கின்றான். பரதன் குடிமக்களோடு ஆரண்யம் நோக்கி வருவதை அறிந்த லட்சுமணன் ஆத்திரத்தில் கொதிக்கின்றான். "நாமாளும் காடு கொடிக்கிலராகி எடுத்தது காணீரோ" என வெகுண்டு ராமரிடம் கூறுகின்றான். பின்பு ராமர் அவனை சரியான விதத்தில் சமாதானப்படுத்துகிறார்.

இத்தனைக்கும் இடையில் பரதன் தாம் எடுத்துக்கொண்ட காரியத்தில் கொஞ்சமும் சோர்ந்து விடாது, பிறர் தம்மை பற்றி என்ன நினைத்தாலும் சரி, ராமரை அயோத்திக்கு அழைத்து வந்தே தீருவது என சங்கல்பம் செய்து கொண்டு மனச்சாட்சியே தெய்வம் என மனதிலே நிலைநிறுத்தி செயல்படுகின்றான்.

எனவே ராமாயணத்தில் மனச்சாட்சியின் பிரதிநிதியாய் வருகின்ற பரதனை நாமும் நினைத்துக் கொண்டு முடிந்த அளவில் எல்லா விடயத்திலும் மனச்சாட்சியுடன் வாழ முயல்வோமாக!

இம்மாத இதழில், ஐந்து முகம் கண்களுடன் விநாயகர், சிவநாமத்தின் சிறப்பு, நல்லூர் கந்தப் பெருமான், சத்தியம் நித்தியமானது, சிந்தனைகளே சிறந்த வழிபாடு, ஆவணி மாத சுபதினங்கள், பிரம்மபுத்திரா என்னும் புனித நதி, திராய்டு மடுவின் சடையப்ப சுவாமிகளும் முருகன் திருத்தலமும் ஆகிய கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் பலவும், ஆவணி மாதத்திற்கான பன்னிரண்டு ராசிகளுக்கான பலன்களும் எமது அன்பு வாசகர்களுக்கு காணிக்கையாகின்றன.

✍ ஆசிரியர்

## துர்முகி வருடம் ஆவணி மாதம் 17.08.2016 முதல் 16.09.2016 வரை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | **ராசி** | | ல |
| சந்திரன் | 26.08.2016 கன்னி சுக்கிரன்<br>8.9.2016 தனுசு செவ்வாய் | | சூரியன்<br>புதன்(வ)<br>சுக்கிரன்<br>ராகு |
| | செவ்வாய்<br>சனி | | குரு |

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரியன்<br>சந்திரன் | | |
| | **அம்சம்** | | |
| குரு | 19.08.2016 கும்ப குரு<br>4.09.2016 மீன குரு<br>22.08.2016 துலா சனி<br>15.09.2016 சிம்ம ராகு<br>15.09.2016 கும்ப கேது | | ல |
| செவ்வாய் | | | சனிராகு<br>புதன்<br>சுக்கிரன் |

Publisher : Express Newspaper (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14.
Tel. : +91 115 322700 (30 Lines) Fax: +94 112 439987
Website: www.virakesari.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வரங்கள் வழங்கிடும்

# விநாயகர் சதுர்த்தி



சிந்துரனைக் கொல்லும் பொருட்டு விநா யகர் திருவவதாரம் செய்தருளிய தினம் ஆவணி மாதப் பூர்வபக்கச் சதுர்த்தி தினமாகும். இத்தினமானது உலக காரணராகிய சிவபிரானே பூஜித்ததும் மகிமையும் கீர்த்தியும் வாய்ந்ததுமான நாளாகும். யானை முகமும் பெருச்சாளி வாக னமும் விநாயகரின் விவேக புத்திகளின் அடையாளங்களென மதிக்கப்படுகின்றன. அவரது ஞானம், விவேகம், திறன், சுறுசுறுப்பு என்பனவற்றைக் கண்டே வியாச முனிவர் மகா பாரதத்தைத் தங்கு தடையின்றி எழுதுவதற்கு விநாயகப் பெருமானைப் பணித்தார். பண்டைக் காலத்துப் புலவர்கள், நூலாசிரியர்கள் விநாயகரை வணங்கியே தம் நூல்களைப் பாடினர். சிரசிலே குட்டுதல், தோப்புக்கரணம் போடுதல் என்பன விசேடமாக விநாயகரை வசீகரிக்கும் வணக்க முறைகளாகும். தேகாரோக்கிய முறையில் நல்ல சக்தியும் உண்டாகின்றது. தேகாப்பியாசத்தைக்கூட நமது முன்னோர்கள் தெய்வீகமாக்கி இருக்கின்றனரென்பது இதன் மூலம் அறியலாம். திருமால் கூட இவ்விரதத்தை அனுஷ்டித்துக் குருட்டுப் பாம் பாகும்படி உமையம்மையாரிடம் சாபம் நீங்கப் பெற்றார். இவ்விரதத்தை முறைப்படி அனுஷ்டிப்போர் துன்பம், நோய், வறுமை முதலியன நீங்கி இன்புறுவர். இட்ட சித்திகள் யாவும் பெற்று மகிழ்வர். இவ்விரத மகிமையைச் சொன்னால் கர்ப்பவதிகள் வேதனை நீங்கிச் சுகப் பிரசவமாவர். யாத்திரை நாட்களில் கூறினால் எவ்வகை இடர்களும் தெரியாது எனவும் கூறப்படுகின்றது.

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவும்
களியார வருயானை கழல்நாளு மறவாமல்
அளியாளு மலர் தூவு மடியார்களுள மான
வெளிதாகும் வலிதாய வினைகூட நினை யாவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானத்தின் உன்னத நிலையில்

# பிரம்மத்தை அடையலாம்!

கண்ணன்: அழகான வடிவம் எதிரில் வருவதால் கண்ணாடிக்குப் புதிய பெருமையொன்றும் வருவதில்லை. கோணலானதும் அழுக்குப் படிந்ததுமான வடிவம் எதிரில் வருவதால் கண்ணாடிக்குக் குறையொன்றுமில்லை. பொருள்களை உள்ளபடி பிரதிபிம்பத்திற்கிடையில் கண்ணாடி யாண்டும் தன்மயமாயிருக்கிறது. ஆத்ம சாகரியின் முன்னிலையில் நிகழும் பிரகிருதியின் செயல் எதுவானாலும் தன் எதார்த்த சொரூபத்தைப் பற்றிப் பேறிஞனுக்குச் சந்தேகம் ஒன்றும் உண்டாவதில்லை என்று சத்வ குணம் கொண்டவனின் தன்மையைப் பற்றி விளக்குவார் சுவாமி சித்பவானந்தர்.

தியாகியாக இல்லாதவர்களுக்கு செய்யும் செயல்களைப் பொறுத்துத்தான் இனிமையான சொர்க்கலோக வாசமும், தேவகணமாகப் பிறக்கும் யோகமும், கொடுமையான நரக லோக வாசமும், விலங்குகளாக பிறக்கும் யோகமும், இனிமையும் கொடுமையும் கலந்த இவ்வுலக வாசமும், மனிதராக பிறக்கும் யோகமும் கிடைக்கும். சொர்க்கப் பிராப்தியும் தேவகணப் பிறப்பும் இனியது. நரகப் பிராப்தியும் விலங்குகளாகப் பிறப்பதும் இன்னாதது. பூவுலகப் பிராப்தியும் மனிதராகப் பிறத்தலும் இரண்டும் கலந்தது. ஆனால் உண்மையான தியாகிகளுக்கு இத்தகைய பிறப்பு என்பது இல்லாமல் மோட்சத்தை அடையும் வழி கிடைக்கும்.

இவ்வுலக வாழ்க்கையில் ஆசைகளையெல்லாம் விட்டு, பற்றினையெல்லாம் விட்டு சந்நியாசியாக இருப்பவன் இனி ஏதும் செய்ய வேண்டாம் என்ற நிஷ்காமிய கருமா என்ற நிலையை அடைய முயல்கிறான்.

அப்படிப்பட்ட நிலையை அடைந்தவன், ஞானத்தின் உன்னத நிலையான பிரம்மத்துடன், பரமாத்மாவுடன், கண்ணனின் திருவடிகளுடன் இணையும் வல்லமையைப் பெறுகிறான். அவன் தூய்மையான அறிவினாலும், உறுதியான மனத்தினாலும் தன்னுடைய உடலையும் உணர்வுகளையும் அடக்கிவிடுவான். ஐந்து புலன்களின் சுகங்களான கேட்கும் ஒலி, பார்க்கும் ஒளி, சுவைக்கும் ஊறு, முகரும் நாற்றம், உணரும் தன்மை என்னும் ஐந்து புலன்களின் சுகங்களையும் ஒடுக்கி விடுவான். விருப்பு, வெறுப்பு இரண்டையும் கடந்து விடுவான். தனிமையையே விரும்பி அத்தகைய இடங்களுக்குச்சென்று தியானம் செய்ய எண்ணுவான். வேண்டிய அளவுக்கு மிகவும் கொஞ்சமாகவே உணவு உண்ணுவான். மனத்தையும், பேசுவதையும், உடலையும் அடக்கி தியானம் செய்யத் துணிவான். உயிர்களுக்குத் துன்பம் தரக்கூடிய கெட்ட குணங்களான அபிமானம், அகந்தை, ஆணவம், காமம், மோகம், கோபம் ஆகியவற்றை வைராக்கியத்துடனும் உறுதியுடனும் கட்டுப்படுத்துவான். தான் தனது என்ற எண்ணங்களை விடுத்து, அமைதியாக இருக்க முயல்வான். இப்படியெல்லாம் செய்து முடிவில் பிரம்மத்துடன் சேர வாய்ப்பு பெறுவான். ✿





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேஷம்



துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

வெற்றியின் இலக்குகளை எதிர் கொண்டு செயல்படும் மேச ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சந்திரன் தொழில் ஸ்தானத்தில் அமர்ந்தும் கேது லாப ஸ்தானத்திலும் அமர்ந்தும் குரு தன ஸ்தானத்தை பார்வை இடுவது பொருளாதாரம் வளம் பெறும் வாய்ப்புகள் அமையும்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிட்டும். தொழில் ஸ்தானத்தில் நற்பெயர் பெறுவீர்கள். உறுதியான முடிவுகளை எட்ட பல நாள் கஷ்டப்பட வேண்டி இருக்கும். புதிய கடன் படும் வாய்ப்பும், பொருளாதாரத்தில் வளர்ச்சியுடன் வருமானம் பெருகும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

அரசியல் தலைமையில் இருப்பவர்களுக்கு தற்சமயம் நல்ல வளர்ச்சியை பெற்று தரும். கவனமுடன் செயல்பட்டு கஷ்டங்களை தவிர்த்துக் கொள்வீர்கள். இனி எதிர்காலத்தை திடமாக செயல்படுத்தி முயற்சிகளை மேற்கொள்வீர் கள்.

### வியாபாரிகளுக்கு

உங்களின் தொழில் ஸ்தானத்தின் மீது குரு பார்வை பெறுவது தன ஸ்தானத்தில் பார்வையும் வியாபாரத்தில் முன்னேற்றத்தை தரும். புதிய வியாபார வாய்ப்பும் வங்கி மூலம் கடன் வசதியும் பெறுவீர்கள். அன்னியரின் ஆதரவு நன்மையை தரும். பணபுழக்கம் நன்றாக இருக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையின் சிலருக்கு வளர்ச்சி தந்தாலும், கலைஞர்களின் வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். துணிச்சலான முடிவுகளை எடுப்பீர்கள். விளையாட்டு துறையில் சிறப்பாக செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களின் சுயகௌரவம் மேலோங்கும். வீண் பேச்சுகளை குறைத்து ஆக்கபூர்வமான விடயங்களில் நற்பலனை பெறுவீர்கள். திருப்புமுனையான செயல்பாடுகளை திறம்பட செய்வீர்கள்.

### மாணவர்களுக்கு

கல்வியில் புத்துணர்வுடன் செயல்படுவீர்கள். எதிர்காலத்தில் உயர்கல்வி மேன்மைக்கு நல்ல பலன் கிட்டும்.



**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் அம்மன் வழிபாடு செய்து நெய் விளக்கு போட்டு வர வெற்றியை எளிதில் அடைவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

01.09.2016 புதன் மாலை 06.21 முதல் 10.09.2016 சனி அதிகாலை 05.27 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### அசுபதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

வாழ்க்கையின் வெளிச்சத்தில் சென்று செயல்படும் வாய்ப்புகள் அமையும். தன்னை நன்றாக புரிந்து கொண்டவரை மட்டும் தொடர்பு கொண்டு இணைந்து செயல்படுவீர் கள்.

#### பரணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

ஆற்றலுடன் செயல்படுவீர்கள். எதை செய்தாலும் அதில் ஆளுமையான செயல் பாடுகள் இருக்கும்படி உறுதியுடன் செயல்படுவீர் கள்.

#### கார்த்திகை 1ஆம் பாதம்

எல்லோரிடமும் வித்தியாசமின்றி பழகுவீர் கள். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அராசங்க சலுகை கிடைக்கும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: ஓரஞ்சு, வெண்மை

அதிர்ஷ்ட திசைகள் : கிழக்கு, தென்கிழக்கு


அதிர்ஷ்ட கிழமைகள் : ஞாயிறு, திங்கள், செவ்வாய்

**ஆண்டவன் அருள்!**

இறைவனுக்கு வேண்டுதல் வேண்டாமை இல்லை. விளக்கு நெருங்கியவர்களுக்கு வெளிச்சத்தையும், நெருங்காதவர்களுக்கு இருளையும் தருவது போன்றது ஆண்டவனுடைய அருள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சுபயோக சுபதினங்கள் துர்முகி வருடம் ஆவணி மாதம் திருமணம், மாங்கல்யம் செய்ய, புதுவாகனம் வாங்க, தொழில் துவங்க, சீமந்தம், கடன் வாங்க

# துர்முகி வருடம்
# ஆவணி மாதத்து சுபதினங்கள்

| மாதம் | கிழமை | திதி | நட்சத்திரம் | யோகம் | காலை | லக்னம் | பிறை |
|---|---|---|---|---|---|---|---|
| 21.08.2016 | ஞாயிறு | திருதியை | உத்திரட்டாதி | அமிர்த | 06.00 07.30 | சிம்ம்ம் | தேய் |
| 22.08.2016 | திங்கள் | பஞ்சமி | ரேவதி | சித்த | 10.00 10.30 | துலாம் | தேய் |
| 28.08.2016 | ஞாயிறு | ஏகாதசி | புனர்பூசம் | சித்த | 09.15 10.15 | துலாம் | தேய் |
| 29.08.2016 | திங்கள் | துவாதசி | பூசம் | சித்த | 09.15 10.15 | துலாம் | தேய் |
| 04.09.2016 | ஞாயிறு | திருதியை | ஹஸ்தம் | சித்த | 07.00 08.20 | கன்னி | வளர் |
| 08.09.2016 | வியாழன் | சப்தமி | அனுசம் | சித்த | 07.20 08.20 | கன்னி | வளர் |

## சத்திர சிகிச்சை செய்து குழந்தை எடுக்க



| திகதி | நேரம் காலை | | |
|---|---|---|---|
| 17.08.2016 | பகல் 03.00 04.00 | 28.08.2016 | காலை 08.00 09.00 |
| 18.08.2016 | பகல் 03.00 04.00 | 29.08.2016 | பகல் 12.00 01.00 |
| 19.08.2016 | பகல் 01.00 02.00 | 04.09.2016 | காலை 08.00 09.00 |
| 21.08.2016 | காலை 08.00 09.30 | 05.09.2016 | பகல் 12.00 01.00 |
| 22.08.2016 | காலை 09.00 09.45 | 06.09.2016 | காலை 07.00 08.30 |
| 23.08.2016 | பகல் 02.30 03.00 | 08.09.2016 | காலை 11.00 12.30 |
| 24.08.2016 | பகல் 02.30 03.30 | 13.09.2016 | காலை 11.00 12.00 |
| 27.08.2016 | பகல் 03.00 03.45 | 16.09.2016 | பகல் 01.00 02.00 |

## சாந்தி முகூர்த்தம்

| | |
|---|---|
| 21.08.2016 | இரவு 08.00 09.00 |
| 22.08.2016 | இரவு 08.00 09.00 |
| 29.08.2016 | இரவு 08.00 09.00 |
| 04.09.2016 | இரவு 10.15 11.45 |
| 08.09.2016 | இரவு 10.15 11.45 |

## கிரக பிரவேசம்

| | |
|---|---|
| 21.08.2016 | காலை 06.00 07.00 |
| 22.08.2016 | காலை 06.00 07.00 |
| 29.08.2016 | அதிகாலை 05.00 06.00 |
| 05.09.2016 | அதிகாலை 05.00 06.00 |
| 08.09.2016 | அதிகாலை 04.30 06.00 |
| 14.09.2016 | அதிகாலை 04.30 06.00 |

## கடன் தீர்க்க

| | |
|---|---|
| 21.08.2016 | பகல் 02.00 04.00 |
| 23.08.2016 | பகல் 12.00 01.00 |
| 26.08.2016 | பகல் 12.00 01.30 |
| 27.08.2016 | பகல் 12.00 01.00 |
| 30.08.2016 | பகல் 12.00 01.00 |
| 05.09.2016 | பகல் 12.00 02.00 |
| 06.09.2016 | பகல் 12.00 01.00 |
| 10.09.2016 | பகல் 12.00 01.30 |

கணிப்பு: சோதிடர்
வாடிப்பட்டி
R.ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆவணி மாத சிறப்புக்கள்!



தமிழ் மாதங்களில் ஐந்தாவதாக வருகின்ற ஆவணி மாதம் சோதிட சாஸ்திரத்தின் படி சிங்க மாதம் எனச் சொல்லப்படுகின்றது. சூரியன் ஆவணி மாதத்தில் சிம்ம ராசியில் பிரவேசிப்பதால், இம்மாதத்தில் வரும் ஞாயிற்றுக் கிழமைகள் யாவும் சிறப்புடையதாகக் கொள்ளப் படுகின்றன.

ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் பொங்கல் வைத்து வழிபாடு செய்தால் சூரிய பகவானின் கருணையைப் பெற முடியும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஞாயிறை ஆதிவாரம், சூரிய வாரம் எனவும் அழைக்கின்றனர். இத்தினத்தில் உரிய விரதமிருந்து சூரிய பகவானை வழிபடுவதனாலும், பொங்கல் வைத்து வணங்குவதாலும் மானிட வாழ்வில் கிடைத்தற்கரிய பலன்களைப் பெறலாம் என்கின்றது வேதத்தின் ஒரு அங்கமாகக் கருதப்படும் 'ஆதித்ய ஹிருதயம்' எனும் காவியம். ஒரு மனிதனுக்கு ஆத்ம பலத்தையும் சரீர ஆற்றலையும் வழங்குகின்ற கிரகம் ஞாயிறாகிய சூரியனே.

வாதவூரராகிய மாணிக்கவாசகரை ஆண்டருளத் திருவுளம் கொண்ட சிவபெருமான், கணநாதர்களோடு பரமாச்சாரியார் திருமேனி கொண்டு திருப்பெருந்துறையிலே எழுந்தருளி சிவாகம உபதேசம் செய்து கொண்டிருந்தார். ஏவலர் மூலம் அதனை அறிந்து அங்கே சென்ற வாத ஊரார், பரமாச்சாரியாரை அடைந்து உபதேசம் பெற்று அவருக்கு அடிமையானார். திருவாதவூரடிகளுக்காக நான்மறை அறங்கள் ஓங்க, மேன்மை கொள் சைவ நீதி மேலும் தழைத்திட, வேத மாகிய வெண் பரியின் மேல் குதிரை வர்த்தகர் திருக்கோலம் பூண்டு சோமசுந்தரப் பெருமான் மதுரைக்கு எழுந்தருளிய தினமே ஆவணி மூல மாகும்.

சிறந்த சிவ பக்தராகிய மாணிக்கவாச கருக்காக இறை வனே ஆசானாய் வந்து உபதேசித்து அருளி ஆட்கொண்டது ஆவணி மாதத்தில் தான். மேலும், இப்புனித நாள் இன்றளவும் சிவாலயங்களிலும் மற்ற தெய்வத் தலங்களிலும் ஆவணி மூலப் பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆவணி மாதத்தில் வருகின்ற அவிட்ட நட்சத்திரத்திற்கு எட்டாம் நாள், ரோகிணி நட்சத்திர தினத்தன்று கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படுகின்றது. அன்றைய தினம் அஷ்டமி திதியில் பிறந்த கண்ணனின் அவதாரமே கிருஷ்ண ஜெயந்தியாக அனுசரிக்கப்படுகின்றது. இத்தினத்தை "கோகுலாஷ்டமி" என்றும் கூறுவர். அன்று வீட்டின் நுழைவாயிலிலும், முன் அறையிலும் குழந்தை நடந்து வந்ததைப் போன்ற பாதச் சுவடுகள் மாவினால் பதியச் செய்வார்கள். கிருஷ்ணர் அவர்தம் வீட்டிற்கு வந்ததைப் போன்று ஓர் இனிய உணர்வு இதனால் ஏற்படுகின்றது.

இந்த கிருஷ்ணஜெயந்தி விரதத்தினை தம்பதி சமேதராய் செய்திடல் வேண்டும். பகல் முழுவதும் விரதம் இருந்து, இரவில் வசுதேவர் தேவகியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கிருஷ்ணரைப் பூஜித்து கண் விழித்திருந்து அவரது சரித்தை பக்தியுடன் கேட்க வேண்டும். மறுநாள் பூஜை செய்து அன்னதானம் செய்ய வேண்டும். பாகவதத்தில் அவதாரக் கட்டத்தைப் பாராயணம் செய்வதும் பாகவதம் எடுத்துச் சொல்லக் கேட்பதும் புண்ணியம் தருகின்ற விட யங்களாகும்.

ஆவணி மாத விசாக நட்சத்திரத்தில் ஒவ் வொரு ஆண்டும் விநாயகசதுர்த்தி கொண்டாடப் படு கின்றது. வாழ்வியல் சந்தோஷங்களுக்கும், மன அமைதிக்கும் உரியதான பல சிறப்பான பலன் களை அள்ளித்தருவது விநாயகசதுர்த்தி விரதம். ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தியில் தொடங்கி புரட்டாசி மாத வளர்பிறை சதுர்த்தி வரையில் விநாயக சதுர்த்தி விரதத்தை மிகுந்த பக்தியுடன் மேற்கொள்ளல் வேண்டும்.

அதிகாலையில் எழுந்து நீராடி, கோயில் அல்லது வீட்டில் பூஜை செய்யலாம். பகல் முழுவதும் உண்ணாமல் இருந்து, மாலையில் மீண்டும் நீராடி வழிபாடு செய்த பின்னரே பாலும் பழமும் அருந்த வேண்டும். விரதம் முடியும் வரை தொடர்ந்து முப்பது நாட்களும் இவ்வாறே செய்து, கடைசியில் மற்றவர்க ளுடன் ஒன்றாக அமர்ந்து உண்ண வேண்டும்.

முப்பது நாட்கள் விரதம் மேற்கொள்ள முடி யாதவர்கள், விரதத் தொடக்கத்தில் சில நாட்கள் விரதம் மேற் கொண்டபின் மற்ற நாட்களில் உப்பு இல்லாத பொங்கல், பால், பழம் முதலிய வற்றை மட்டும் உட்கொள்வது சிறப்பு. வயதா னவர்கள், உடல் நலம் குன்றியவர்கள் குறைந்த பட்சம் விநாயக சதுர்த்தி தினத்தன்று மட்டுமா வது விரதம் அனுஷ்டிப்பது அவசியம்.

இந்த விரதத்தைக் கடைப்பிடித்து முருகப் பெருமான் சூரபத்மனை வெற்றி கண்டார். திரு மாலும் இவ்விரதத்தை அனுஷ்டித்து உமையம்மை இட்ட சாபம் நீங்கப் பெற்றார் என்று புராணங் கள் கூறுகின்றன. இவ்விரதத்தை முறைப்படி மேற் கொள்வோர் துன்பம், வறுமை, நோய் முதலியன நீங்கப் பெற்று, இஷ்ட சித்திகள் யாவும் கிடைக்கப் பெறுவர் என்பது உறுதி.

ஆவணி மாதத்தில், பெண்களால் அனுஷ்டிக் கப்படும் மற்றுமொரு முக்கியமான விரதம் 'சுவர்ண கௌரி விரதம்'.

விநாயக சதுர்த்திக்கு முன்தினம், அதாவது ஆவணி மாத வளர்பிறை சதுர்த்திக்கு முன்தினம் இவ்விரதத்தை மேற்கொள்ள வேண்டும். இவ்வி ரதம் பதினாறு ஆண்டுகள் தொடர்ந்து கடைப்பி டிக்கப்பட்டால் மிகுந்த நற்பலன்களை அளிக்கும். சுவர்ண கௌரி விரதத்தை தனியொரு பெண்ணா கவோ, பல பெண்கள் கூட்டாகவோ நோற்கலாம்.

சூரிய உதயத்திற்கு முன் எழுந்து நீராடி, பூஜை அறையில் நெய் விளக்கேற்றி, பூஜை நைவேத்திய சாமான்களுடன் பூஜையைத் துவங்க வேண்டும். அம்பிகைத் தோத்திரங்களைக் கூறி வழிபட்டு கற்பூரம், சாம்பிராணி தூபம் காட்டி வணங்க வேண்டும். பூஜை முடிந்தவுடன் கணவர் அல்லது சுமங்கலிப் பெண்களைக் கொண்டு பூஜையில் வைத்து வணங்கிய மஞ்சள் கயிற்றைக் கட்டிக் கொள்ளவேண்டும். வந்திருப்பவர்களுக்கும் மஞ்சள் கயிறு கொடுக்க வேண்டும். பூஜைக்கு வந்தவர்களுக்கு உணவு படைத்துத் தாம்பூலம் கொடுத்து ஆசீர்வாதம் பெற்ற பின்னரே விரத மிருப்போர் உணவு உண்ண வேண்டும். பெண்கள்



நீண்ட காலத்திற்கு சுமங்கலிகளாக வாழவும், இல் லறம் குறைவின்றி இருந்திடவும் இவ்விரதம் வழி வகுக்கும்.

ஆவணி மாதத்தில் பௌர்ணமியன்று, அவிட்ட நட்சத்திரத்தில் கொண்டாடப்படுவதே ஆவணி அவிட்டம். வைதீக முறைப்படி பூணூல் அணிபவர்கள், இந்நாளில் பழைய பூணூலை அகற்றி விட்டு புதுப்பூணூல் அணிவார்கள்.

ஆவணி அவிட்டத்திற்கு அடுத்த நாள் காயத்ரி மந்திரம் ஓதுவதற்கு நேரம் ஒதுக்கி, மந்திரத்தின் பொருள் உணர்ந்து சூரிய பகவானை நோக்கி பத்து, நூற்றி எட்டு மற்றும் ஆயிரத்தெட்டு முறை அவரவர் வசதிக்கேற்ப காயத்ரி மந்திரத்தை ஓதுவார்கள். இவ்வாறு ஆவணி மாதம் சிறந்த பூஜைகளுக்கும், விரதங்களுக்கும் உரியதாக விளங்குகின்றது.

ஆவணி மாத விரதங்களையும் பூஜைகளையும் பக்தியுடன் அனுஷ்டித்து நாமும் நற்பேறு பெறு வோமாக!

■ ஒத்தக்கடை ராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனாவில்
## குவான்சவ் நகரத்தில்
# சிவன் ஆலயம்



சீனா, பர்மா போன்ற நாடுகளில் இந்துக்கள் மற்றும் தமிழர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே வர்த்தகம் மற்றும் கலை தொடர்புகளின் காரணமாக அவ்விடங்களில் அதிக அளவில் குடி பெயர்ந்து வாழ்ந்திட ஆரம்பித்தார்கள். அவர்களின் ஆன்மீக தேவை மற்றும் கலை கலாசார அவசியங்களை முன்னிட்டு அவர்களே அங்கு இந்து ஆலயங்களை எழுப்பினார்கள்.

சீனாவின் யுவான் வம்சத்தின் வழி வந்த குப்ளைக் கான் சீனாவில் சிவன் ஆலயம் ஒன்றை எழுப்பினார். இவ்வாலயத்தில் காணப்படும் கல்வெட்டு ஒன்றில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சுவாரசியமான விடயம் என்னவென்றால், இந்த ஆலய கல்வெட்டில் தமிழ் மற்றும் சீன மொழிகள் காணப்படுகின்றன. இந்த கல்வெட்டின் கடைசி வரியானது சீன மொழியிலேயே இருக்கின்றது.


சீன நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றான குவான்சவ் சீனாவின் குறிப்பிடும்படியான துறைமுகபட்டினமாக விளங்கிற்று. இந்த நகரமானது மிகப் பெரிய அளவிலான வணிக மற்றும் கலாசார ரீதியான தொடர்புகளை இந்தியாவின் தமிழ் மக்களுடன் பெற்றிருந்தது. குவான்சவ் நகரத்தின் சிவாலயமானது மங்கோலிய மன்னரான குப்ளைக் கானின் ஆணைப்படி, அவரின் நல்வாழ்வை கருத்தில் கொண்டே எழுப்பப்பட்டதாக வரலாறுகள் தெரிவிக்கின்றன. சேக்கஸாய்கான் என்பது மன்னர் குப்ளைக்கானின் மற்றொரு பெயராக இருந் துள்ளது.

மன்னர் குப்ளைக்கான், அந்த கால கட்டத்தில் மிகுந்த புகழ் அடைந்திருந்த செங்கிஸ்கானின் பேரன் என வரலாற்றுச் செய்திகள் தெரிவிக் கின்றன. குப்ளைக்கான் தான் பீஜிங் நகரத்தை நிர்மாணித்ததாகவும் பின்னர் அதனை சீன தேசத்தின் தலைநகரமாக அறிவித்ததாகவும் வரலாற்று செய்திகள் மேலும் இயம்புகின்றன. குவான்சங் சிவாலயம் அமையப் பெற்ற வளாகமானது திருக்காளீஸ்வரம் என்றும் ஆலயத்தில் அருளு கின்ற சிவன் திருக்காளீஸ்வரர் என்றும் அழைக்கப் படுகின்றார்.

இந்த அரிய தகவல்கள் தமிழ் சீன மொழிகளில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டில் காணப்படுகின்றது. குவான்சவ்வின் சிவாலயம் மன்னர் குப்ளைக்கானால் 1260ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. காலத்தின் கண்ணாடியாய் விளங்குகின்ற மேலே சொல்லப்பட்ட கல்வெட்டானது இப்போதும் ஆலயத்தில் காணப்படுவது சிறப்பான செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீன தேசத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில், பன்னிரண்டுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் இருந்ததாக நம்பப்படுகின்றது.

துறைமுக நகரமான குவான்சவ்வில் பெரிய அளவிலான தமிழ் வணிக இனம் சாங் மற்றும் யுவாங் வம்ச காலத்தில் வேரூன்றி இருந்ததாக அறியப்படுகின்றது. குவான்சங் நகரத்திற்கு அருகில் உள்ள செடியன் என்னும் சிறிய கிராமத்தில் ஒரு காலில் மற்றொரு காலை இறுத்திக் கொண்டு நான்கு கைகளுடன் காட்சியளிக்கும் அம்மனின் சிற்பம் காலடியில் ஒரு பூதம் படுத்திருக்கும் நிலையில் அமையப் பெற்றுள்ளது. ஆயினும் இந்த அம்மன் சீன தேசத்து அம்மன் இல்லை. ஆனால் இந்த பகுதியில் வசிக்கின்ற சீன மக்கள் இந்த அம்மன் கவுன்யின் அம்மன் என்பதாகும் என கருதுகின்றார்கள்.

எது எப்படியாயினும், தமிழர்களுக்கும் சீனர்களுக்கும் பண்டைய காலங்களில் வணிக, பண்பாட்டு மற்றும் கலைத்தொடர்புகள் இருந்து வந்துள்ளன என உறுதியாக தெரிகின்றது. குவான் சவ்வின் கடல் வணிக அருங்காட்சியகத்தை சார்ந்த வாங் என்பவர் ஆறாம் நூற்றாண்டிலேயே குவான்சவ் நகரத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்திருக் கிறார்கள் என்பதற்கான ஆதார ஆவணங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்கின்றார்.



## அடக்கம் தானாக வரும்!

எம்முடைய உண்மை நிலை பற்றிய சுயசிந்தனை தன்னைத்தானே உற்று நோக்கும் தன்மை இருந்தால் அடக்கம் தானாக வந்து விடும். செயலில் உயர்வு தானாக வந்துவிடும். பேச்சில் உயர்வு தானாக வந்து விடும். "அடக்கம் அமரருள் உய்க்கும்" என்று, திருவள்ளுவர் கூறியுள்ளார்.


போதி தர்மர் கூட முதலில் ஒரு பல்லவ அரசராக இருந்தார் என்றும் பின்னர் சீனாவிற்கு இடம் பெயர்ந்தார் என்றும் சொல்லப்படுகின்றது. சோழ அரசர்கள் தென்கிழக்கு ஆசியாவுடனான வர்த்தக உறவுகளை பெருமளவில் கொண்டிருந்த காரணத்தினால் வங்காள விரிகுடா கடல் பகுதியானது கூட சோழர் ஏரி என அழைக்கப்பட்டது.


இந்தியாவின் தமிழ்நாட்டில் பழனியில் நவ பாஷாணத்தாலான முருகன் சிலையை நிறுவிய போக சித்தர், அவருடைய குருவின் விருப்பப்படி "சித்த விஞ்ஞான"த்தை பரப்புதல் பொருட்டு சீன தேசத்திற்கு விஜயம் செய்ததாக நம்பப்படுகின்றது. போக சித்தரின் குருவான காளாங்கி சித்தரும் சீன தேசத்தை சார்ந்தவர் என்றும், ஆனால் அவர் தமிழ் நாட்டில் சித்தியடைந்து பதினெட்டு சித்தர்களில் ஒருவராக குறிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

தமிழ் மற்றும் சீன மக்களிடையே பண்டைய காலந்தொட்டு பாரம்பரியான வணிக தொடர்புகள் சிறப்புப் பெற்றிருந்ததாலும், இதன் காரணமாக தமிழ் மக்கள் சீனாவிற்கு அதிகளவில் குடிப் பெயர்ந்து வாழ்ந்ததாலும் துறைமுகப்பட்டினமான குவான்சவ்வில் நல்லதொரு சிவாலயம் உருப் பெற்றது. இது அந்த பகுதியில் வாழுகின்ற இந்து சமயிகளுக்கு ஆன்மீக ரீதியாகவும் பண்பாடு மற்றும் கலாசார ரீதியாகவும் ஒரு வரப்பிரசாதமாக விளங்குகின்றது என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை.

✍ அபிதாமணாளன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





[illegible]

# வள்ளலாரின் ஞானக் கல்வி

வள்ளல் பெருமானை உணருவது அத்தனை சுலபமல்ல. அவர் கவிஞர், சித்தர், அருளாளர்... மேலும் பூரணர், முழுமையானவர் அதுவரை நிலவி வந்த பல கருத்துகளுக்கு எதிரான புரட்சியாளராக அவர் விளங்கியதால் அவரை ஏற்க முடியாமல் தவித்தவர்களும் உண்டு. அவரது ஆதரவாளர்கள் என்று அறிவித்துக் கொண்டவர்களிலேயே அவரது கருத்துகளை முழுமையாக அறிய முடியாதவர்களும் உண்டு.

உண்மையில் அவர் தம்மை இறையருட் பெருவெளியில் கற்பூரம் போல் கரைத்துக் கொண்டார் என்பதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது. விளங்கச் சொல்கிறேன். ஐந்து பூதங்களால் ஆனது மனித உடல் இதில் மண், நீர், நெருப்பு அதிகம் அமைந்து இருப்பதே நமது உடல் அமைப்பு. ஆனால் ஞானி மட்டும் மண்ணைக் குறைத்து நீரைச் சுருக்கி, நெருப்பை ஒளியாக்கி, காற்றைப் பிரபஞ்சத்தில் பாய்ச்சி வெறும் ஆகாயமாகும் வித்தை அறிந்தவன் ஆகிறான். அதற்குச் சுத்த தேகம் அவசியம். அப்படி காயத்திலிருந்து ஆகாயத்திற்குப் பிரவேசிக்கும் கலைதான் வள்ளலாரின் ஞானக் கல்வி வள்ளல் பெருமான் ஒளியுடலாகத் தம் உடலைச் சமைத்தவர்.

விஞ்ஞான ரீதியாகச் சொல்வது என்றால் தொலைக் காட்சியில் தோன்றும் படங்களை ஒளிபரப்பும் போது புள்ளி புள்ளியாக (Digital) பிரித்து ஓரிடத்திலிருந்து அனுப்புகிறார்கள். பின்னர் வேறிடத்தில் புள்ளிகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே படமாக ஆகிவிடுகிறது. இவ்வாறு ஞானிகள் தங்களைப் பிரித்து அனுப்புவார்கள் என்று படித்திருக்கிறேன்.

ஒரு யோகியின் சுயசரிதை என்ற புத்தகத்தில் தமது குருநாதர் பாபா அவ்விதம் பலமுறை மறைந்து பலமுறை தோன்றி காட்சி தந்திருக்கிறார் என்று விளக்குகிறார் கிரிய யோகா ஆசிரியர்.

வள்ளலாரைத் தெரிந்தவர்கள் அவரைப் புரிந்து கொள்ளவில்லை ஆதரவாளர்கள் பலரோ அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்ன செய்வது? •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷபம்

துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை



எல்லாவற்றிலும் விடுதலையை விரும்பி செயல்படும் ரிஷப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வை பெறுவதும் பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன் அமர்ந்து முயற்சி ஸ்தானத்தை பெறுவது எல்லா வளமுடன் செயல்படுவது. திருப்பங்களை சந்தித்து வருவீர்கள்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களின் செயல்பாடுகளில் வளர்ச்சியை தரும். தொழிற் சங்க பிரதிநிதிகள் சந்திப்பு நல்ல பலனை தரும். தொழிலாளர் நலனின் அக்கறை எடுத்துக் கொண்டு செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் நற்பலன்கள் உண்டாகும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொதுவிடயங்களில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். சிலர் சொந்த பணத்தை செலவு செய்வீர்கள். உரிமையை மீட்க எழுச்சியுடன் செயல்படுவீர்கள். பொது நலன் கருதி சுமையை இறக்கி வைத்து சிலருக்கு உதவிகளை செய்வீர்கள்.

### வியாபாரிகளுக்கு

உங்களின் தொழில் ஸ்தானாதிபதி பார்வையால் வியாபாரத்தில் நன்மையும், குரு பார்வையால் பொருளாதார வளர்ச்சியும் பெறுவீர்கள். அடைக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மூலம் கூடுதல் வருவாயும் நண்பர்களின் உதவியால் மேலும் நற்பலனை பெறுவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையில் எதிர்பார்த்த வாய்ப்புகள் அமை யும். சிலருக்கு பதிய முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும் சுகஸ்தானங்களின் வளர்ச்சி உங்களால் ஆன உதவிகளையும் வாய்ப்புகளையும் பெற்று தருவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களின் முன்னேற்றம் நன்றாக இருக்கும் விளையாட்டு, பாடலாசிரியர்களின் வளர்ச்சி மேம்பாடு அடைய வேண்டி வரும். பொருளாதாரத்தில் நற்பலன்கள் பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

மருத்துவ கல்வி, சித்த வைத்தியம் கணிணி, அறிவியல் கல்வியில் வளர்ச்சியும் உயர்ந்த கல்வி மேன்மையும் பெறுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

10.09.2016 அதிகாலை சனி 05.28 முதல் 12.09.2016 திங்கள் பகல் 02.20 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்

சிறு விடயமாக இருந்தாலும் அதில் முழுமையான செயல்பாடுகளில் ஈடுபடுவீர்கள். உங்களுக்கு தெரிந்து எந்த தவறும் நடக்காமல் பார்த்து கொள்வீர்கள்.

### ரோஹிணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

எவ்வளவு சிரமங்கள் இருந்து வந்தாலும் அதனை சவாலாக எடுத்துக் கொள்வீர்கள். உங்களின் கடமையை செய்து பலனை பெறுவீர்கள்.

### மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

செயல்பாடுகளில் உருக்கமான செயல்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். சகோதரர்களின் சிரமங்களுக்கு உதவி செய்வீர்கள்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** பழுத்த வெண்மை, இளம் சிவப்பு, நீலம்

**அதிர்ஷ்ட திசைகள் :** தெற்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வெள்ளி, சனி



## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமை, சனிக் கிழமை காலை நேரத்தில் வலம்புரி விநாயகரை வணங்கி தேங்காய் எண்ணெய் தீபம் போட்டு வர தொழிலில் விருத்தியும் பொருளாதார வளர்ச்சியும் பெறுவீர்கள்.

## தந்திரமும் மந்திரமும்

தந்திரம் என்ற சொல்லுக்கு "வழி" என்று பொருள். மந்திரம் என்பது தந்திரத்தின் முக்கியப் பகுதியைக் குறிக்கும். யந்திரம் என்பதில் ஸ்ரீசக்கர வழிபாடு போன்றவை அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுர்வேத மருத்துவத்தின் முன்னோடியாய் பரிணமித்த

# ஸுஸ்ருதா மகரிஷி

அகத்திய முனிவர், திருமூல மகரிஷி போன்ற புராண காலத்து ரிஷி புங்கவர்கள் இறைவழிபாட்டையும் தவத்தையும் தம் பிறவி பயனாய் மேற்கொண்டதோடு, உலக சேமத்திற்காக வருங்கால சந்ததியர்கள் நோயின்றி ஆரோக்கியமாக வாழ்வதற்காக பல அரிய மருந்துகளையும் மருத்துவ முறைகளையும் கண்டு பிடித்து எழுதி வைத்துள்ளார்கள். குறிப்பாக திருமூலர் தமது நூற்றுக்கணக்கான மருத்துவ நூல்களின் மூலமாக மனித சமுதாயம் பயன் பெற எண்ணற்ற பல மருந்துகளை மூலிகை ஆராய்ச்சிகளின் மூலமாக கண்டுபிடித்து எழுதி வைத்துள்ளார். இந்த வரிசையில் மனித இனத்திற்கு பயன்படும் ஆயுர்வேத மருத்து வத்தின் முன்னோடியாய் ஸுஸ்ருதா மகரிஷி விளங்கியிருக்கின்றார்.

வடமொழியில் ஸுஸ்ருதா என்ற சொல்லுக்கு "நன்கு கேட்கப்பட்டது" என்ற பொருள் கிடைக்கின்றது. ஸுஸ்ருதா மகரிஷியின் மருத்துவ புகழுக்கு காரணமாய் இருப்பது அவரால் எழுதப்பட்ட "ஸுஸ்ருதா சம்ஹிதா". இந்தியாவின் மிக பழைமையான காவியமான மகாபாரதத்தில் விஸ்வாமித்திர மகரிஷியின் குமாரரே ஸுஸ்ருதா மகரிஷி எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. குஞ்சாலால் பிசகிரந்தா என்னும் எழுத்தாளர், ஸுஸ்ருதா மகரிஷி விஸ்வாமித்திர மகரிஷியின் வம்சத்தைச் சேர்ந்தவர் என்று எடுத்துக் கொள்வது தான் மிகவும் நலமாக இருக் கும் என்று கருத்து தெரிவித்துள்ளார். பண்டைய கால மகரிஷிகளால் படைக்கப்பட்ட மருத்துவ நூல்களில், ஸுஸ்ருதா சம்ஹிதா ஒரு மிகச் சிறந்த மற்றும் ஒரு முக்கியமான புராண காலத்து மருத்துவ நூலாக போற்றப்படுகின்றது. மேலும் இந்த நூலானது ஆயுர்வேத மருத்துவத்திற்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் விளங்குகின்றது. இந்த நூலில் மனிதர்களுக்கு ஏற்படக் கூடிய அனைத்து நோய்களுக்கும் மிகச் சிறந்த மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன. மேலும் இந்த நூலில் மருந்துகளால் உடனடியாக குணப்படுத்த முடியாத நோய்களுக்கு அறுவை சிகிச்சைகளும் மிகுந்த அளவில் தகுந்த பாதுகாப்பு ஆலோசனைகளுடன் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நூலை மொழிபெயர்த்த ஜி.டி.சிங்கால் என்பவர், ஸுஸ்ருதா சம்ஹிதாவின் ஈடு இணையற்ற கட்டமைப்பைப் பற்றி பெரிதும் புகழ்ந்துள்ளார். இந்த நூலில் அறுவை சிகிச்சைகள் பற்றிய விரிவான மற்றும் மிகச் சரியான யுக்திகள் தெரிவிக் கப்பட்டுள்ளதால், ஸுஸ்ருதா மகரிஷியை ஜி.டி.சிங்கால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "த்விஜன்"

தாயிடமிருந்து பெறுவது முதல் பிறப்பு. உபநயனத்தின் மூலம், பிரம்மோபதேசத்தின் மூலம் பெறுவது இரண்டாவது பிறப்பு என்ற பொருளில் "த்விஜன்" என்ற சொல் வழங்குகிறது. ஒரே பிறவியில் அமையும் மீண்டும் பிறத்தல் என்ற கருத்து த்விஜன் என்பதில் அடங்கியுள்ளது. இதையே "நவஜீவன்" என்று காந்திஜி குறிப்பிட்டார். மனிதன், அறத்தாலும் ஆன்மிகத்தாலும் ஒழுக்கத்தாலும் புது வாழ்வு வாழ வேண்டும் என்பதையே "த்விஜன்" என்ற சொல் உணர்த்துகிறது.

"அறுவை சிகிச்சையின் தந்தை" என்றே புகழ்கின்றார். ஸூஸ்ருதா மகரிஷியின் மருத்துவ ரீதியான அறுவை சிகிச்சை உபயங்கள் மற்றும், அதி உன்னதமான கண்டு பிடிப்புகளுக்காக அவரை இந்த உலகின் "முதல் பிளாஸ்ரிக் சர்ஜன்" என்றும் அழைத்தார்கள். மருத்துவ அடிப்படையிலான இந்த பெருமை அந்த காலகட்டத்தில் கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலும் கடின உழைப்பின் அடிப் படையிலும் ஸூஸ்ருதா மகரிஷிக்கு மட்டுமே கிடைக்கப் பெற்றது. இவை அனைத்தும் இந்த மகரிஷி மனித இனத்தின் மீது கொண்டிருந்த அலாதி அன்பையும் பாசத்தையும் எடுத்து ரைப்பதாக அமைந்தன.

ஸூஸ்ருதா மகரிஷிக்கு மருத்துவத்தின் மீது மாறாத பிடிப்பும் கண்டுபிடிப்புகளுக்கான உந்துதலும் ஏற்பட்டது அப்போது வார ணாசியில் அரசராக இருந்த திவோதசா என்பவரால் தான் என அறியப்படுகின்றது. மேலும் அரசர் திவோதசா மருத்துவ கடவுளான தன்வந்திரியின் வழித்தோன்றலாக விளங்கினார் என்றும் சொல்லப்படுகின்றது.

அப்போதைய பேரறிவுப் படைத்த கனவானான ருடால்ப் ஹொர்னே என்பவர் ஸூஸ்ருதா சம்ஹிதாவில் காணப்படுகின்ற பல விடயங்கள் 6ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சதபாத பிரம்மாவிலும் காணப்படுகின்றது என்ற கருத்தை தெரிவித்திருக் கின்றார்.

இருந்த போதிலும் கடந்த நூற்றாண்டில் மருத்துவ இலக்கியமானது மிகப் பரந்த அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. ஸூஸ்ருதா சம்ஹிதா ஸூஸ்ருதா மகரிஷிக்கு பின்பாகவும் சிலரது முயற்சியின் காரணமாக மேம்படுத்தப்பட்டது என்றும் இதன் கடைசி அத்தியாயமானது "உத்திர தந்த்ரா" என அழைக்கப்படுகின்றது எனவும் வர லாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. இன்றைய மருத்துவ உலகத்திற்கும் கூட ஸூஸ்ருதா மகரிஷி யின் அற்புதமான கண்டுபிடிப்புகள் ஏதோ ஒரு வகையில் அடிப்படையாகவே இருந்து வரு கின்றது.

ஸூஸ்ருதா மகரிஷியினால் உருவாக்கப்பட்ட மருத்துவ நூலான ஸூஸ்ருதா சம்ஹிதாவில் மொத்தம் 184 அத்தியாயங்களும், 1120 நோய்களுக்கான சிகிச்சை விளக்கங்களும் 700 மருத்துவ மூலிகைகள் பற்றியும், 64 தாது பொருள் தயாரிப்புகள் பற்றியும் மற்றும் 57 மிருகங்கள் தொடர்பான மருந்து தயாரிப்புகள் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நூலில் அறுவை சிகிச்சை பற்றிய உத்திகள் பெரிய அறுவை சிகிச்சைக்காகவும், மருத்துவ கீறல்களுக்காகவும் கண்டுபிடிப்புகளுக்காகவும், அன்னிய பொருள் வெளி கொணர்வதற்காகவும், பல் பிடுங்குவதற்காகவும், கட்டிகள் வெட்டி வெளியே எடுப்பதற்காகவும் இன்னும் பலவும் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த மருத்துவ நூலில் ஆறு விதமான எலும்பு பிசகல்கள், 12 விதமான எலும்பு முறிவுகள் பற்றியும் மற்றும் எலும்புகளின் அமைப்புகள் பற்றியும் விபத்து ஏற்படும் போது அவற்றை எவ்வாறு மறு சீரமைக்க வேண்டும்



எனவும் சொல்லப்பட்டுள்ளது நம்மை இன்றும் ஆச்சரியப்பட வைக்கின்றது.


ஸூஸ்ருதா மகரிஷி தம்முடைய மருந்து கண்டுபிடிப்புகளில் ஆயுர்வேத முறைகளை கையாண்டுள்ளதால் பக்க விளைவற்ற நல்ல மருத்துவத்திற்கு இவர் அன்றே அடிகோலியுள்ளார் என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளலாம்.

✍S.ஆகாஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை பொழியும் கண்ணனின் முகாரவிந்தம்!



**கோபியர் பாடலில் கண்ணனை இப்படி வேண்டினார்கள். கண்ணா! எமக்கு வரமும் இன்பமும் தரும் மாதவனே! நீ யசோதரையின் பிள்ளையாகிய கோபிகா நந்தனன் மட்டும் அல்ல. உலகைக் காக்கும் பொருட்டு பிரம்மதேவர் வேண்டுகோளுக்காக யாதவ குலத்தில் உதித்தவன். ஸ்ரீதேவியைக் கைப்பிடித்த உன் கையால் எங்கள் சிரசைத் தொட்டு அருள் புரிய வேண்டும்.**

"உலக துன்பத்தில் தவிப்பவர்களை உய்விப்பதும், பற்பல தீர்க்கதரிசிகளால் போற்றப்பட்டதும், கேட்ட மாத்திரத்தில் சர்வ பாவங்களும் நீங்கி மங்களத்தையும் சாந்தியையும் தரக் கூடியதுமான உன் கதை அமுதத்தை யார் இந்த உலகில் விரிவாகப் பேசுகிறார்களோ அவர்கள் மிகவும் கொடுத்து வைத்த புண்ணியசாலிகள்.

"மிகவும் வாத்ஸல்யமாகவும் பிரியமாகவும் இருந்து எம்மை ஏமாற்றுகிறவனே! உன் அன்புப் பார்வை, அழகுப் புன்னகை, உள்ளத்தைத் தொடும் இரகசிய இன்சொல் மற்றும் உள் விளையாட்டு இவைகளை நினைப்பதால் நெஞ்சு இனிக்கிறது. ஆயி னும் எங்கள் மனத்தைக் கலக்குகிறதே!

"பசுக்களை மேய்க்கச் செல்லும்போது உம் பாதங்கள் பருக்கைக் கல்லிலும் முள்ளிலும் படும் என்பதை நினைக்க எங்கள் நெஞ்சம் பதறுகிறது.

"மாலை வேளையில் மந்தகாச புன்னகை புரளும் இதழ்கள், உன் சுருண்ட கேசம், தூசிப் படலம் பரவிக் கிடக்கும் உன் திருமுக மண்டலத்தைப் பார்க்கப் பிரம்மன் கண்களைப் படைத்தான். சரி, அப்போது அந்தக் கண்களுக்கு அவன் இமைகளைச் சிருஷ்டித்தது அவன் அறியாமையாலோ என்றும் சிந்திக்க சேருகிறது!

"அச்சுதா அமரர் ஏறே என்று உன் கீத போதையில் மயங்கி கிரகத்தையும் அங்குள்ள பந்து மித்திரர்களையும் உதறி உன்னைத் தேடி வந்த பெண்களை வஞ்சக மாக நீ இருளில் தவிக்க விட்டுப் போவது என்பதை உன்னைத் தவிர வேறு யாரும் செய்ய மாட்டார்கள்.

"தாமரைப் பூப்பாதங்களை எங்கள் கடினமான ஸ்தனபாரங்களில் மெதுவாகத் தாங்கி வந்தோமே,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதைக் கொண்டு நீ வனத்திலே அலைய விடுவானேன்? இதனால் எம் உயிராகக் கருதும் உன் பாதம் நோக எங்கள் மனம் சஞ்சலமடையாதா?"

இப்படி இவர்கள் பாடி அழுததைக் கேட்டுப் பரந்தாமன் மஞ்சட் பட்டுடுத்தி, மயில்பீலி மகுடம் சூடி, குறுநகை மிளிர, மன்மதனுக்கு மன்மதனாக அவர்கள் கண் முன் தோன்றினான்.

கருணைக் கடலான கண்ணன் அவர்களை மேலும் விரகதாப வேதனையில் வருந்தக் கூடாது என்று மனம் இரங்கினான்.

ஒவ்வொருத்தியும் கிருஷ்ணன் கடைக்கண் பார்வை தங்களுக்குக் கிடைத்து விட்டது என்ற அகம்பாவத்தில் இருந்ததை அவர்கள் நன்கு உணர்ந்து விட்டார்கள் அல்லவா? ஆகையினால் பகவான் அவர்கள் மத்தியில் வேய்ங் குழலை இசைத்தார்.

கண்களை மூடியவாறு கண்ணன் திருவுருவத்தை மனக்கண்ணால் பார்த்து அவன் புகழை கோபியர் பாடிய போது கேட்ட குழல் இசையால் கண் திறந் தனர்.

கருணை பொழியும் முகாரவிந்தத்தோடு கண்ணனைக் கண்டு களித்தார்கள்.

"கண்ணா! கண்ணா! நீ கொஞ்சம்கூட இரக்கமின்றி இத்தனை நேரம் எங்கே போய் விட்டாய்? எங்களை நீ இப்படி நட்ட நடுநிசியில் தவிக்க விட்டுப் போவது அடுக்குமா? நீயே சொல்!" என்று மீண்டும் மீண்டும் பலர் கேட்கவே கிருஷ்ணன் பதில் சொன்னான்.

"நான் எங்கே போய் விட்டேன்? இங்குதானே இருந்தேன்?"

"இங்கே இருந்தாயா? சுத்தப் பொய்!"

"ஆம். நான் உங்களுடைய உள்ளங்களில்தானே இருந்தேன். எனக்கு ஒரு ஆலோசனை தோன்றியது. நம் எதிரில் ஒரேடியாகப் புகழும் இவர்கள் உள்ளங் களில் ஒளிந்து கொண்டால் எப்படி நான் இல்லாத போது பேசுகிறீர்கள் என்று கேட்கலாம் அல்லவா? அதனால் தான் அப்படி உங்கள் உள்ளங்களில் ஒளிந்திருந்தேன். அப்போதும் நீங்கள் என்னை வெளி உலகில் காணாமல் உங்கள் உள்ளங்களில் கண்டு களித்தீர்களா இல்லையா?"

"போதும் போதும் உன் ஒளியும் கண்ணா மூச்சி விளையாட்டு இனியும் எங்களை நீ இப்படி விட்டுவிட்டு மறைந்து விடாதே கண்ணா! எங்களால் உன்னை ஒரு கணமும் பிரிந்திருக்க முடியாது" என்று கோபியர்கள் பிரலாபித்தார்கள்.

உத்தமனைக் கண்டதும் உயிர்ப் புற்று அங்கங்கள் துடிப்பது போல இவ்வாறு பேசி ஒவ்வொருத்தியும் ஜீவன் துள்ளச் சிந்தை மகிழ்ந்தார்கள்.

ஒருத்தி கண்ணன் கைகளை பற்றினாள். ஒருத்தி சந்தனம் பூசிய அவனுடைய வாகுவைத் தன் தோளில் தாங்கினாள். மற்றொருத்தி அவனுடைய முகமண்டலத்தின் அழகைப் பருகியும், சாதுக்கள் அவன் திருவடி அமுது பெற்றும் திருப்தி அடையாதது போல் அதிருப்தியுற்றாள்.

இன்னொருத்தி எழிலார்ந்த கிருஷ்ணனைக் கண்ணுக்குள் வைத்துப் பூட்டி பின் அவரை ஆரத் தழுவிய பரவசத்தால் ஒரு யோகியைப் போல் ஆனந்தத்தில் திளைத்தாள்.

கண்ணன் தந்த தரிசனத்தில் களிப்புற்ற கோபியர்கள் தத்தம் உற்றார் உறவினரைப் பிரிந்த பிரிவாற்றாமைத் துன்பத்தை மறந்தார்கள். அந்த அற்புத தரிசனத்தால் மனக் கலக்கம் நீங்கினார்கள். சுருதிகளும் ஓலைச் சுவடிகளும் கர்ம காண்டத்தில் தேடி அலைந்த பரம்பொருளை ஞான காண்டத்தில் கண்டு மகிழ்ச்சியில் உச்சத்தை அடைந்தது போல, தங்கள் மனோரதம் நிறைவேறியதால் தங்கள் கொங்கையின் குங்குமக் குழம்பு படிந்த மேலாடைகளை ஆத்மபந்துவாகிய கிருஷ்ணனுக்கு ஆபரணமாக அளித்தார்கள்.

யோகியர் ஞானியர் உள்ளக் குகைகளில் வாழும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா மூன்றுலகு அழகும் ஒன்றாக உருவெடுத்து வந்தாற்போல அங்கு கோபிகள் மத்தியில் அமர, அவர்கள் பூஜித்து மகிழ்ந்தனர்.

(தொடரும்)

• ஏ.எஸ்.வழித்துணைராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லருட் கருணை புரியும் நல்லூர்க் கந்தப்பெருமான்



**முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகப்பெருமான் நல்லருட் கருணை புரியும் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 8.8.2016 இல் ஆனந்த மயமான கோலாகலத்துடன் ஆரம்பமானது. கலியுக வரதனாக எமக்குக் கண்கண்ட தெய்வமாக மிளிர்கின்ற வேலவன், வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் போக்கியருள்புரியும் நோக்கில் நல்லூரிலே எழுந்தருளி அருள்பாலிக்கின்றான்.**

எத்தனையோ முருகன் ஆலயங்கள் இருந்தும் இந்த நல்லூரில் மட்டும் ஏன் இத்தனை அடியார் கூட்டம்? நல்லூர் கந்தசுவாமி கோயிலில் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருக்கும் வேல் அருட் சக்திமிக்க அற்புத அதிசய வேலாகும். அங்கிருந்து அருளானது ஒளிவீசி. எங்கும் அருளைப் பரப்பி கதிர் ஒளி காட்டிக் கொண்டிருக்கின்றது.

முருகன் அடியார்கள் வேண்டுவதையெல்லாம் அள்ளி அள்ளிக் கொடுக்கும் அற்புத அதிசய சக்தி மிக்க வேல் அது. அருள் ஒளி வீசி கதிர் ஒளி பரப்பிக் கொண்டிருப்பதனால் பக்தர் குழாம் இங்கே படையெடுக்கின்றது.



ஸ்ரீசங்கபோதிபுவனேகபாகுஎன்ற அரசனால் கட்டப்பட்ட இந்தக் கோயில் நல்லூர் இராசதானியாக இருந்த காலத்தில் செங்கோல் செலுத்தி அரசோச்சி வந்த மன்னர்கள் தங்களுடைய வழிபடு தெய்வமாக முருகப்பெருமானைக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

கடைசியாக அரசாண்ட சங்கிலியன் மன்னனின் உருவச்சிலை இந்த நல்லூர் முத்திரைச் சந்தியடியில் வைக்கப்பட்டிருப்பதனால் இந்தக் கோயிலின் அருமையும் பெருமையும் சொல்லாமலே புலப்படுகிறது. அது மாத்திரமன்றி அழகான இராஜகோபுரத்துடனும் மணிக்கோபு ரங்களுடனும் அமைக்கப் பெற்றிருக்கும் இக்கோயில் தொன்றுதொட்டே வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயமாக நம்மிடையே புகழ்பரப்பி நம்பப்பட்டு வருகின்றது. மேலும் அடியார்கள் முற்றுமுழுதாக நம்பி வழிபடுகின்ற திருக்கோயிலாக இது மிளிர்கின்றது எனின் மிகையாகாது.

கைதொழுகின்ற அடியார்களின் கடுவினை யகற்றி அருள்புரிந்து நல்வாழ்க்கையையும் கொடுப்பதனால் இக்கோயிலில் எழுந்தளியிருக்கும் வேலா யுதம் சிறப்புப் பெறுகின்றது. சரித்திரப் புகழ்மிக்க இந்த ஆலயத்தில் வருடந்தோறும் ஆடி அமாவாசை வந்து ஆறாம் நாள் கொடியேற்றமாகி வருடாந்த மஹோற்சவம் இருபத்தைந்து நாட்களுக்கு வெகு விமரிசையாக நடைபெறும். ஒவ்வொரு வருடமும் நல்லூர் பரம்பரை அறங்காவலர் பெருமக்களால் மஹோற்சவத்துக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு யாழ்ப்பாண மாநகர சபையினரின் ஒத்துழைப்புடனும் அடியார்களின் தொண்டு அடிப்படையிலான சேவையும் ஒருங்கிணைக்கப்பட்டு திருவிழா நடைபெற்று வருகின்றது. மேலும் செங்குந்தா பரம்பரையினர் எனப்படுபவர்களால் கொடியேற்றத்துக்கு முதல்நாள் நல்லூர் பருத்தித்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை வீதியிலமைந்துள்ள சட்டநாதர் கோயில் வீதியிலுள்ள கதிர்காம பழனிமுருகன் கோயிலிலிருந்து திருவிழாவுக்கான கொடிச்சீலை இங்கு கொண்டுவரப்படுகின்றது. ஓர் அழகான சிறிய சித்திரத் தேரினிலே வைத்து எடுத்துவரப்படும் கொடியேற்றத் திருவிழாக் கொடிச் சீலை பக்தர் குழாம் சூழ்ந்து வர முன்னே நாதஸ்வர இசை மங்களமாய் முழங்க பக்திபூர்வமாக நடைபெறும் அழகே தனி. இக்கோயிலில் எங்குமில்லாத ஒரு தனிப்பட்ட பெருமையுடன் கூடிய சிறப்பு யாதெனில் நேர ஒழுங்குக் கட்டுப்பாடேயாகும். சரியாக 6 மணி அடிக்கப் பூஜை ஆரம்பமாகும் என்று சொன்னால் நம்பிப் போகலாம். எந்தவிதமான குறைபாடுகளுமின்றி சரியான நேரத்துக்குப் பூஜையாகி எம்பெருமான் வீதி வலம் வருகின்ற அற்புதமான நல்லருட்காட்சியைக் காணலாம். இருபத்தைந்து நாள் திருவிழாவும் இருபத்தைந்து விதவிதமான வாகனங்களில் முருகப் பெருமான் மாலை வேளையில் மருந்து போன்று விளங்கும் சூரிய ஒளி வெயில் எறிக்க வீதி வலம் வருகின்ற அருள்மயமான காட்சியின் அருமை சொல்லில் அடங்காது.

இந்த இரவுத் திருவிழாவைக் காண்பதற்கு அடியார் பெருமக்கள் சரியான நேரத்துக்கு ஆலயத்தில் சமுகமளித்து பக்தி பூர்வமாக முருகனை வழிபாடியற்றும் அழகு தனிப் பெருமையையுடையது. ஒவ்வொரு திருவிழாவும் ஒவ்வோர் அழகுடனே சிறப்பாக நடைபெறுவதனால் அடியார்கள் தினசரி இங்கே வந்து குழுமுவார்கள். மிகுந்த ஜனத் திரள் மத்தியிலே நெருக்கமான நெரிசலிடையேதான் அழகன் முருகனைக் காணலாம். இருபத்தைந்து நாள் திருவிழாவில் பகல் திருவிழா உள் வீதியிலும் மாலைத் திருவிழா அதாவது இரவுத் திருவிழா வெளி வீதியிலுமாக இடம்பெறும்.

வழிபடும் அடியார்களின் வசதி கருதி ஆலயச் சூழலில் பல முன்னேற்பாடுகள் செய்யப்பெற்றிருக்கும். தினசரி திருவிழா நாள்களில் வேல் நடுவிலே வர இரு பக்கமும் வள்ளியும் தெய்வானையும் காட்சிதர முருகன் வீதி வலம் அருங்காட்சி






இடம்பெறும். இத்திருவிழா நடைபெறும்போது வீதி பஜனைகளும் பக்தி பூர்வமாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இது எல்லாவற்றிற்கும் மேலாக நல்லூரானின் பத்தாம் திருவிழா மஞ்சம். இந்த மஞ்சமானது அழகான மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களால் இழுத்து வரப் படுவது சிறப்பம்சம். மேலும், இந்த வருடாந்த மஹோற்சவத்தில் பூச்சப்பறம், தங்க ரதம், வெள்ளி மயில், வெள்ளிக்கடா, மாம்பழத் திருவிழா, குதிரை வாகனத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா, பூங்காவனம் என்று பல்வேறு விழாக்களும் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

அது ஒருபுறமிருக்க, நல்லூர் தேர்த்திருவிழா நாள் ஒரு புனித புண்ணியப் பேறாகும். யாழ். குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் அடியார் பெருமக்கள் இந்த நல்லூர் வந்து குழுமுவர். முருகனும் நன்கு வரவேற்றுத் தம்முடைய அடியார்களுக்கு அருள்புரியத் தயங்கவேமாட்டேன் என்று புன்சிரிப்புத் தவழ வீதிவலம் வந்து காட்சி கொடுப்பான். ஆதலால் இந்த ஆண்டு பல்வேறு வகைகளில் தலைமைப் பீடம் ஏற்று முருகனைக் கரங்குவித்து, சிந்தித்து, வந்து நின்று சேவிப்பது கடனாகும்.

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர் காக்கும் தெய்வப்பணி!

**நல்ல செயல்கள் நல்ல பலனை விளைவிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. அது மட்டுமின்றி நல்ல சிந்தனைகளே நல்ல பலனை விளைவிக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. இந்த விவசாயியின் கதையைப் படிக்கும் போது, அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய பூசலார் நாயனாரின் நினைவு வருகிறது. அதோ நம் முன்னோர்கள் மானச பூஜையை எமக்கு வகுத்து அளித்திருப்பதற்கான காரணமும் புரிகிறது.**

அது ஒரு சிற்றூர் அந்த ஊரிலே புகழ்பெற்ற ஒரு ஜோதிடர் இருந்தார். ஒரு நாள் மாலை நேரத்தில் அவரிடம் தம் ஜாதகத்தைப் பார்க்க ஓர் ஏழை விவசாயி வந்தார். அவர் தமது ஜாதகத்தை ஜோதிடரிடம் கொடுத்தார்.

ஜாதகத்தைச் சோதித்துப் பார்த்ததும் ஜோதிடருக்குத் தயக்கம் ஏற்பட்டது. காரணம், அந்த விவசாயிக்கு அன்றைய இரவே எட்டு மணிக்கு மரணம் நேரக்கூடிய ஒரு கண்டம் இருந்தது. ஜோதிடர் விவசாயியிடம் நேரிடையாக எதுவும் சொல்ல விரும்பாமல், "ஐயா, இன்றைய தினம் எனக்கு முக்கியமான ஒரு வேலை இருக்கிறது. ஏதோ வேலைகளுக்கு இடையில் அதை நான் மறந்தே போய் விட்டேன். தங்கள் ஜாதகம் எம்மிடமே இருக்கட்டும் நாளைக் காலையில் தாங்கள் எம்மை வந்து பாருங்கள்" என்று சொல்லி மழுப்பி விட்டார். ஜோதிடர் சொன்னதை உண்மை என்றே நம்பிய விவசாயி, மறுநாள் காலையில் வந்து பார்ப் பதாகச் சொல்லிச் சென்றார்.

விவசாயி சென்றதும் ஜோதிடர் தம் மனைவியை அழைத்து, "இப்போது எம்மைப் பார்ப்பதற்கு ஒருவர் வந்தாரே, அவருடைய ஆயுள் இன்று இரவோடு முடியப் போகிறது. அதை அவரிடம் தெரிவிக்காமல், நாளைக்கு வந்து பாருங்கள்" என்று சொல்லி அனுப்பிவிட்டேன். அவர் உயிருடன் இருந்தால்தானே நாளைக்கு எம்மை வந்து பார்க்க முடியும்" என்று சொன்னார்.

ஜோதிடரின் வீட்டிலிருந்து புறப்பட்ட விவசாயி, பக்கத்திலிருந்த தமது கிராமத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார். வழியிலேயே மாலை சாய்ந்து இருள் சூழ ஆரம்பித்தது. அது மழைக் காலமாக இருந்ததனால் மழைத் தூறல் வேறு போட ஆரம்பித்து விட்டது. விரைவில் இடியுடன் கூடிய பெரு மழை கொட்ட ஆரம்பித்தது.

அப்போது விவசாயி ஒரு காட்டுவழியாகச் சென்று கொண்டிருந்தார். மழைக்கு ஒதுங்குவதற்குச் சுற்றும் முற்றும் பார்த்த அவர் கண்களுக்குச் சற்றுத் தொலைவில் பாழடைந்த சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் ஒன்று தட்டுப்பட்டது. விவசாயி ஓடோடிச் சென்று சிவன் கோயிலின் முன்னால் இருந்த மண்டபத்தில் ஒதுங்கிக் கொண்டார். மண்டபத் தில் நின்று கொண்டிருந்த அவர் கோயிலின் பாழடைந்த நிலை யைக் கண்டு பெரிதும் மனம் வருந்தினார். "ஹா! கோயிலின் கர்ப்பக்கிருகமும் மண்டபமும் இந்த அளவுக்குக் கேட்பாரற்றுப் பாழ்பட்டுப் போயிருக்கின்றனவே ஆங்காங்கே ஆலமரமும் அரசமரமும் அல்லவா முளைக்க ஆரம்பித்திருக்கின்றன! என்னிடம் போதுமான பணம் இருந்தால் இந்தக் கோயிலைப் புதுப்பிக்கும் வேலையைத்தான் முதலில் செய்வேன்" என்று நினைத்துக் கொண்டார்.



அதோடு அவர் சிந்தனை மேலும் விரிந்தது. அந்தச் சிவன் கோயிலைப் புதுப்பிப்பதாக மானசீகமாக நினைத்துக்கொண்டார் கோபுரம், உட்பிரகாரங்கள், மண்டபங்கள் ஆகியவற்றை அமைத்தார். கும்பாபிஷேகத்துக்கு வேதியர் புடைசூழ கலசம் ஊர்வலமாகக் கொண்டு வரப்படுவதாகக் கற்பனை செய்தார். பாழடைந்த கோயிலில் நின்றபடியே மானசீகமாகக் கும்பாபிஷேகத்தை விமரிசையாக நடத்திக் கர்ப்பக்கிருகத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கினார்.

இத்தகைய சிந்தனைகளில் தம்மை மறந்து ஈடு பட்டிருந்த விவசாயி, தாம் நின்று கொண்டிருந்த மண்டபத்தைத் தற்செயலாக ஏறிட்டு நோக்கினார். அங்கே சரியாக அவரது தலைக்கு மேலே பாழடைந்த மண்டபத்தின் ஒரு பகுதியிலிருந்து மழையின் குமுறலைக் கேட்டு வெளிவந்த ஒரு கருநாகம் படமெடுத்த நிலையில் அவரைக் கொத்த தயாராக இருந்தது! அதைக் கண்டாரோ இல்லையோ, "ஐயையோ? என்று விவசாயி அலறிப்புடைத்துக்கொண்டு மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்து விட்டார். அதே சமயத்தில் மழையால் மிகவும் தளர்ந்திருந்த பாழடைந்த மண்ட பம் திடுதிடுவென்று இடிந்து தரை மட்டமாயிற்று. அப்போது இரவு மணி எட்டு, மழையும் ஓய்ந்தது.

விவசாயி தம் வீடு திரும்பினார். மறுநாள் சென்று ஜோதிடரைச் சந்தித்தார். ஜோதிடர் திகைத்தார். அவர். "நாம் ஜோதிடக் கணக்கில் தவறி விட்டோமோ?" என்று கருதி ஜோதிட நூல்களை எடுத்துத் துல்லியமாக ஆராய்ந்தார். கணக்கு சரியாகவே இருந்தது. "இப்படிப்பட்ட கண்டத்திலிருந்து ஒருவன் தப்ப வேண்டுமானால் அவனுக்கு ஒரு சிவன் கோவிலைக் கட்டி முடித்துக் கும்பாபிஷேகம் செய்த புண்ணியம் இருக்க வேண்டும்" என்று ஜோதிட நூலில் குறிப்பிடப்பட் டிருந்தது.

"பாவம்! ஏழை விவசாயியால் கோயிலை கட்டிக் கும்பாபிஷேகமா நடத்த முடியும்?" என்று நினைத்தபடியே ஜோதிடம் அறிவித்த எல்லா விவரங்களையும் விவசாயியிடம் தெரிவித்தார்.

விவசாயி முதல் நாளிரவு தமக்கு நேர்ந்த அனுபவங்களை ஜோதிடரிடம் விளக்கமாக எடுத்துச் சொன்னார். பிறகு ஜோதிடர் விவசாயிக்கு மேற்கொண்டு சொல்ல வேண்டிய ஜோதிடத்தைக் கூறி அனுப்பினார். தெய்வப்பணி பற்றிய கற்பனை கூட எவ்வாறு ஆயுளுக்கான இடையூறுகளை நீக்குகிறது என்பதை இந்த கதை அறிவிக்கிறது.

## அவரவர் நிலையில் அவரவர் பெரியவர்!



முறையாக அனுஷ்டிக்கப்படும் இல்லறம், முறையாக அனுஷ்டிக்கப்படும் துறவறம் ஆகிய இரண்டுமே உயர்ந்தவை, பாராட்டுவதற்கு உரியவை. இதைப் பற்றி சுவாமி விவேகானந்தர் தமது "கர்மயோகம்" என்ற நூலில், 'அவரவர் நிலையில் அவரவர் பெரியவர்' என்று குறிப்பிட்டிருக்கிறார். கடவுளை அடைவதுதான் மனித வாழ்க்கையின் ஒரே இலட்சியம். இந்த இலட்சியத்தை அடைவதற்கு உரிய சாதகமான சூழ்நிலை, பொதுவாக இல்லறத்தவனை விடத் துறவிக்குச் சற்றுக் கூடுதலாக உண்டு, அவ்வளவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரம்மபுத்திரா என்னும் புனித நதி

புனித ஏரியான மானஸரோவரில் உற்பத்தியாகும் பிரம்மபுத்திரா பலநூறு மைல்கள் ஸேஸ்க்போ என்ற பெயருடன் திபெத்தில் பாய்கிறது. இந்தியாவின் கிழக்கு மாநிலமான அருணாசலப் பிரதேசத்தின் வழியாக இந்தியாவினுள் நுழைகிறது. உலகின் மற்ற மிக நீண்ட ஆறுகளான சிந்து, மிஸ்ஸிஸிபி, நைல் ஆகியவற்றோடு ஒப்பிடக்கூடிய அளவுக்கு மிக நீண்ட ஆறு பிரம்மபுத்திரா.

ஆசியாவில் மிகச் சிறந்து ஆறு. 3000 கி.மீ. பயணம் செய்து வங்காளவிரிகுடாவை அடையும் பிரம்மபுத்திரா, மேற்கு திபெத்தில் கைலாச மலைச்சரிவில் மானஸரோவர் ஏரி யில் உற்பத்தியாகிறது. திபெத்தின் மிகச் சிறப்பான ஸேங்க்போ என்ற ஆறு கிரேட் ஹிமாலய மலைத்தொடருக்கு வடக்கில் உள்ள மிக உயரமான திபெத்திய பீடபூமியில் கிழக்கில் குறுக்காக வெட்டி தன் வழியில் பல கால்வாய்களாகப் பிரிந்து ஓடி வருகிறது. இமய மலையின் உயரத்திலிருந்து விழும் போது தனக்குள்ளேயே திரும்பி மிக ஆழமான பள்ளத் தாக்கை ஏற்படுத்துகிறது. அந்த இடத்தை யாரா லும் படகு மூலமாக அடைய முடிவதில்லை. இறுதியாக, தெற்கில் திரும்பி அருணாசலப் பிரதேசத்தில் ஓடி "திஹாஸ்" என்று அழைக்கப் படுகிறது. பாசி காட்டிற்குப் பின்னால் திபாங், மற்றும் லோஹித்துடன் இணைந்து இறுதியில் பிரம்மபுத்திராவாக மாறுகிறது.

இப்போது பிரம்மபுத்திரா ஆற்றில் பல வகையான சாகச நீர் விளையாட்டுகளும் நடத்தப்படுகின்றன. இது நாள் வரை இத்தகைய நீர் விளையாட்டுகளில் இந்தியா அவ்வளவாகப் பங்கேற்கவில்லை. ஆயினும் பிரம்மபுத்திராவில் நடக்கப்போகும் இந்த நீர் விளையாட்டுகளால் இந்தியாவிற்கு உலக அளவில் சிறப்பான பெயர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெரியோருக்குச் செய்யும் வணக்கம் இறைவனையே அடைகிறது!

பெரியவர்கள் பெரிய ஒரு காந்தம் போன்றவர்கள். சிறியவர்கள் சிறிய ஒரு காந்தம் போன்றவர்கள். ஒரு காந்தத்தை மற்றொன்றுடன் சேர்ப்பது போல, காலுடன் தலை சேர்க்க வேண்டும். இதனால் நம்மையறியாமல் நம்முள் ஆன்மீகச் சக்தி ஊடுருவிப் பாயும். இதை அவமானம் என்று நினைப்பவர்கள் அதுபோன்று வணங்க வேண்டியதில்லை.

இந்தியாவின் அருணாசலப் பிரதேசத்தில் நுழையும் போது இந்த பிரம்மபுத்திராவிற்கு "சியாங்" என்று பெயர். சமவெளியை அடைந்த பிறகு திஹாஸ் என்று பெயர். 35 கி.மீ. ஓடிய பிறகு திபாங், லோஹிட் என்ற இரு பெரிய ஆறுகள் இதனுடன் இணைகின்றன. இம்மூன்றும் இணையும் சங்கமத்திற்குப் பிறகு, இது மிகவும் அகலமாகிறது. இப்போது இதற்கு பிரம்மபுத்திரா என்று பெயர். அஸ்ஸாம் முழுவதும் ஓடும் இந்த ஆறு சில இடங்களில் 10 கி.மீ. அகலமும் கொண்டது. திப்ருகர், லகிம்பூர் மாவட்டங்களுக்கிடையில் வடக்கு கெக்கூயா, தெற்கு பிரம்மபுத்திரா என்ற இரு கால்வாய்களாகப் பிரிகிறது. பின்னர் 100 கி.மீக்குப் பிறகு மஜீலி தீவுக்கருகில் இணைகின்றன. கௌஹாத்திக்கு அருகில் மண்டல புனிதத்தலமான ஹாஜோ அருகில் ஷில்லாங் மீட்பூமியின் பாறைகளை வெட்டிக் கொண்டு 1 கி.மீ. அகலத்தில் ஓடுகிறது. பிரம்மபுத்திராவின் முதல் புகையிரத சாலை பாலம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷில் பிரம்மபுத்திரா இரண்டாகப் பிரிந்து ஓடுகிறது. கீழ்கங்கைப் பகுதியில் பத்மா என்ற பெயருடனும் தென்கிழக்கில் பிரம்மபுத்திரா என்ற பெயருடனும் ஓடி மேக்னாவில் சேருகிறது. கங்கையும் பிரம்மபுத்திராவும் இணையும் இந்த பத்மா ஆற்றின் டெல்டாபகுதி உலகிலேயே மிகப் பரந்த ஆற்றுப்படுகை என்று கருதப்படுகிறது. இந்தியா சுதந்திரம் அடையும் வரை பிரம்மபுத்திரா முக்கிய நீர் வழிப் போக்குவரத்தாகப் பயன்பட்டது. சடியா மற்றும் துப்ரிக்கு இடையிலுள்ள பகுதி தேசிய நீர்வழியாக 1990இல் அறிவிக்கப்பட்டது. வியாபாரப் பொருட்கள் இதன்மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆற்றில் சுற்றுலாப் பயணம் செய்வது சமீபகாலமாக பிரசித்தி பெற்று வருவதால் கப்பல் பயணம் பிரபலமாகி வருகிறது.



✍ டொக்டர் லக்ஷ்மி விஸ்வநாதன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பைரவர் வழிபாடும் தோஷ நிவர்த்தியும்



**ஏழரையாண்டுச் சனி, அஷ்டமத்துச் சனி, சனிசுவரனால் ஏற்படும் கஷ்டங்கள் நீங்க = மக்கள் பயப்படக்கூடிய கிரக நாயகர்களின் முன்னணியில் இருப்பவர் சனி பகவான்.**

சூரியன் மகனான சனீஸ்வரன் தன்னுடைய அண்ணன் யமதர்மனால் அலட்சியப்படுத்தப்பட்டு கௌரவக் குறைவை அடைந்தார். அவருடைய அருளால் நவக்கிரகங்களில் ஒருவராக கிரகப் பதவி கிடைக்கப் பெற்றார். பைரவர் சனீசுவரனுக்கு குருவாக விளங்கி அருள் பாலிக்கின்றார். பைரவர், பக்தர்களை கொடுமைப்படுத்துவதில் விருப்பமில்லாதவர் சனிபகவான். விதிப்பயன் காரணமாக கடுமையை காட்டும் பொழுது பைரவர் அருள்புரிந்து காப்பாற்றி விடுவார். பைரவருக்குச் செய்ய வேண்டிய பூசை யின் மூலம் உரிய பரிகாரங்களைச் செய்து சனியின் கொடூரப் பிடியிலிருந்து விடுபடலாம்.

அர்த்தாஷ்டம சனி தரும் தொல்லைகள் விலக வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் பைரவருக்கு வெண்தாமரை மலர் மாலை அணிவித்து புனுகு பூசி சாம்பல் பூசணி (வெண்பூசணி) சாம்பார் கலந்த சாதம், அதிரசம் படையலிட்டு அர்ச்சனை செய்து வந்தால் அர்த்தாஷ்டம சனியால் ஏற்படக்கூடிய தொல்லைகள் விலகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டமச் சனியின் கொடுமை விடுபட சனிக்கிழமை நாளில் இரவு 7.30 மணியிலிருந்து 9.00 மணிக்குள் பைரவருக்கு கறுப்பு பட்டு அணிவித்து வடைமாலை அணிவித்து புனுகு பூசி கறிவேப்பிலை சாதம் படையலிட்டு இரும்பு அகல்விளக்கில் நல்லெண்ணெயை தீபமிட்டு அர்ச்சனை செய்து வந்தால் அஷ்டமச் சனியால் ஏற்படும் பாதிப்புகள் நீங்கும்.

## நாரதர்!

மகாயாழ் வாசிக்கும் நிலையில் அமைந்த நாரதர் சிலைகள், தமிழ்நாட்டுப் புராதன கோயில்களில் இருக்கின்றன. அவற்றில் அவர் தாடியும் மீசையும் கொண்டவராகவே காணப்படுகிறார். எனவே இதையே நாம் சாஸ்திரங்களின் கருத்துக்கு உட்பட்ட உருவம் என்று கொள்ள வேண்டும்.



ஏழரையாண்டுச் சனியின் ஆதிக்கம் குறைய ராசிக்கு 12ஆம் இடத்தில் இரண்டரை வருடம், ராசியில் இரண்டரை வருடம் என ஏழரையாண்டுகள் தன் கட்டுப்பாட்டிற்குள் மனிதனை சிக்க வைத்து ஆட்டிப் படைக்கும் சனி பகவான் பிடியிலிருந்து தப்பிக்க ஊர்விட்டு ஊர் போவது, மனையாள் மதிக்காதது, பிள்ளைகள் சொன்னபடி கேட்காதது, தொழில் நஷ்டம், பணக் கஷ்டம், அவமானம் போன்ற அனைத்து இன்னல்களிலிருந்தும் தப்பிக்க சனிக்கிழமை நாளில் ராகு காலத்தில் பைரவருக்கு வடைமாலை, வெற்றிலை மாலை அணிவித்து, புனுகு பூசி கறிவேப்பிலை சாதம், பாகற்காய் கூட்டு, பால் பாயசம் படையலிட்டு, இரும்பு அகல் விளக்கில் இலுப்பை எண்ணெய் தீபமிட்டு அர்ச்சனை செய்து வர ஏழரைச் சனியின் பிடியிலிருந்து விடுபடலாம்.

ராசிக்கு 12இல் சனியிருக்கும் போது தேங்காயில் நெய் தீபம் ஏற்றவும். ராசியில் சனி இருக்கும் போது எலுமிச்சை பழத்தில் நல்லெண்ணெய் தீபம் ஏற்றவும். ராசிக்கு 2 இல் சனி இருக்கும் போது சாம்பல் பூசணியில் தேங்காய் எண்ணெய் தீபம் ஏற்றவும்.

ஒவ்வொரு கிழமையன்றும் பைரவரை வழிபடுவதால் ஏற்படும் தோஷ நிவர்த்திகள்.

**திங்கட்கிழமை** வில்வ அர்ச்சனை செய்திட சிவனருள் கிட்டும் திங்கட்கிழமை அல்லது சங்கட ஹர சதுர்த்தியன்று பைரவருக்கு பன்னீர் அபிஷேகம் செய்து சந்தன காப்பிட்டு புனுகு பூசி, நந்தியாவட்டை மலர் மாலை அணிவித்து, வழி பட்டு வந்தால் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் வில கும்.

**திங்கட்கிழமையன்று** வரும் சங்கடஹர சதுர்த்தியன்று பைரவருக்கு மஞ்சள் நிற பூக்க ளாலான மலர் மாலை அணிவித்து ஜவ்வரிசிப் பாயசம் அன்னப்படையல் இட்டு அர்ச்சிக்க தாயாரின் உடல் நலனில் முன்னேற்றம் உண்டா கும்.

**செவ்வாய்க்கிழமை** மாலையில் மிளகு தீபம் ஏற்றி வழிபட்டு வந்தால் இழந்த பொருளை திரும்பப் பெறலாம்.

**செவ்வாய்க்கிழமை** இராகு வேளையில் (மாலை 3–4.30) பைரவருக்குச் செவ்வரளி மாலை சாத்தி துவரம் பருப்புப்பொடி சாதம் செம்மாதுளம் பழம் படையலிட்டால் சகோதரப் பகை நீங்கி ஒற்றுமை நிலைக்கும்.

எதிர்ப்புகள் அகலவும் வெற்றிகள் குவியவும் செவ்வாய்க்கிழமை நாளில் பைரவருக்கு சிவப்பு குங்குமம் கலந்த நீரால் அபிஷேகம் செய்து, எலுமிச்சம் பழமாலை அணிவித்து. புனுகு பூசி எலுமிச்சை பழத்தில் நெய் தீபமிட்டு வேக வைத்த பீட்ருட் கலந்த சாதம், மாதுளம் பழம், ஜிலேபி படையலிட்டுஅர்ச்சனை செய்து வர எதிர்ப்புக்கள் அகன்று வெற்றிகள் குவியும்.

**புதன்கிழமை** மாலை பைரவருக்கு மரிக்கொழுந்து மாலை சாத்தி புனுகு பூசி பாசிப் பருப்புப் பொடி கலந்த அன்னம் பாசிப் பருப்புப் பாயசம் படையல் செய்ய மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் பெறுவர்.

**புதன்கிழமை** காலை 10.30 முதல் 12க்குள் பைரவருக்குச் சந்தன காப்பு செய்து மரிக்கொ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழுந்து மாலை சூட்டி பாசிப்பயறு பாயசம், கொய்யாப்பழம், பாசிப்பருப்புப் பொடி சாதம் படைக்க வியாபாரத்தில் அமோக வளர்ச்சி உண்டாகும்.

**புதன்கிழமை** நெய்தீபம் ஏற்றி வழிபட்டால் பூமி லாபம் கிட்டும்.

**வியாழக்கிழமை** வியாழக்கிழமை நாளில் காலை 7.30 மணிக்குள் பைரவருக்கு சந்தனக் காப்பு செய்து மூடி மந்திரவித்து எனப்படும். முந்திரியால் மாலை அணிவித்து புனுகு பூசி முந்திரிப் பருப்பு, கொண்டைக்கடலை சுண்டல், அன்னம் படையலிட்டு அர்ச்சனை செய்து அன்னதானம் வழங்கினால், பைரவர் திருவருளால் விரைவில் குழந்தை பாக்கியம் ஏற்படும்.

சந்தான பாக்கியம் பெற குழந்தை பாக்கியம் இல்லாத கணவன் மனைவியர் ஆறு தேய்ப்பிறை அஷ்டமியில் பைரவருக்கு சிகப்பு அரளியால் பைரவ சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் விரைவில் சந்தான பாக்கியம் கிடைக்கும்.

**வெள்ளிக்கிழமைகளில்** மாலை நேரங்களில் வில்வ இலைகளினாலும், வாசனை மலர்களாலும், பைரவருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் வறுமை நீங்கி, செல்வம் பெருகும்.

**வெள்ளிக்கிழமை** ராகு வேளையில் பைரவருக்கு சந்தனக்காப்பு செய்து, தாமரை மலர் மாலை சூட்டி அவல் கேசரி, பானகம், சர்க்கரை பொங்கல் படைத்து, அர்ச்சனை செய்தால் மன திற்குப் பிடித்த வகையிலும் தடையின்றியும் திருமணம் கைகூடும்.

**வெள்ளிக்கிழமை** ராகு காலத்தில் பைரவருக்கு சந்தனகாப்பு செய்து புனுகு பூசி, ரோஜா மாலை சூட்டி, வெள்ளி, ஆபரணங்களை அணிவித்து, சர்க்கரை பொங்கல் படைத்து அர்ச்சனை செய்தால் கலைத்துறையில் சாதனை படைக்கலாம்.

**சனிக்கிழமை** நாளில் ராகு காலத்தில் பைரவருக்கு நாகலிங்கப் பூமாலை அணிவித்து புனுகு பூசி, எள் கலந்த சாதம், பால் பாயாசம் கருநிற திராட்சை நைவேத்தியமாக படைத்து அர்ச்சனை செய்தால் விஷ பயம் நீங்கும்.

**ஞாயிற்றுக்கிழமை** ராகு காலத்தில் பைரவருக்கு உருத்திராபிஷேகமோ அல்லது விபூதி அபிஷேகமோ செய்து வடைமாலை சாற்றி சகஸ்ரநாம அர்ச்சனை செய்து வழிபடுவதால் திருமணமாகாத ஆண், பெண் இருபாலாருக்கும் விரைவில் திருமணம் நடைபெறும்.

வழக்குகளில் வெற்றிபெற, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் அகல பைரவசகஸ்ரநாமத்தை ஒன்பது முறை பைரவருக்கு அர்ச்சனை செய்து அவரவர் வசதிக்கேற்றபடி தயிர் அன்னபள்ளயம் (தயிர் அன்னப் பாவாடை) தேங்காய், தேன் படைத்து வழிபட்டால் வழக்கில் வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும் பங்குதாரர்களுக்குள் ஒற்றுமை நிலவும். எதிரிகளால் ஏற்படும் தொல்லை மற்றும் பில்லி சூனியம் போன்ற மந்தி



ரப்பிரயோகத்தால் ஏற்படும் தொல்லைகள் அடியோடு அகலும்.

வளர்பிறை அஷ்டமியில் சதுர்கால பைரவருக்கு சொர்ண புஷ்பம் அல்லது 108 ஒரு ரூபா காசுகள் வைத்து அர்ச்சனை செய்து அந்தக் காசுகளை அலுவலகம் அல்லது வீடுகளில் பணப்பெட்டியில் வைத்து பூஜித்து வந்தால் செல்வம் குறையாது செழிக்கும். தினமும் காலையில் ஸ்ரீசொர்ணாஆகர் ஷண பைரவாய நமஹ என்று ஜெபித்தால் நன்மை பயக்கும்.

பைரவ தீபம் மிளகை சிறுதுணியில் மூட்டையாகக் கட்டி அகலில் வைத்து நெய் அல்லது நல்லெண்ணெயை ஊற்றி தீபம் ஏற்றுவது பைரவ தீபம் எனப்படும். இப்படி ஏற்றுவதன் மூலம் வறுமை நீங்கும். செல்வம் பெருகும். இழந்த செல்வத்தை மீண்டும் பெற முடியும்.

### நகரத்தார் சீமையில் உள்ள அஷ்டபைரவர்

1. திருப்பத்தூர்,
2. நகரவைரவன்பட்டி,
3. இலுப்பைக் குடி,
4. அழகாபுரி,
5. திருமெய்ஞானபுரம்
   (திருக்கோட்டியூர் பைரவன்பட்டி)
6. பெரிச்சி கோயில்,
7. நெடுமரம்,
8. தூர்வாசபுரம்
   (இராங்கியத்திலிருந்து கிழக்கே ஒரு மைல்)

**S.L.S. பழனியப்பன்**


Digitized by Noolaham Foundation

● சுவாமி கமலாத்மானந்தர்

ஓடும் ரத்தத்திலும், சிந்தும் கண்ணீரிலும், வழியும் வேர்வையிலும் மக்களிடம் வேறுபாடில்லை.

சொல், செயல், சிந்தனைகளால் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதே "மனித நேயம்" எனலாம்.



"அனைவரும் கடவுளின் குழந்தைகள்" என்ற கருத்து வலுப்படும்போது மனித நேயம் மலரும்.

"நீ மற்றவர்களுக்குக் கருணை காட்டாவிட்டால், வானில் உள்ள இறைவன் உனக்குக் கருணை காட்ட மாட்டான்" என்று இஸ்லாம் கூறுகிறது.

இறைவன் கருணை மயமானவன். எனவே நாம் மற்றவர்களிடம் கருணை உள்ளவர்களாக இருந்தால், இது இறைவனுடன் தொடர்பு கொள்ளும் தகுதியை நமக்குப் பெற்றுத்தரும். அன்பைத்தேடி அனாதையானவர்கள் பலரை இன்று நாம் சமுதாயத்தில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதற்குமாறாக, உள்ளத்தில் அன்பிருந்தால் உலகமெல்லாம் உறவாகும். வாழ்க்கையில் மனித நேயத்துடன் நடந்து கொள்பவர்கள் பெரு வெற்றி பெறுவார்கள்.

## திருவருளான திருவடி!

சிவானுபூதியைத் திருவடி என்று சொல்வது சைவ மரபு. "திருவருளான திருவடி" என்று சொல்வார்கள். "யான் எனதென்றற்ற இடமே திருவடியாம்" என்று கந்தர் கலிவெண்பா கூறுகிறது. எனவே சிவானந்த அனுபூதியாகிய சூட்சுமத் திருவடியைக் குறிக்கும் சின்னமாகவே, நாம் ஸ்தூலமாக இறைவனின் திருவடியை (உருவத் திருவடியை) வணங்குகிறோம். இது காரணமாகவே பெரியோர்கள் இறைவன் திருவடியைப் புகழ்கிறார்கள்.

நாம் ஒருவரை ஒருவர் சார்ந்தும், சேர்ந்தும் வாழ வேண்டும் என்பதுதான் இயற்கை வகுத்திருக்கும் விதியாகும். நாம் ஒருவருக்கு ஒருவர் துணையாக வாழ வேண்டுமே தவிர, தொந்தரவாக வாழக்கூடாது. நம் முன்னோர் பண்டைய நாளில் மனிதாபிமானத்துடன் வாழ்ந்ததால், மன அமைதியுடன் வாழ்ந்தார்கள். இதற்கு மாறாக மனிதப் பண்புகளைப் போற்றி வளர்க்கத் தவறியதால், இன்றைய மனிதன் மன அமைதியின்றித் தவிக்கிறான். மனிதப் பண்புகளில் மணி முடியாகத் திகழ்வது மனிதநேயம்.

# உள்ளத்தில் அன்பிருந்தால் உலகே உறவாகும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநாமத்தின் சிறப்பு



**ஆன்மீக சபைகளில் யாராவது "நம பார்வதீ பதயே" என்று சொன்னவுடன் கட்டத்தில் உள்ள யாவரும் "ஹரஹர மஹாதேவ" என்று கோஷிக்கிறார்கள். பார்வதிபதியான சிவனுக்கு எத்தனையோ பெயர்கள் இருந்தாலும் கூட்டமாக கோஷம் செய்யும் போது "ஹர" நாமமே முன்னால் நிற்கிறது.**

இந்த வார்த்தை ஒரு குழந்தையின் வாக்காக வெளிப் பட்ட தாலேயே இதற்கு இத்தனை விசேடம்.

அம்பிகையினிடத்தில் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தக் குழந்தையின் வாக்கில் இருந்து "ஹர" சப்தம். அதுவும் நமது தர்மத்திற்கு வெற்றி தேடித் தர வந்த, சப்தம் வெளிவந்தது. மதுரை சமணர்கள் ஞானசம்பந்தரை வாதத்திற்கு அழைத்த போது தங்கள் அறிவின் மீது நம்பிக்கை இன்றி அனல் வாதம் புனல் வாதம் என்ற பெயரில் சண்டித்தனம் செய் முடிந்த போது சம்பந்தர் ஓர் ஓலையில் ஒரு பாடலை எழுதி அதனை தீயிலிட்டு எரியாமல் இருப்பதை நிலைநாட்டினார். அதுபோ லவே இறுதிப் பரீட்சை ஆன புனல் வாதத்தில் ஆற்று நீரோட் டத்தை எதிர்த்துக் கரை ஏறிய திருஏடு அதனில் அவர் எழுதி யதுதான் இந்த நாமம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்

வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக

ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே

சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே.

"ஹரன் நாமமே சூழ்க" என்று அந்த தெய்வக் குழந்தை ஆணையிட்டதாலோ என்னவோ எங்கும் இந்த கோஷம் நிலைத்து விட்டது.

நம சங்காரயச மயஸ்கராய நல

சிவாயச சிவதராயச் (ஸ்ரீருத்ரம்)

சிவநாமத்தை உச்சாடனம் செய்தாலே நாம் அனைத்துப் பயன்களையும் அடைய முடியும்.

இப்படிப்பட்ட இலகுவான இரண்டே எழுத்துக்களால் ஆன, வேதங்களின் உயிரோட்டமான "சிவ" என்னும் நாமாவை எப்பொழுதும் நினைக்க, சொல்ல சித்த சுத்தி ஏற் படுகிறது.

ஔவை பிராட்டி தனது நல்வழி என்ற நூலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைத்து மக்களும் சிவ நாமத்தைச் சொல்வதால் பயன டைவர் என்று, "சிவாய நம எனச் சிந்தித்து இருப்போர்க்கு அபாய மொரு நாளுமில்லை" என்று கூறியிருக்கிறார்.

நமச்சிவாய மந்திரம் கற்பகத்தருவாய் நமக்கு வேண்டி யதை எல்லாம் வாரி வழங்குகிறது.

கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சியபோது நற்று ணையாக நின்றது. இந்த நமசிவாயம் தான் என்பதை நாவுக் கரசர் வாழ்வு நமக்குப் பகர்கிறது.

இதனையே திருமூலர்

நாமமோ ராயிரம் ஓதுமின் நாதனை

ஏமமோ ராயிரத் துள்ளே இசைவீர்கள்

ஓமமோ ராயிரம் ஓதவல் வாரவர்

காமமோ ராயிரங் கண்டொழிந் தாரே.

என்கிறார்.

ஐந்தெழுத்துடைய "நமசிவாய" என்னும் பஞ்சாட்சர மஹா மந்திரம் இறைவனின் ஸ்தூல, சூக்ஷ்ம ரூபங்களின் வெளிப்பாடாகும்.

சிவன் ஆசுதோஷி அதாவது எளிதில் சந்தோஷப்படு கிறவன். தும்பை மலரால், வில்வ பத்திரத்தால் அர்ச்சித்து, நல்ல நீரால் அபிஷேகம் செய்து அவன் அருளைப் பெற்று விடலாம்.

நம்முடைய நாவால் சிவ சிவ என்று ஜபித்தால் போதும் அவன் அருள் நமக்குக் கிட்டும்.

சிவநாமா என்பது சிவஸ்வரூபமே. எப்போதெல்லாம் முடிகிறதோ அப்போதெல்லாம் சிவ சிவ என்று இரண்டு அக்ஷரங்களை சொல்லி லோகமெல்லாம் சிவமயமாக அதாவது மங்கள மயமாக, கல்யாண வைபோகமாக சந்தோ ஷமாக இருக்கச் செய்திடலாமே!

எனவே சிவநாமம் ஜபித்து ஜன்ம சாபல்யம் அடை வோமாக.

**ஆர்.பி.வி.எஸ்.மணியன்**

## பிறப்பற்ற நிலை எய்திட பிரபத்தியே சிறந்தவழி!

கருணைக்கடலான சர்வேஸ்வரனால் சாஸ்திரங்களில் விதிக்கப் பட்ட விதியையும், விலக்கையும் ஆராயாமல் அவனிட்ட ஆணைகளை அநாதி காலமாக மனிதன் மீறி வருகிறான். அதன் காரணமாக ஏற்படும் பாவ புண்ணியங்கள் தான் ஒருவனின் பிறப்புக்கும் இறப்புக்கும் காரணம் ஆகின்றன. பகவானிடம் அன்பு பூண்டிருப்பதாகிய பக்தியும், அவனையே உபாயமாகக் கொண்டிருப்பதாகிய பிரபத்தியுமே (சரணாகதியுமே) பிறப்பு, இறப்புக்களை ஒழிப்பதற்கு உரிய வழியாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காரியங்களை செயல்படுத்துவதில் திறமையுடன் செயல்படும் மிதுன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு தொழில் ஸ்தானத்தை குரு பார்வை இடுவதும், அம்சத்தில் சூரியன் சந்திரன் லாபஸ்தானத்தில் இணைவதும் பிரகாசமான வாழ்க்கை யும் பொருளாதார வளர்ச்சியை பெறுவீர்கள்.

### பணியாளர்களுக்கு

தனக்கென்று சில கடமைகளை செவ்வன செய்து முடிக்கும் சூழ்நிலை அமையும். வரவுக்கு தகுந்த செலவுகள் வந்து சேரும். புதிய மறுமலர்ச்சிகளை விரும்புவீர்கள். தொழிற்சங்க பணிகளில் பாராட்டும்படி செயல்படுவீர்கள். பொருளாதார வளர்ச்சி கிட்டும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலனில் அதிக ஆர்வம் செலுத்தவில்லை என்றாலும் பிறருக்கு உதவி செய்வதை பெருமையாக நினைத்து கொள்வீர்கள். புதிய மாற் றங்களை விரும்புவீர்கள். உங்களை சார்ந் தவர்களுக்கு உதவிகளை செய்வீர்கள்.



### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

பௌர்ணமி, அமாவாசை தினத்தில் சிவன் கோவில் சென்று நந்திக்கு விளக்கு ஏற்றி வழிபாடு செய்து வர எதிர்காலம் சிறப்பாக அமையும். தொழில் சிறக்கும்.

அறியும் வாய்ப்பு அமையும். உயர் கல்வி மேலும் சிறப்பாக அமையும். ஆசிரியர்களின் ஆதரவு கிட்டும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

12.09.2016 திங்கள் பகல் 02.30 முதல் 14.09.2016 புதன் இரவு 09.08 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### மிருகசீரிடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

வாழ்க்கையில் ஒரு லட்சியத்தை அடைய தொடர் முயற்சிகளை செய்து வெற்றியை பெறுவீர்கள். கருத்துள்ள செய்திகளை பலரிடம் சொல்லி மகிழ்வீர்கள்.

### திருவாதிரை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

திருப்பங்களை திறம்பட செய்யும் நீங்கள் எந்த தொழில் செய்தாலும் பல முறை ஆலோசனை செய்த பின்பு தொடர்வீர்கள். வாழ்க்கை முன்னேற் றத்திற்கு தேவையான விடயங்களில் கவனம் செலுத்துவீர்கள்.

# மிதுனம்



துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

### வியாபாரிகளுக்கு

தொழிலில் ஸ்தானாதிபதி பார்வை பலம் பெறுவதால் செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். நெடுநாள் எண்ணம் விரைவில் நிறைவேறும். அன்னியர் உதவியும் நட்பும் உங் களுக்கு பக்கபலமாக அமையும். கடல் சார்ந்த தொழில் வளர்ச்சியை தரும். பொருளாதாரம் சிறக் கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் நினைத்தபடி செயல்படுவீர்கள். ஆற்றலும், செயலில் ஊக்கமுகொண்டு செயல்படுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் முயற்சிக்கு நல்ல பலன்கள் தரும். கலைஞர்களின் வளர்ச்சிக்கு உங்களின் உதவியும், ஆதரவும் நன்மைகளை பெற்றுத் தரும்.

### பெண்களுக்கு

பெண்களுக்கு தொழிலில் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். நேர்மையை விரும்பும் நீங்கள் உங்கள் கண்முன் நடக்கும் குற்றங்களை பொறுத்து கொள்ள மாட்டீர்கள். உறுதியான செயல்பாடுகளை செயல்படுத்துவீர்கள்.

### மாணவர்களுக்கு

சிறந்த கல்வியை பெற்று திருப்பங்களை

### புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். கவலைகளை மறந்து செயலில் கவனம் செலுத்துவீர்கள். பொருளாதாரத்தை பெருக்க வாய்ப்புகளை பயன் படுத்திக் கொள்வீர்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள் : பச்சை, மஞ்சள், நீலம்
அதிர்ஷ்ட திசைகள் : மேற்கு, வடமேற்கு, கிழக்கு
அதிர்ஷ்ட கிழமைகள் : புதன், வெள்ளி, திங்கள்

### ஐந்து வகை இறைவழிபாடு!

சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற ஐந்தையும் இறைவழிபாட்டில் பயன் படுத்தலாம். வெடி போடுவதும் வாண வேடிக்கை நடத்துவதும் அவற்றில் அடக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### சூரியன் – செவ்வாய் சேர்க்கையால் ஏற்படும்

# களத்திர தோஷம் நீங்கிட வீரபத்திரர் வழிபாடு

**ஜாதகத்தில் சூரியனும் செவ்வாயும் இணைந்து இருந்தால் தொழில் ரீதியாக கஷ்டங்களும், தொழிலில் ஸ்திரமற்ற தன்மையும், அலைச்சலும், எவ்வளவு கடுமையாக உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியாத நிலையும் ஏற்படும்.**

பெண்கள் ஜாதகத்தில் 12 இராசிகளில் சூரியனும், செவ்வாயும் எந்த இராசியில் சேர்ந்திருந்தாலும், வாலிப வயதில் விதவையாகும் நிலை ஏற்படும் எனக் கூறியுள்ளார். மாங்கல்யம் பறிபோகும் நிலை பிரிவு, விவாகரத்து போன்ற நிலை கூட ஏற்படலாம். திருமணத் தடை ஏற்படலாம். சூரியன் செவ்வாய் சேர்ந்து நிற்கும் ஸ்தானம் பாதிக்கப்படலாம்.

இது போன்ற ஜாதக அமைப்புக் கொண்டவர்கள், தட்சனின் கர்வத்தை அடக்க சிவபெருமானால் படைக்கப்பட்ட சிவனின் அம்சமான வீரபத்திரர் சன்னதியில் செவ்வாய்க்கிழமை நெய் தீபம் ஏற்றி வெற்றிலை மாலை சாற்றி, செவ்வரவளி பூக்களால் அர்ச்சனை செய்து வழிபட பாதிப்பு நீங்கும்.

நாகப்பட்டினம், கும்பகோணம், தாராசுரம் முதலிய இடங்களில் வீரபத்திரருக்குத் தனிக் கோயில்கள் அமைந்துள்ளன. கும்பகோணம், ஆவுடையார் கோயில், தாரமங்கலாம், தாடிக் கொம்பு, மதுரை, திருநெல்வேலி முதலிய இடங் களில் கோயில் தூண்களில் அகோர வீரபத்திரர், சில இடங்களில் அக்னி வீரபத்திரர் என்று ஓர் உருவ வேறுபாட்டுடன் விளங்குகிறார். திரு வானைக்காவல் ஆலயத்தில் மேற்கே மேல விபூதிப் பிரகாரத்தில் சாந்த வீரபத்திரராகக் காட்சி தருகிறார். வீரபத்திரரை மன ஈடுபாட்டுடன் வணங் கினால், இத்தகைய ஜாதகர்களின் துன்பமய மான பலன்களின் தாக்கம் வெகுவாகக் குறையும்.

K. துரைராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கா.சிவலிங்கம்

திராய்மடுத் திருத்தலம் என்று கூறும் போது ஒருவருடைய திருவுருவம் நம் மனக் கண்முன் நிழலாடும். அவர்தான் ஸ்ரீ சற்குருநாத சடையப்பர் சுவாமிகளாகும். இவ்வுலகின் கண் ஏதாவதொன்று உருவாகவேண்டுமெனில் அதற்குப் பின்னணியில் யாரோ ஒரு காரணகர்த்தா இருந்தே ஆகவேண்டும். அதற்கமைய, திராய்மடு ஸ்ரீ முருகன் திருத்தலம் உருவாவதற்கு மூல காரணகர்த்தாவாக இருந்தவர். சடையப்பர் சுவாமிகளேயாவர். அவரது துறவு வாழ்க்கையும் திராய்மடு முருகன் ஆலயத்தின் வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. அவரில்லாது இவ்வாலயம் இல்லை. இவ்வாலயம் இல்லாதுஅவருமில்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு சுவாமிகளின் வாழ்க் கையும் ஆலயத்தின் வரலாறும் ஒருபோதும் பிரிக்க முடியாதவை.

# திராய்மடுவின் சடையப்பசுவாமிகளும் முருகன் திருத்தலமும்!




திராய்மடு திருத்தலத்தின் ஸ்தாபகர் சடையப்பர் சுவாமிகளே. அன்று காடாக காட்சியளித்த திராய்மடுப் பிரதேசமானது இன்று இந்த அளவிற்கு அபிவிருத்தி அடைந்து பிரசித்தி பெற்ற ஒரு தலமாகத் திகழ்வதென்றால் அதற்கு முருகன் மீதுஅவர் கொண்டிருந்த உறுதியான பற்றுதலும் அவரது அயராத முயற்சியுமே காரணம் என்பது யாவரும் அறிந்த உண்மை.

இப்பொழுது ஈழத்தின் நாலாபக்கமும் இருந்து. அடியார்கள் இவ்வாலயத்தை தரிசிப்பதற்காக வருகை தந்த வண்ணம் இருக்கின்றனர். இத்திருத்தலத்தின் மகிமை காரணமாக இவ்வாலயம் "சின்னக் கதிர்காமம்" என்றும் அடியார்களால் அழைக்கப்படுகின்றது. இவ்வாறு பெருமைக்குரிய ஒரு ஆலயம் உருவாவதற்கு மூல காரணகர்த்தாவாக இருந்த சடையப்ப சுவாமிகளின் வாழ்க்கையோடு தொடங்கி ஆலயத்தின் இன்றைய நிலைவரை ஏற்பட்ட நிகழ்வுகளை இனி ஒவ்வொன்றாக நோக்குவோம்.

## சுவாமிகளின் பிறப்பிடம்

இயற்கை எழில் கொஞ்சும் ஈழமணித் திருநாட்டின் கிழக்கில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தை வளங்கொழிக்கச் செய்கின்ற செழுமை மிகு வாவி யானது. அலைபுரண்டோடி விளையாடும் வங்கமா கடலுடன் சங்கமிக்கின்ற இயற்கை வனப்பு மிகுந்த இடமே முகத்துவாரமாகும். அதனோடு இணைந் துள்ளதும் வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர் எழுந்தருளி அருள்பாலிக்கும் இடமுமான பாலமீன் மடுக் கிராமத்திற்கும் ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பெருமான் வீற்றிருந்து அடியார்க்கு அருள் புரியும் பேராலயம் அமைந்துள்ள அமிர்தகழிக் கிராமத்திற்கும் இடையில் அமைந்துள்ளதுதான் வணக்கத்திற்குரிய சடையப்பர் சுவாமிகள் உற்பவித்த மட்டிக்கழி என்னுங் கிராமமாகும்.

இக்கிராமம் முற்காலத்தில் முன்னேற்றம் எதுவுமின்றிப் பின் தங்கிய கிராமமாகவே காணப்பட்டது. இங்குள்ள மக்களிற் பெரும்பாலானோர் மீன் பிடித் தொழிலையே தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர். சிலர் வத்தை, வாடா என்று அழைக்கப்பட்ட பாய்மரக்கலங்களின் மூலம் கட்டடப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களுடன் உப்பு முதலிய உணவுப் பொருட்களையும் வெவ்வேறிடங்களிலிருந்தும் கொண்டு வந்து வர்த்தகம் செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். ஆனால் தற்காலத்தில் இக்கிராமம் சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்த ஒரு கிராமமாக மாற்றமடைந்நதுள்ளது. தற்பொழுதும் பெரும்பாலானவர்கள் இயந்திரப்படகுகளின் மூலம் ஆழ்கடல் சென்று மீன் பிடித்து வருகின்றனர். சிலர் வாவியிலும் சிறு தோணிகளில் சென்று மீன் பிடித்து வாழ்க்கையை நடத்துகின்றனர்.

சிலர் அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றுகின்றனர். இன்னும் சிலர் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டுப் பொருளீட்டுகின்றனர். இங்கு தென்னை மரங்கள் எங்கும் செறிந்து காணப்படுகின்றன. அத்துடன் மா, பலா, வாழை முதலிய முக்கனி மரங்களும் ஆங்காங்கே தென்படுகின்றன. பாண்டவர் பத்தினியாம் திரௌபதி அம்மனுக்கும் ஓராலயம் இக்கிராமத்தின் மத்தியில் அழகுற அமைந்துள்ளது. தினந்தோறும் செங்கதிரோன் வரவில் கண்விழிக்கும் கிராமங்களுள் மட்டிக்கழியும் ஒன்றாகும். சடையப்பர் சுவாமிகள் பிறந்து வளர்ந்த காரணத்தால் இக்கிராமம் பெருமைக்குரியதாகிறது. இதன் அருகிலுள்ள வாவியல் "மட்டி" எனும் சிப்பி மீன்கள் ஏராளமாக வாழ்வதால் இக்கிராமம் மட்டிக்கழி என்னும் பெயரைப் பெற்றது.

## சுவாமிகளின் பிறப்பு

இந்த மட்டிக்கழிக் கிராமத்தில் பெருமைக்குரிய செல்வன் பட்டங்கட்டி தம்பியப்பர் அவர்களும் செல்வி அமராவதி அவர்களும் இறைவன் அருள் பாலிக்க திருமணபந்தத்தில் இணைந்து கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்தி வந்தனர். அதன் பயனாக அமராவதி அவர்களின் வயிற்றில் கருவாகி உருப் பெற்றார். சுவாமி அவர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அன்னையின் வயிற்றில் சிசு வளர்ந்து கொண்டு வந்தது.

வருடாவருடம் மாமாங்கேஸ்வரரின் தீத்தோற்சவம் ஆடி மாதம் வரும் அமாவாசை தினத்தன்று இடம் பெறுவது வழக்கம். அவ்வாறே 1909ஆம் ஆண்டு ஆடி மாதம் 13ஆம் திகதி அமாவாசை தினத்தன்று காலை 09.00 மணிக்கு மாமாங்கேஸ்வரர் தீர்த்தமாட எழுந்தருளிவரும் அவ்வேளையில் தீர்த்தமாட வந்து கொண்டிருந்த தம்பியப்பர் அவர்களிடம் அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் ஓடோடி வந்து அவருக்கு ஓர் ஆண் குழந்தைப் பிறந்திருக்கின்ற செய்தியைக் கூறினார். அதைக் கேட்டதும் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்த தம்பியப்பர் அவர்கள் விரைந்தோடி வந்து குழந்தைச் சுவாமியைப் பார்த்துப் பரவசமடைந்தார்.

மாமாங்கப் பெருமானை உள்ளூர நினைத்து வணங்கி நன்றி செலுத்தினர். மாமாங்கர் தீர்த்தமாடும் தினத்தில் பிறந்ததினத்தாலோ என்னவோ குழந்தை பிற்காலத்தில் வணக்கத்துக்குரிய ஒரு உன்னத நிலையையடைந்தது.

(தொடரும்...)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராமனுக்கு வெற்றியருளிய ஸ்ரீ மஹா பிரத்யங்கிரா தேவி!

**இராம இராவண யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம் அது. ஏழு நாட்கள் லட்சுமணனுக்கும் இந்திரஜித்துக்குமான போர் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. மறைந்து மறைந்து மாயாவியாக, போரிட்டுக் கொண்டிருந்த இந்திரஜித், எட்டாம் நாள் போருக்கு வரவே இல்லை. வெகுண்ட லட்சுமணர், "மேகநாதன் எங்கே? நாக பாசத்திலிருந்து விடுபட்டோம் என்று அறிந்தவுடன் ஓடி ஒளிந்து கொண்டானா?" என்று அனல் தெறிக்கக் கேட்டான்.**

"அவனை அவ்வளவு எளிதாக எண்ணாதே! இந்திரனை ஜெயித்து இந்திரஜித் என்று பெயர் வாங்கியவன். ஓடி ஒளியுமளவு கோழையல்ல, நாக லோகத்தை வென்று நாககுமாரி சுலோசனா வுக்கு மாலையிட்டவன்! ராம லக்ஷ்மணர்களை வெற்றி கொள்வதென்பது சாதாரண விடயமா? நிகும்பலை யாகம் நடத்தப் போயிருக்கிறான். யாகம் பூர்த்தி யாவதற்குள் நாம் அங்கு சென்று அவனை யுத்தத் திற்கு அழைக்க வேண்டும்" என்று விளக்கினார் விபீஷணர்.

"நிகும்பலை யாகமா? அது யாரை நோக்கி நடத்தப்படுகிறது?" என்று வினவினார் ராமபிரான்.



"ஸ்ரீ பிரத்யங்கிரா தேவியைக் குறித்து செய்யப் படுகிறது. வனங்கள், நதி தீரங்கள், மலைகள், மயான மையங்கள் இவற்றில் ஏதாவதொரு இடத் தைத் தேர்ந்தெடுத்து அந்த யாகம் செய்தால் கோரிய பலன் கிடைக்கும்."

"இந்திரஜித் எங்கே வேள்வி இயற்றுகிறான்? உடனே புறப்படுவோம்" என்று துடித்த லட்சு மணனை, "பொறு, லக்ஷ்மணா! ஆத்திரப்படாதே. நாமும் அந்த தடை தகர்க்கும் தேவியைப் பிரார்த் திப்போம்" என்றார் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி.

இருவரும் பிரத்யங்கிரா தேவியைப் பிரார்த் திக்க தேவியும் ரகுநந்தனனுக்குக் காட்சி கொடுத் தாள்.

"தர்மம் தழைக்க உதவ வேண்டும்" என்று தாச ரதி கோர "அப்படியே ஆகட்டும் ஜய விஜயீ பவ" என ஆசீர்வதித்து மறைந்தாள் மாதா.

எட்டு திசைகளிலும் மயானங்கள் சூழ்ந்திருந்த இடத்தில் நிகும்பலை யாகத்தை நடத்திக் கொண்டி ருந்தான் இந்திரஜித்.

வீர சரபேஸ்வரரின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆயிரம் சிங்க முகங்களோடும், இரண்டாயிரம் சுரங்களோடும் உதித்தவளே பிரத்யங்கிரா தேவி. அபராஜிதா என்ற பெயரும் அவளுக்குண்டு. இவ ளது மந்திரத்தை பிரத்தியங்கிரஸ், அங்கிரஸ் என்ற இரு மகரிஷிகள் சேர்ந்து உருவாக்கியதால் அவர்க ளது பெயரால் அவள் அழைக்கப்படுகிறாள்.

நரசிம்மமூர்த்தியின் கோபம் இரணியனை சம் ஹாரம் செய்த பிறகும் அடங்கவில்லை! அவரது சினத்தைத் தணிக்க சரபேஸ்வரர் தோன் றினார். அவரது இரு இறக்கைகளில் ஒன்று சூலினி துர்க்கை, மற்றொன்று அதர்வண காளி என்று சொல்லப்ப டுகிறது. அதர்வண காளிதான் பிரத்யங்கரா தேவி என்றும் சில நூல்கள் உரைக் கின்றன.

லட்சுமணன், விபீஷணர் துணையோடு இந்திர ஜித் யாகம் செய்யும் இடத்திற்கு வந்து போருக்கு வருமாறு அறைகூவி அழைக்க இந்திரஜித்தின் கவனம் சிதறியதால் மந்திர உச்சாடனம் தடைப் பட்டது. ஆத்திரத்தோடு யுத்தம் செய்ய வந்தவன், லட்சுமணன் எய்த பாணத்தை மார்பிலே வாங்கி மண்ணில் சரிந்தான். மாமனாரைத் தவிர வேறெவர் கையாலும் தான் சாகக் கூடாதென்று வரம் வாங்கி யிருந்தான் இந்திரஜித். அங்கே லட்சுமணனாக நிற் பது நாகராஜனான ஆதிசேஷனே என்பதை அவன் அறியவில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பாவை திருவெம்பாவையின் உன்னதக் கருத்துக்கள்!

திருப்பாவையில் கன்னிப் பெண்கள், கண்ணனையே கணவனாக அடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்கள். திருவெம்பாவையில் கன்னிப் பெண்கள், சிறந்த சிவனடியார்கள் தங்களுக்குக் கணவன்மார்களாக அமைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறார்கள். விடியற்காலையில் விழித்தெழுந்து இறைவனை நினைக்க வேண்டும். உலக நன்மையின் பொருட்டு மழை வேண்டிப் பிரார்த்தனை செய்தல் வேண்டும் ஆகிய கருத்துக்கள் திருப்பாவை திருவெம்பாவை ஆகிய இரண்டிலும் உள்ளன.





இந்திரஜித் மரணத்தறுவாயில் பிரத்யங்கிரா தேவியை நினைத்தான். தேவி பிரத்யட்சமாகி அவனுக்கு மோட்சத்தை அளித்தாள். இவ்வாறே பஞ்ச பாண்டவர்களும் காவிரியின் தென் கரையில் அமர்ந்து அன்னை பிரத்யங்கிரா தேவியை வழிபட, தேவி காட்சியளித்து "இழந்த பூமியும், செல்வங்களும் மறுபடி கிடைக்கும்" என்றருளினாள். அன்னையை அர்ச்சிக்க பத்திரங்களையே அவர்கள் உபயோகித்தனர். ஐந்துபேரும் விதவிதமான பத்திரங்களை மனதில் நினைக்க அப்படியே அவர்களுக்கு கிடைத்தது. அரசு, புரசு, இச்சி, மா, ஆல் என ஸ்தல விருட்சத்தில் அவர்களுக்கு கிடைத்த ஐந்துமர இலைகளைக் காணலாம். ஐவார்பாடி (தங்கிய இடம்) நாளடைவில் மக்கள் நாவில் மருவி அய்யாவாடி ஆயிற்று என்று சொல்லப்படுகிறது.

உப்பிலியப்பன் கோவிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அகஸ்தீஸ்வரர் ஆலயத்தில் பிரத்யங்கிரா தேவியின் சன்னதி வடக்கு நோக்கியிருக்கிறது. சிம்ம முகம், 18 கரங்களிலும் சூலம், பாசம், பாருகம் போன்ற பல்வேறு ஆயுதங்களுடன், சிரசில் சந்திரக் கலையோடு, இரண்டு ஆள் உயரத்தோடு, நான்கு சிங்கங்கள் பூட்டிய ரதத்தில் உட்கார்ந்த நிலையில், இருபுறமும் லக்ஷ்மி, சரஸ்வதியுடன் அருள் பாலிக்கின்றாள் அன்னை.

காண்பதற்கு பயங்கரமாய் தோன்றினாலும் பில்லி, சூன்யம், வைப்பு, ஏவல் என்று கஷ்டப்படும் பக்தர்களை அவற்றினின்று விடுவிக்கிறாள் பித்யங்கிரா தேவி. குணமாகாத வியாதி, காயம் இவைகளும் குணமடைய பிரத்யங்கிரா தேவியை வேண்டிக் கொள்ளப்படுகின்றது. தரிசிக்க வருபவர்கள் மிளகாய் வற்றலும் கொண்டு போய் கொடுக்கலாம். இந்த தேவியைப் பிரார்த்தித்து வேண்டிக் கொண்டால் காணாமற் போன பொருள் திரும்பக் கிடைக்கும். திருஷ்டி தோஷங்கள் நீங்கும். பகைவர் தொல்லை இராது. வெற்றி கிட்டும். காரியத்தடைகள் அகல பிரத்யங்கிரா தேவியை தியானிப்போமாக!

அமைவிடம் கும்பகோணத்திலிருந்து எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஐயாவாடி என்ற இடத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.

ஆர்.பொன்னம்மாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சோழர்கால சிற்பச் செழுமையை பறைசாற்றும்

# தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம்

தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்தின் தலை நகரான தஞ்சாவூரில் அமைந்துள்ளது உலகப் புகழ் பெற்ற பிரகதீஸ்வரர் ஆலயம். இந்த ஆல யம் உயரமான கோபுரம், மிகப் பெரிய நந்தி, கண்கவரும் ஓவியங்கள், உன்னதமான சிற்பங்கள் முதலியவற்றிற்கு பெயர்ப்பெற்ற சோழர் காலத்தின் மிகப் பழைமையான ஆலயமாகும். இது கட்டி முடிக்கப்பட்டு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. ஆலயக் கோபுரத்தின் நிழல் தரையில் விழாமல் ஒரு தொழில்நுட்பத்தை அந்த காலத்திலேயே கடைப்பிடித்திருப்பது நம்மை இன்றும் வியப்பில் ஆழ்த்துகின்றது. ஆலயம் மற்றும் கோபுரம் கட்டுவதற்குத் தேவையான மிகப் பெரிய பாறைகளை இந்தியாவின் வட மாநிலங் களிலிருந்து யானைகளின் உதவியுடன் கொண்டு வந்ததாக சொல்லப்படுகின்றது. இந்த ஆலயம் கட்டி முடிப்பதற்கு சுமார் ஏழரை ஆண்டு காலங்கள் ஆனதாக ஆலய வரலாறு தெரிவிக்கின்றது.


மிகச் சிறந்த சிவ பக்தரான ராஜராஜ சோழன் தனது சொந்த மேற்பார்வையில் இந்த பிரம்மாண்டமான சிவாலயத்தை கட்டி முடித்து அதற்கு பிரகதீஸ்வரர் ஆலயம் என்று பெயரிட்டார். ஆலயத்திற்கு முன்பாக அமைந்துள்ள ஒரே கல்லாலான மிகப் பெரிய நந்தி 16 அடி நீளத்திலும், 13 அடி உயரத்திலும் அமைந்துள்ளது. இந்த நந்தியின் மீது அழகான ஆபரணங்கள் பூட்டப்பட்டது போல் சிற்ப வேலை கள் செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தின் மீது அமைந் துள்ள கும்பத்தின் எடை எண்பது டன் எனச் சொல் லப்படுகின்றது. தஞ்சைப் பெரிய கோயிலின் 100 அடி உயரம் கொண்ட கோபுரம் உலகிலேயே மிகவும் உயரமானது என வர்ணிக்கப்படுகின்றது. ஆலயம் முழுவதும் உறுதியான கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இந்த ஆலயக் கட்டிட பாணியானது திராவிடர் கட்டிடக் கலை சார்ந்ததாகவும் சோழ சாம்ராஜ்ய கலைக் கலாசாரத்தை பிரதிபலிப்பதாகவும் அமைந்திருக்கின்றது. தென்னிந்தியாவில் அமைந்துள்ள இந்த பிரம்மாண்ட ஆலயத்தில் தமிழ் கலை, கலாசாரம் மற்றும் பண்பாடுகள் பறைச்சாற்றப் பட்டுள்ளன.

சோழர் காலத்தின் கோயில் கட்டிடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, வெண்கலச்சிலைகள் முதலியவற்றில் எட்டப்பட்ட வெற்றியின் அடையாளங்களாய் சோழர் தஞ்சையின் பிரகதீஸ்வரர் ஆலயம் அமைந்திருக்கின்றது. இந்த ஆலயத்தைச் சுற்றிலும் மிகப் பெரிய சுற்றுச்சுவர்கள் பின் வந்த காலங்களில் அதாவது 16ஆவது நூற்றாண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











## ஜீவகாருண்யம்!

ஆன்மிக வாழ்க்கைக்குப் பல அங்கங்கள் உண்டு. எனினும் அவற்றுள் ஜீவகாருண்யத்தையே வள்ளலார் தலையாயதாகக் கருதினார். அவர் ஜீவகாருண்யத்தை அடிக்கல்லாக வைத்து அதன் மீது, "சன்மார்க்க சங்கம்" என்ற கட்டிடம் எழுப்பினார். தன் உயிர் போனாலும், தனக்குத் துன்பம் நேர்ந்தாலும் மற்றவர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பது ஜீவகாருண்யமாகும்.

எழுப்பப்பட்டன. குஞ்சர மல்லன் ராஜராஜ பெருந்தச்சன் என்பவரே இந்த ஆலயத்தை கட்டுவதற்கான பொறியியல் திட்டத்தையும் கலைப்பாணியும் வகுத்து கொடுத்தவராவார். இவரின் மிகச் சிறந்த அணுகுமுறைக்காகவும் செயல்பாட்டிற்காகவும் "கைத்திறன்களின் தந்தை" என்று அழைக்கப்பட்டுள்ளார்.

ஆலயத்தின் கோபுர வலதுப் புறத்தில் தமிழ் எழுத்துக்களும் அற்புதமான சிற்பங்களும் காணப்படுகின்றன. ஆலயச் சுற்றுச்சுவர்களுக்கு அடுத்தாற் போல் மிக ஆழமான அகலமான எப் போதும் நீர் நிறைந்திருக்கக் கூடிய அகழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுச்சுவர்களும் அகழியும் சேர்ந்து பெரிய கோயிலின் வளா கத்தை ஒரு மிகப் பெரிய கோட்டையாக சித் திரிக்கின்றது.

ஆலயத்துள் நுழைந்தவுடன் வலது புறத்தில் பிரகதீஸ்வரி ஆலயம் தனி சன்னதியில் அமையப் பெற்றுள்ளது. இங்கு சென்று அன்னையை நோக்கி சிறிது நேரம் மௌனமாக வழிபட்டால் எங்குமே பெற முடி யாத மன அமைதியை பக்தர்கள் அடைய முடியும் என்று சொல்லப்படுகின்றது. குங்கும நாயகியாய் விளங்கும் இந்த அம்மனின் அருள் அளப்பரியது என்றும் பக்த்ர்கள் கூறுகின்றார்கள். அம்மன் சன்னதியிலும் இடது புறத்தில் அமைந்துள்ள வராகியம்மன் சன்னதியிலும் சிவனார் லிங்க வடிவில் வீற்றி ருக்கும் கர்ப்பக்கிரகத்திலும், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோரது சன்னதிகளிலும் சிற்பங்களின் செழுமையை நாம் கண்கூடாக காண முடிகின்றது. ஆலயத்தின் பின்புறத்தில் ஒரு பெரிய மரத்தடியில் கருவூரார் சன்னதியும் அமையப் பெற்றுள்ளது. சோழர் காலம் சிற்பக் கலையில் தலைச்சிறந்து விளங்கியது என்பதற்கு தஞ்சையின் பெரிய கோயில் ஒரு மிக பெரிய எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

✍ஜெயா நாகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்.பி.வி.எஸ்.மணியன்

# அனைத்தும் அருளும் அபிராமி அந்தாதி!

அம்பிகையின் நாமம் தியானிக்கவும் எளிதானது, ஜபிக்கவும் எளிதானது.

"ஓம் சக்தி ஓம் பராசக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்" என்று எளிதான பாடலையே உருவாக்கி அதன் மூலம் அன்னையின் அருளைப் பெற வழி காட்டினர்.

அண்மைக் காலத்தில் அபிராமி பட்டர் அன்னையை எளிய பாடல்களால் துதித்து இயற்கையில் ஓர் அற்புதத்தையே நிகழ்த்தி காட்டினார்.

அத்தகைய அம்பிகையின் திருநாமங்களை இப்போது தமிழகத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் மேல் மருவத்தூரின் ஆதி பராசக்தி மன்றங்கள் வாரந்தோறும் ஒலிக்கச் செய்து தமிழகத்தையே சாக்த பூமியாக மாற்றியுள்ளன.

"ஓம் சக்தி பராசக்தி ஓம் சக்தி பராசக்தி" என்று நாமத்தை ஜபித்தவாறு செல்லும் செவ்வாடை மக்களை எம்மால் காண முடிகிறது.

தேவி சப்த சதீ எனப்படும் 700 சுலோகங்களைப் பாராயணம் செய்தால் கிடைக்கும் பலன்களை எழுதி மாளாது.


700 சுலோகங்களை சொல்ல இயலாவிடில் ஜ துர்கா சப்த ச்ரோகீ என்று ஏழே மந்திரங்களைச் சொல்லி அவள் அருளைப் பெற முடியும்.

அபிராமி அந்தாதியில் சொல்லியுள்ளபடி அவளது நாமம் நமக்கு

***தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வு***
***அறியா மனம் தரும் தெய்வ வடிவும் தரும்***
***நெஞ்சில் வஞ்சமிலா இனம் தரும் நல்லன***
***எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே கனம் தரும்***
***பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.*** •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினைப்பயனை பகவான் மாற்றுவதில்லை!

ஒரு முறை ருக்மிணி, பகவானுக்குப் பணி விடை செய்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் கேள்விக்குறியொன்று தோன்றி நிற்பதை பகவான் கவனித்தார்.

"என்ன ருக்மிணி! ஏதோ கேட்க வேண்டும் என்று எண்ணுகிறாய் போலிருக்கிறது. என்ன தயக்கம்? கேளேன்!"

"பிரபு! தங்களைக் கருணாமூர்த்தி என்று எல்லோரும் அழைக்கிறார்கள். உங்களை நம்பின வர்களுக்கும் சரி, நம்பாதவர்களுக்கும் சரி, வித்தி யாசமின்றி, அருள் தருபவர், அப்படியிருக்க தங்கள் பக்தர்களிடம் மட்டும் அதிக பரிவு காட்டுகிறீர்கள், ஏன்?"

ருக்மிணியின் பேச்சைக் கேட்டு, கிருஷ்ணர் ஒரு புன்சிரிப்பு சிரித்துவிட்டுப் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

"ருக்மிணி! இந்தச் சந்தேகம் உனக்கு மாத்திரம் இல்லை. உலகில் எல்லோருக்கும் இருக்கிறது. வினைக்குரிய பலனை மட்டும் கொடுப்பவன் நான். தான் சுகப்படுவதோ, துக்கப்படுவதோ, ஜீவனுக்கே உரிமை. அவனவன் வினைப் பயனை அவனவனுக்கு வழங்கும் பணியை மட்டும் நான் ஏற்றுக்கொள்கிறேன். பக்தர்களானாலும் அவர் களுடைய வினைப் பயனை பகவானால் முழுவதும் மாற்ற முடிவதில்லை. மாற்றுவதும் இல்லை.

குருக்ஷேத்திர யுத்தத்தின் பத்தாவது நாள் முடிந் ததும் அம்புப் படுக்கையில் இருந்த பீஷ்மரைப் பார்க்க கிருஷ்ணர் சென்றார். அப்பொழுது பீஷ்மரின் கண்கள் கலங்கியதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

"ஏன் கண் கலங்குகிறீர்கள்?" என்று கேட்டார் கிருஷ்ணர். அதற்கு பீஷ்மர் சொன்னார், "இந்த பஞ்ச பாண்டவர்கள் தங்களையே நம்பி வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தரும வழியில் செல் கிறவர்கள். இவர்களுக்கே இந்த கதி என்றால் தங்களை முழுவதும் மறந்து திரியும் மூர்க்கர்களின் கதி என்னவாகுமோ என்று எண்ணினேன். அதன் காரணமாக அழுகிறேன்" என்றார்.



## திருமாங்கல்யத்தின் தத்துவம்!

திருமாங்கல்யம் ஒன்பது இழைகளை உடையது. இந்த ஒன்பது இழைகளும் காயத்ரி மந்திரம் குறிப்பிடும். 1. வாழ்க் கையை உள்ளது உள்ளபடியே புரிந்து கொள்ளுதல், 2. ஆற்றல், 3. மேன்மை, 4. தூய்மை, 5. தெய்வீக நோக்கம், 6. உத்தம குணங்கள். 7. விவேகம், 8. தன்னடக்கம், 9. தொண்டு ஆகியவற்றை ஒரு பெண் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் அமைக்கப்பெற்றவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாக குண்டத்தில் நாய் குரைக்கும் சப்தம்!

**1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு நாள் திண்டுக்கல்லில் உள்ள மன்றங்கட்கெல்லாம் சென்று அன்னையை வழிபட்டேன். அந்த மன்றத்தினருடன் அளவளாவினேன். அம்மாவிடம் அவரவர் பெற்ற அனுபவங்களைச் சொல்லுமாறு கேட்டேன்.**

திண்டுக்கல் மலையடிவாரத்தில் உள்ள மன்றத்தில் தொண்டு செய்து வருபவர் சக்தி லட்சுமி நாராயணன்! சுமார் எட்டு ஆண்டுகளுக்கு மேலாக அங்கே தொண்டு செய்து வருவதாகச் சொன்னார். அவர் சொல்லிய அற்புதம் ஒன்றை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை. அவர் சொல்லியவை இவை!

சக்தி! எங்கள் மன்றத்தில் ராமசாமி செட்டியார் என்ற தொண்டர் ஒருவர். அவர் ஒரு முறை மனநலம் பாதிக்கப்பட்டார். அவர் குடும்பத்தார் நிலை குலைந்து போயினர். நானும் அவர் குடும்பத்தினரும் அன்னையிடம் அருள்வாக்கு கேட்கச் சென்றோம்.

"மகனே! உன் ஊழ்வினை முடியும் காலம் நெருங்கி விட்டது! நான் அருளிய முறைப்படி குடும்ப நல வேள்வி நடத்து! உன் எதிர்காலம் நன்றாக இருக்கும்" என்றாள் அன்னை. அது போலவே, நம் சித்தர் பீடத்து முறைப்படி குடும்பநல வேள்வி நடத்தினோம். அனைத்துப் பிரமுகர்களும் வந்திருந்தனர். கோவை பேராசிரியர் முத்துக் கிருஷ்ணனும் வந்திருந்தார்.

நாங்கள் வேள்விப் பூசையில் ஈடுபட்டிருந்த போது... யாக குண்டத்திலிருந்து நாய் குரைக்கும் சப்தம் கேட்டது. முதலில் நாங்கள் இதைச் சரியாகக் கவனிக்கவில்லை. அருகில் இருந்த சக்தி ஒருவர், "ஓம் சக்தி!" என்று உரத்த குரலில் சொல்லியபடி ஒரு கற்பூரக் கட்டியை எடுத்து யாக குண்டத்தில் இட்டார்.

இப்போது நாய் குரைக்கும் சப்தம் மிகவும் பலமாகக் கேட்டது. அனைவரும் ஆச்சரியப்பட்டோம்! இது நல்லதற்கா? கெட்டதற்கா...? புரியாமல் குழம்பினோம். அப்போது குடும்பத் தலைவர் ராமசாமி செட்டியார் எழுந்து, "சக்திகளே! எங்கள் குல தெய்வம் பைரவர்! ஒரு வேளை அதற்கு நாங்கள் குறை வைத்திருக்கலாம்" என்று சொல்லிவிட்டு பக்தியுடன் பைரவரை வேண்டிக்கொண்டார். சிறிது நேரத்தில் நாய் குரைக்கும் சப்தம் நின்று விட்டது. வேள்வி நல்லபடியாக முடிந்தது. சில நாட்களில் ராமசாமி செட்டியர் பூரண குணம் அடைந்தார்.

"குடும்பநல வேள்வியின் மகத்துவத்தை நாங்கள் புரிந்து கொண்டோம்" என்றார் லட்சுமி நாராயணன்!

சக்தி கே. ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடகம்

துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

செல்வாக்கும், சொல்வாக்கும் கொண்டு விளங்கும் கடக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு லாப ஸ்தானத்தையும், பாக்கிய ஸ்தானத்தையும் குரு பார்ப்பது சகல நன்மைகளையும் பெற்றுத் தரும். பிறர் உதவியின்றி எதையும் சாதிக்க முடியாது.

### பணியாளர்களுக்கு

தொழிலாளர்களின் நலன்களை அக்கறை கொண்டு செயல்படுவீர்கள். தொழிற்சங்க கூட்டங்களில் உங்களின் பேச்சாற்றல் பெருமையை தேடி தரும். தேயிலை தோட்ட தொழிலாளர்களின் வளர்ச்சிக்கு மேம்பாடு செயல்படும். பொருளாதாரத்தில் ஏற்றம் பெறுவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலனில் உங்களின் பங்கு சிறப்பாக அமையும். மக்களின் அன்றாட பணிகளுக்கு உதவிகளை செய்வீர்கள். அரசியல் வாதிகளின் வாழ்க்கை தரம் உயரும். புதிய பதவிகளை ஏற்பீர்கள். சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். பொருளாதார நிலை வளர்ச்சியை தரும்.



**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

நவக்கிரக சனிக்கு சனிக்கிழமை ராகு காலத்தில் வணங்கி நல்லெண்ணெய் தீபம் போட்டு வர கஷ்டம் நீங்கி உங்களின் எண்ணம் விரைவில் நிறைவேறும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானத்தின் அதிபதி லாபஸ்தானத்தை பார்ப்பதும் குரு பார்வை சேர்ந்து அமைவது உங்களின் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். வீட்டு உபகரணம் கட்டுமான பொருட் கள் மூலம் ஆதாயம் கிட்டும். கூட்டு தொழில் சிறு பிரச்சினைகள் உண்டாகும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் செயல்பாடுகள் சிறப்பாக அமையும். ஆடல், பாடல், வசனம், இசை கலை ஞர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும். எதையும் துணிச்சலுடன் செயல்பட்டு நன்மையை பெறுவீர்கள். பொருளாதாரத்தில் சிறந்து விளங்குவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களின் சொந்த விருப்பங்கள் நிறைவேறும். தொழிலில் மேன்மை பெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். திருமண நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவீர்கள். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.

### மாணவர்களுக்கு

மாணவர்களின் கூட்டு முயற்சிக்கு நல்ல பலனை தரும். கூடுதல் நேரம் கல்விக்கு ஒதுக்கி ஆர்வமுடன் படித்து முன்னேறுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

18.08.2016 வியாழன் பகல் 01.22 முதல் 20.08.2016 சனி மாலை 05.37 மணி வரையும்

14.09.2016 புதன் இரவு 09.09 முதல் 16.09.2016 வெள்ளி இரவு 01.34 மணி வரையும்.

### நட்சத்திர பலன்கள்

#### புனர்பூசம் 4ஆம் பாதம்

கவலைகளை மறந்து சிறப்பாக செயல்படுவீர்கள். உங்களை ஏமாற்றியவர்களுக்கு திரும்ப பதில் சொல்லி திருத்தி வாழ வைப்பீர்கள். தொழிலில் நினைத்த படி சிறப்பாக அமையும்.

#### பூசம் 1, 2, 3, 4 ஆம் பாதம்

புண்ணிய தீர்த்தம் நீராடும் வாய்ப்புக் கிட்டும். சொந்த காரியங்களை சிரத்தையுடன் செய்து முடிப் பீர்கள். தொழிலில் முழுமையான ஆர்வம் கொண்டு செயல்படுவீர்கள்.

#### ஆயில்யம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சொன்ன சொல்லை காப்பாற்ற உங்களால் முடிந்த வரை சரியாக செயல்படுவீர்கள். உங்களின் ஆலோசனை பலருக்கு பக்கபலமாக அமையும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: வெண்மை, சிவப்பு, மஞ்சள்

அதிர்ஷ்ட திசைகள் : வடக்கு, வடமேற்கு, மேற்கு

அதிர்ஷ்ட கிழமைகள் : திங்கள், ஞாயிறு, வியாழன்

## ஞானிகளின் கருத்து!

பில்லி, சூன்யம், ஏவல் ஆகிய வற்றில் ஒரு சிறிது உண்மை இருக்கிறது. ஆனால் அத்தகைய ஆராய்ச்சிகள், இறைவனை அடைய விரும்பும் ஆத்மசாதகனுக்கு அவசியம் இல்லாதவை என்பதே ஞானிகளின் கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நற்சிந்தனைகளே! சிறந்த வழிபாடு!

"அத்தனை வகைப் பாவங்களுக்கும் தங்கள் உடலையும் மனத்தையும் அர்ப்பணித்துக் கொண்டவர்கள் அவர்கள்"

தங்கள் கடிவாளத்தை முற்றாகத் தளர்த்திக் கொண்டதில் கொஞ்சமும் அவர்களுக்குக் கூச்ச மில்லை. அவர்களுடைய தீவிர உணர்ச்சிகளும் ஆசைகளும் தறிகெட்டு ஓடுகின்றன. அவர்களைப் பொறுத்தவரை வழக்கமாக உண்ணும் உணவு களைத் தற்காலிகமாகத் தவிர்த்து விடுவதே நோன்பு.

**நோன்பு ஐந்து வகை உணவுகளை உட்படுத்தியிருப்பது. முதலாவது, அறமுறைக்கிணங்கி (தர்மம்) நடப்பதால் கிடைக்கிற மகிழ்ச்சி. இரண்டாவது, தியானத்தில் வருகிற ஒத்திசைவு (harmony), உடலும் மனமும் பொருள் மற்றும் இலக்கின் வழியே காண்பதால் அடைகிற இணக்கம்.**

மூன்றாவது, பிரார்த்தனை. உங்கள் வாயினாலும் மனத்தினாலும் இறைவனிடம் மன்றாடுதல், நான் காவது, உறுதியாகத் தீர்மானித்தல், நின்றாலும் நடந்தாலும் அமர்ந்தாலும் கீழே படுத்திருந்தாலும் தூய்மையையும் நல்லொழுக்கத்தையும் தொடர் வதில் உறுதியாயிருப்பது. ஐந்தாவது, விடுதலை, உலகின் அசுத்தங்களில் இருந்து மனத்தை விடு வித்துக் கொள்வது. இந்த ஐந்தும்தான் நோன்பு கால உணவுகள்.

அறியாமை என்கிற உணவை நீங்கள் உண்ணா மல் நிறுத்திவிட்டு மீண்டும் உண்ண முற்பட்டால் உங்கள் நோன்பு முறிந்து விடும். நீங்கள் நோன்பை முறித்தால் அதன் மூலம் கிடைக்கவிருந்த நன்மை கிட்டாமல் போய்விடும்.

உலகம் மூடநம்பிக்கை கொண்டவர்களால் நிரம்பி வழிகிறது.

வணங்கி வழிபடுதலிலும் அதே கதைதான். நீங்கள் அதன் பொருளுணர்ந்து, சூழ்நிலைகளோடு பொருத்திக் கொள்ள வேண்டும். இதனைப் புரிந்து கொண்டவரே தர்மத்தைப் பின்பற்றுபவராவார். வழிபாடு என்பது பய பக்தியையும் பணிவையும் குறிப்பது. தீய எண்ணங்களைத் துடைத்து. நற் சிந்தனைகளுக்கு உங்களால் இடமளிக்க முடிந்தால் போதும். அதைவிடச் சிறந்த வழிபாடு வேறென்ன. வெளிப்படையாக எதையும் (புறப்பூசை) நீங்கள் செய்ய வேண்டும் என்பதில்லை.

நீங்கள் புத்தரின் கருணையை வேண்டு வதாயின் அதை நீங்கள் சரியாகச் செய்ய வேண்டும். வழிபட்டு இறைஞ்சுவதன் பொருள் என்னவென்று நீங்கள் அறியாவிடில், அதை நீங்கள் தவறாகவே செய்வீர்கள். ஆகவே, உங்கள் நோக்கம் நிறைவேறாது.

"புத்தம்" என்றால் விழிப்புணர்வு. உடலிலோ, மனத்திலோ தீயவை தோன்றாத வண்ணம் தடுக் கின்ற உணர்வு அது. இறைஞ்சுதல் என்பது மனத்துக்கு விடுக்கிற இடைவிடாத அழைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வல்லமையை முழுமையாகப் பயன்படுத்தி, கட்டுப்பாட்டு விதிகளை கடைப்பிடிப்பதற்கான அழைப்பு அது. வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் எண்ணத்தைப் பயன்படுத்தி வேண்டுதல் செய்க.

இறைவனைப் பாடுவதற்கும் (chant), இறைவனிடம் வேண்டுவதற்கும் (invoke) உள்ள வேறுபாட்டை அறிந்திருங்கள். இரண்டும் தனிதனி வாயால் பாடுகிறோம். வேண்டுதலுக்கு மனத்தைப் பயன்படுத்துகிறோம்.

"வேண்டுதல் மனத்தில் இருந்து வருவது
விழிப்புணர்வின் வாசல் அது!
மகான்கள் உள்முகமாய் நோக்கி
வார்த்தைகளைத் தவிர்த்து விட்டார்கள்

அனைத்து நற்பண்புகளுக்கும் மனமே மூலம், அத்தனை ஆற்றல்களுக்கும் மனம் தான் முதன்மை. மனம் ஓய்வில் (தணிவு நிலை) இருக்கும் போது தான் நிர்வாணத்தின் பரமசுகம் வந்தடைகிறது.

"மனமே ஒவ்வொரு உலகுக்கும்
வழிவிடும் கதவாகிறது அதுவே
மறுகரைக்குக் கடந்து செல்ல உதவும்
ஆற்றின் ஆழமில்லாப் பகுதியும்

கதவு எங்கே உள்ளது என்பதை அறிந்தவர்க்கு அதைச் சென்றடைவதில் கவலையில்லை. ஆற்றின் ஆழமற்ற பகுதி எதுவென்று அறிந்தவர்க்கு அதைக் கடப்பதில் தொல்லை இல்லை.

## இயல்பாக வாழ்தல்

தர்மம் என்பது மதம் சார்ந்ததல்ல. மதம் என்பது மெய்மையின் (reality) பொருட்டான மனோபாவம் தர்மம் அப்படியொரு மனோபாவத்தைக் கொண்டதல்ல. அது இயல்பாக வாழ்வதை, புறத்தூண்டல் ஏதுமின்றி தானே இயங்குவதைக் குறிக்கும்.

இயற்கையோடு இணைந்து வாழ்வது தர்மம். அது போதி தர்மரின் அனுபவம். புத்த வழி. ஞானியர் பலரது அனுபவமும் கூட

"கடந்த காலத்தின் பிடியில் சிக்காமல்
எதிர்காலத்தின் மில்வாக்கிற்குட்படாமல்
இந்தக் கணத்தில் வாழ்கிற வாழ்கையது!"

உங்கள் மனம் வகைப்படுத்தலில் இறங்கி விடக் கூடாது என்கிறார் போதி தர்மர்.

தானாக நிகழும் நிலையில் (spontaneity) குறுக்கிடாமல், இயற்கை சார்ந்து வாழ வேண்டும். எளிமையாகவும். செயற்கையானவற்றில் சிக்காமலும் வாழ வேண்டும்.

## மனிதனுக்கு மறுபிறவி உண்டு!

ஆசைகள் உள்ள வரையில் மனிதனுக்கு நிச்சயம் பிறவிகள் உண்டு. உலகப்பற்று கொண்ட மனிதன் தனது சொல், செயல், சிந்தனைகளுக்கு ஏற்ப நல்லதாகவோ கெட்டதாகவோ மறுபிறவியை எடுக்க நேரிடுகிறது. உபநிஷதங்கள், பகவத்கீதை போன்ற இந்து மதப்பிரமாண நூல்களின்படி மறுபிறவி உண்டு என்பது உண்மைதான். மறுபிறவி உண்டு என்ற கருத்தை பௌத்தம் சமணம் ஆகிய மதங்களும் கூட ஏற்றுக்கொண்டிருக்கின்றன. பக்தி செய்வதன் மூலம் முக்தி பெறுபவர்களுக்கும். ஜீவன் முக்தர்களுக்கும் மறுபிறவி இல்லை. மற்றவர்களுக்குப் பிறவிச்சுழல் உண்டு.

ஜென் குரு ஒருவரிடம் யாரோ கேட்டார்கள். "எது தர்மம்?" என்று. "நான் பசியாக உணரும் போது உண்கிறேன், உறக்கம் வந்தால் உறங்குகிறேன்" என்றார் அவர். இதுவே நிகழும் நிலையில் குறுக்கிடாத ஏற்புத் தன்மை. இப்படியொரு பதிலை யாரிடமிருந்தும், யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது.

"இயல்பாக இரு. அதுவே தர்மம்." "அதுவே அந்த ஜென் குரு சொன்னது.

மற்றொரு ஜென் குருவிடம் ஒருவர் கேட்டார், "தாங்கள் ஞானம் பெறுவதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று.

"நான் விறகு பிளப்பேன். கிணற்றில் இருந்து நீர் இறைப்பேன் என்று பதில் வந்தது. அடுத்து, "தற்போது தாங்களும் ஒரு புத்தராகி விட்டீர்கள். என்ன செய்கிறீர்கள்?" என்று கேள்வி கேட்டார் அந்த நபர்.

குரு சொன்னார். "நான் வேறென்ன செய்ய வேண்டும்? விறகு பிளப்பதையும், கிணற்றில் இருந்து நீரிறைப்பதையும்தான் செய்து கொண்டிருக்கிறேன்" என்று.


கேள்வி கேட்டவருக்குத் தலை சுற்றியது. "ஞானம் பெறுவதற்கு முன் செய்த அதே வேலையைத்தான் ஞானம் பெற்ற பின்பும் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதில் என்ன வேறுபாடு இருக்கிறது?" என்று கேட்டார்.

குரு சிரித்தபடி சொன்னார். "மிக் பெரிய வேறுபாடு உள்ளதே! முன்பு நானாக செய்து கொண்டிருந்தேன், தற்போது தானாக நடக்கிறது" என்று.

அழகர் நம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ கோமதியம்மனுக்கு அருள் செய்த சங்கர நாராயணன்!

**மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றால் சிறப்புப் பெற்றது சங்கரன்கோவில் திருத்தலம். சங்கரநாயினார் கோவில் என்றும் அழைப்பார்கள். சிவ, விஷ்னு பேதமின்றி, நாராயணனும் தம்முள் அடக்கம் என்பதை சிவன் பாதி, நாராயணன் பாதியாகத் தமது வாம பாகத்தில் நாராயணனையும் காட்டி, அற்புதக் காட்சி கொடுத்த திருத்தலம் சங்கரன்கோவில். தென்காசி விருதுநகர் புகையிரத பாதையில் இருக்கிறது. சாலை வழியாகச் செல்வது என்றால் ராஜபாளையத்திலிருந்து 32 கி. மீ திருநெல்வேலியிலிருந்து 40 கி. மீ. இவ்வூரை ஆவுடையம்மன்கோவில், தவக கோயில் என்று குறிப்பிடுவதுண்டு.**

இப்பகுதியில் பஞ்சபூதத் தலங்களில் நிலம் தொடர்புடைய பிருத்வித் தலமாகக் கருதப்படுகிறது. சங்கரன் கோவில் ஆலயத்தில் சங்கரலிங்கஸ்வாமி சந்நிதி உட்புறத்தில் புற்றுமண் இருக்கிறது. இந்தப் புற்று மணலில் சிறிது உடலில் பூசிக்கொள்ள, நோய் அனைத்தும் குணமாகும் என்று நம்பப்படுகிறது. இப்புற்று மண்தான் இங்கு பிரசாதம்!

இத்தலத்திற்கு அருகிலேயே உள்ள கரிவலம் வந்த நல்லூர் அக்னித் தலமாகக் கருதப்படுகிறது. காட்டு யானை வேலி அமைத்து வலம் வந்து ஈசன் பால்வண்ண நாதரையும், தேவி ஒப்பனை அம்பாளையும் வணங்கிய தலம். இத்தலத்தை ஒட்டிய தாருகாபுரம் நீர் தொடர்புடைய அப்பு ஸ்தலமாகும். அகிலாண்டேஸ்வரி சமேத மத்தியஸ்தநாதர் இத்தலத்து இறைவன். மூவேந்தருக்கிடையே உண்டான மனக் கசப்பை நேரில் காட்சியளித்து தீர்த்து வைத்ததாக ஐதீகம். இத்தலத்தை ஒட்டிய தென்மலை வாயு ஸ்தலமாகும்.

சிவ பரிபூரணி சமேத திரிபுரநாதர் இத்தலத்து இறைவன் கருவறையில் உள்ள தீபம் காற்றில் அசைந்து ஆடினாலும் கூட தீபம் அணையாமல், அலை பாயாமல் எரிந்து கொண்டிருப்பது இத் தலத்தில் ஓர் அற்புதக் காட்சி நச்சாடை தவிர்த்த நாதர், தேவி தவம் பெற்ற நாயகி கோயில் கொண்டிருக்கும் தேவதானம் ஆகாயத்தலம். சிவலிங்கத்தில் ஆவுடையார் மட்டுமே இருப்பது இத்தல விசேஷம்.

அன்னை உமாதேவியார் இறைவனிடம், விஷ்ணுமூர்த்தியோடு அவர் பொருந்தியிருக்கும் அற்புதக் காட்சியைத் தமக்கு காட்டியருள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்ணுவும், தானும் வேறில்லை, குற்றமற்ற தவம் செய்தால்தான் அந்த வடிவத்தைக் காண முடியும். ஆதலால் அகத்திய முனிவர் இருக்கும் பொதிகை மலைக்கருகில் புன்னைவன் க்ஷேத்திரத்தில் இறைவனை நினைத்துத் தவம் செய்கிறார். தேவிக்கு வாக்களித்தபடியே இறைவன் சங்கரநாராயணன் என்ற திருப்பெயரோடு வலப்பாகம் கங்கையைத் தரித்த ஜடைமுடியும், நாக குண்டலமும், சந்திரகிரகணம் போன்ற



விபூதியும், மழுவாயுதமும், சர்ப்பாரணமும், கொன்றை மாலையும் புலித்தோலும், சர்ப்பமாகிய வீரக்கழலுமாகவும், இடதுபாகம் இரத்னகிரீடமும், மகர குண்டலமும், சக்கராயுதமும், பொற்பூணூலும், துளசிமாலையும், பீதாம்பரமும் சூடிய நாராயணனாகவும் காட்சியளித்தார்.

கோமதி அம்மன் தவம் செய்து சங்கரநாராயணர் திருஉருவத்தைத் தரிசித்ததை நினைவு கூறும் வாயிலாக ஆண்டுதோறும் இந்த ஆலயத்தில் ஆடித்தபசு உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இக்கோயில் சங்கரலிங்கஸ்வாமி கோயில், கோமதி அம்பாள் கோயில், சங்கர நாராயணர் கோயில் என்ற மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டது. சங்கரலிங்க ஸ்வாமி சந்நிதிக்கும், கோமதியம்மை சந்நிதிக்கும் இடையில் சங்கரநாராயணர் சந்நிதி இருக்கிறது. பூலித்தேவர் கட்டிய உட்கோயிலில் இந்தக் கோயில் இருக்கிறது. அழகிய மரவேலைப்பாடுகளுடன் கூடிய கோயில் பார்க்கப் பரவசமூட்டுகிறது.

கோமதி அம்மன் சந்நிதியில் தேவியின் திரு உருவம் முன்பு மந்திரச்சக்கரம் ஒன்றைப் பதித்திருக்கிறார்கள். திருவாவடுதுறை ஆதீனத் தலைவரால் இச்சக்கரம் பதிக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். இத்தலத்தில் அன்னை கோமதியம்மன், நோய்வாய்ப்பட்டவர்களையும், பேய், பிசாசு போன்ற தீயசக்திகளால் சித்தப்பிரமை அடைந்தவர்களையும் குணப்படுத்துவதாகவும், இவ்வாறு மனநோய் கொண்டவர்கள் பலர் வந்து இங்கு குணமடைந்திருப்பதாகவும் கூறினார்கள்.

அன்னை பார்வதி தேவியே இத்தலத்தில் தவம் செய்து சிவபிரானை வழிபட்டு வந்ததால் இத்தலத்தில் தவம் செய்தல், யாகம், ஹோமம் போன்றவை செய்தல், சிவபஞ்சாக்ஷரம், வேதம் ஓதுதல், சிவனடியார்களுக்கு தான் தருமம் செய்தல் போன்ற புண்ணியச் செயல்களுக்குப் பல மடங்கு பலன் உண்டாகும் எனத் தலபுராணம் தெரிவிக்கிறது.

இத்தீர்த்தத்தில் நீராடி, கோயிலில் உள்ள புற்று மருந்தைச் சிறிது வாயிலிட விஷ நோய்கள், குன்மம், தீராத வயிற்றுவலி போன்றவை குணமாகும் என்பது நம்பிக்கை. சித்திரை மாத்திலும், ஆடி மாத்திலும் இத்தீர்த்தத் தில் நீராடுவதைச் சிறப்பாகக் கருதுகிறார்கள். சோம வாரத்தோடு வரும் அமாவாசை நாளில் இத்தீர்த் தத்தில் நீராடுவதும் சிறப்பு.

K. குருமூர்த்தி



## மன ஒருமைப்பாடு

ஒரு நல்ல மாணவன் தேர்வு எழுதும்போது மனதை எப்படி ஒருமுகப்படுத்துகிறானோ, மற்ற நினைவுகளைத் தவிர்க்கிறானோ அதுபோல் இறை வழிபாட்டிலும் செய்தால் போதும். சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பார்கள். அதுபோல் நீண்ட காலப் பழக்கத்தாலேயே மனம் ஒரு முகப் பட்டுத் தியானத்திற்கு ஏற்றதாக ஆகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மம்

**துர்முகி ஆண்டு ஆவணி மாதம்**
**17.08.2016 முதல் 16.09.2016 வரை**



தைரியமும், துணிச்சலும் கொண்டு செயல்படும் சிம்மராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு நற்பலன்களை அள்ளி தரும் காலம். தொழில் ஸ்தானத்தை பார்ப்பது பதவி உயர்வு, பண பலன்கள் பெறும் வாய்ப்பு அமையும்.

### பணியாளர்களுக்கு

பணி புரியுமிடத்தில் உங்கள் மீது அனைவரும் மதிப்பும் மரியாதையும் செலுத்துவார்கள். எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் அனைவருடனும் இணைந்து செயல்படுவது மகிழ்ச்சியை தரும். பதவி உயர்வும் பண பலன்களும் கிட்டும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது கருத்துகளை சொல்வதில் உங்களுக்கு தனி திறமை உண்டாகும். பேச்சாற்றலும், தெளிவான முடிவுகளும் அனைவரையும் சிந்திக்க செய்யும். எடுக்கும் முடிவுகளில் நேர்மையும் உறுதியும் இருக்கும். வரும் காலம் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

உங்களின் தொழிலில் ஸ்தானத்தை குரு பார்வை இடுவது விரும்பிய தொழில் வாய்ப்பு அமையும். ஆடம்பர பொருட்கள் ஃபேன்ஸி பொருட்களின் விற்பனையில் ஆதாயம் பெறுவீர்கள்.. சுறுசுறுப்பாக செயல்பட்டு வருமானத்தை பெருக்கி கொள்வீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினருக்கு வளர்ச்சியை தரும் காலமாக அமையும். தொழிலில் ரீதியான வெளியூர் பயணம் பயனுள்ளதாக அமையும். நிர்வாக திறன் கொண்டு எல்லாவற்றையும் முறைப்படுத்தி சிறப்பாக செயல்படுவீர்கள். பொருளாதாரம் மேன்மையை தரும்.

### பெண்களுக்கு

பெண்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு பக்கபலமாக இருந்து செயல்படுவீர்கள். பொது நலனில் ஆர்வம் கொள்வீர்கள். சுயதொழிலில் மாற்றம் செய்து வருமானம் பெறுவீர்கள்.

### மாணவர்களுக்கு

கல்வியில் நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள். ஆசிரியரின் ஆதரவு கிட்டும். அரசியல் சட்டம் அறிவியல், கணணி கல்வி சிறப்பாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

20.08.2016 சனி மாலை 05.38 முதல் 22.08.2016 திங்கள் இரவு 08.28 மணி வரையும்

16.09.2016 இரவு 01.35 முதல் 19.09.2016 திங்கள் அதிகாலை 04.33 மணி வரையும்

### நட்சத்திர பலன்கள்

**மகம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

மெதுவாக செயல்பட்ட காரியம் இனி விரைவாக செயல்படும். உங்களிடம் எதையும் எதிர்பாராமல் சிலர் உதவிக்கு வந்து உதவுவார்கள்.

**பூரம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் தீரும். பணம் பலத்தை பெருக்கி கொள்வீர்கள். வசதிகளை ஏற்படுத்திக் கொண்டு வளமான வாழ்வையடைவீர்கள்.

**உத்திரம் 1ஆம் பாதம்**

தொடர்ந்து கடன் தொல்லையை அடைந்து வந்த நீங்கள் அதிலிருந்து படிப்படியாக விடுதலை பெறுவீர்கள். சுப காரிய நிகழ்ச்சியில் உங்களுக்கு சாதகமான தகவல் கிடைக்கும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: சிவப்பு, வெண்மை, மஞ்சள்

அதிர்ஷ்ட திசைகள் : கிழக்கு, தென்கிழக்கு, வடக்கு

அதிர்ஷ்ட கிழமைகள் : திங்கள், வியாழன், ஞாயிறு



### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்


சனிக்கிழமைகளில் விநாயகரையும், ஆஞ்சநேயரையும் தொடர்ந்து வழிபாடு செய்து வர கஷ்டம் நீங்கி தொழில் சிறப்பாக அமையும்.

### தெய்வ உருவங்களை வழிபடலாம்!

தெய்வப்படங்களை வணங்கக் கூடாது என்று சொல்வது அறியாமை. தெய்வ உருவங்களை எல்லா நிலையிலும் வழிபடலாம். சர்க்கரையில் செய்த தின்பண்டத்தை எந்தப் பக்கம் கடித்துச் சாப்பிட்டாலும், அது இனிப்பாகத்தான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரவில் தியானம்!

தியானம் எப்போதும் செய்யலாம். தியானம் செய்வதே விசேடம். அதுவும் பிரம்ம முகூர்த்தம் எனப்படும் விடியற்காலையில் தியானம் செய்வது இன்னும் விசேடம். இரவில் தியானம் செய்வது அதைவிட விசேடம்.

ஆன்மீக வாழ்க்கையின் சுவையை அறிய விரும்புபவர்கள், இரவில் தியானம் செய்தால் அதை அறியலாம்.

வேத காலத்தில் வாழ்ந்த ரிஷிகள் இரவும் பகலும் ஜபத்தில், தியானத்தில், பிரார்த்தனையில் ஆழ்ந்திருந்தார்கள்.

அவர்களில் சிலர் சூரியன் உதித்ததும் அதிகாலையில் தங்கள் குடிலை விட்டு நீங்கித் தவம் செய்வதற்குக் காடுகளுக்கோ, ஆற்றங் கரைகளுக்கோ செல்வதைத் தங்கள் அன்றாட வழக் கமாகக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்குப் பகல்பொழுது முழுவதும் தியானத்திலேயே கழியும், சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில்தான், அவர்கள் தங்கள் குடில்களுக்குத் திரும்புவார்கள், திரும்பி வரும் வழியில் கிடைத்த கனிகள், உலர்ந்த சருகுகள், உதிர்ந்த கனிகளை உட்கொண்டு அவர்கள் பசியைத் தணித்துக் கொள்வார்கள். இரவு மட்டுமே அவர்கள் தங்கள் குடிலில் தங்குவார்கள். மீண்டும் பொழுது புலர்ந்ததும், அவர்கள் தாங்கள் வழக்கமாகத் தவம் புரியும் இடத்துக்குச் சென்று தவத்தில் ஆழ்ந்து விடுவார்கள். இவ்விதம் அவர்கள் பல காலம் செய் தார்கள், வாழ்நாள் முழுவதும் செய்தார்கள். அதன் பயனாக அவர்கள் பரம்பொருளை அனுபூதியில் உணர்ந்தார்கள், அனுபூதிமான்கள் ஆனார்கள், மகான்கள் ஆனார்கள், மனித வாழ்க்கையில் பெறத் தக்க மிகப் பெரிய பேறாகிய கடவுள்நிலையை அடைந்தார்கள்.

பகவான் புத்தர் மெய்ப்பொருளை அடைய நாட்டம் கொண்டார். தவம் செய்ய முற்பட்டபோது அவர், "இந்த உடல் இங்கேயே வற்றினாலும் சரி, நான் நிர்வாணமடையாமல் இங்கிருந்து எழுந்தி ருக்க மாட்டேன்" என்று உறுதியாகச் சங்கல்பம் செய்து கொண்டு தவத்தில் உட்கார்ந்து விட்டார்.

அவர் இயற்றிய அந்தக் கடுந்தவம், அவரை ஞானப் பேற்றுக்குத் தகுதி உடையவராக்கியது. அந்த நிலையை அடைவதற்கு முன்பு அவர் எத்தனையோ இரவுகள், எத்தனையோ பகல்கள் தியானத்திலேயே கரைந்து இருந்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம் நித்தியமானது!



வாழ்க்கையில் நாம் வெற்றி பெறத்தான் வேண்டும், ஆனால் அந்த வெற்றி அறத்தின் வெற்றியாக இருக்கவேண்டும். அறத்தைப் பின்பற்றியதால் நாம் அடைந்த வெற்றியாக இருக்க வேண்டும்.

தர்மம் நித்தியமானது, சத்தியம் நித்தியமானது. தர்மத்திற்கும் சத்தியத்திற்கும் நற்செயல்களுக்கும் ஒரு போதும் அழிவு என்பதே இல்லை.

தர்மத்தைப் பின்பற்றுவது காரணமாகத் தற்காலிகமாகத் துன்பங்கள் நேர்வது உண்டு. ஆனால் முடிவில் நித்தியமான சுகம் தர்மத்தைப் பின்பற்றுபவனுக்கே உரியது. "தருமத்தைச் சூது கவ்வும்", பின்பு தருமம் மறுபடியும் வெல்லும்" என்பான் பாட்டுக்கொரு புலவன் பாரதி.

நமது ஆத்மா அழியாதது, நமது உடல் அழியக் கூடியது. அழியும் உடலுக்குச் சுகம் தேடும் பொருட்டு அதர்மத்தைப் பின்பற்றி, ஆத்மாவுக்குக் கேடு விளைவிக்கக் கூடாது.

தீய செயல்கள், தீய சிந்தனைகள், தீய பேச்சுக்கள் ஆகியவற்றால் ஆத்மாவுக்குக் கேடு விளைவிப்பது, அடுத்தடுத்து மீண்டும் மீண்டும் பிறப்புக்கும் இறப்புக்கும் பந்தத்துக்கும் நம்மை அலைக்கழிக்கும். இவ்விதம் அதர்மத்தால் தங்களுக்குத் தாங்களே கேடு விளைவித்துக் கொள்பவர்களைத் "தற்கேடர்" என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடுகிறது.

"தன் ஆத்மாவையே இழந்து உலகம் முழுவதையும் பெற்றால்தான் என்ன பிரயோஜனம்?" என்கிறது கிறிஸ்தவம்.

"எவர் நல்லவற்றுக்காகப் பரிந்து பேசுகிறாரோ அவருக்கும் அதில் பங்குண்டு. அவ்வாறே எவர் தீயவற்றுக்காகப் பரிந்து பேசுகிறாரோ அவருக்கும் அதில் பங்குண்டு" என்பது திருக்குரான் வாக்கு.

"தர்மோ ரக்ஷதி ரக்ஷத" என்கிறது வால்மீகி ராமாயணம். இதற்கு, "தர்மத்தை நாம் வாழ வைத்தால், தனது பங்காகத் தர்மமும் நம்மை வாழ வைக்கும். தர்மத்தை நாம் அழித்தால் தர்மம் நம்மை அழித்துவிடும்" என்று பொருள்.

எனவே அறம் என்ற உயர்ந்த வேள்வியை நாம் வளர்க்க வேண்டும். நல்ல காரியங்கள் நிறையச் செய்ய வேண்டும்," நாமாக நாடிப் போய்ச் செய்ய வேண்டும். ஆரோக்கியமான எண்ணங்கள் நம்மிடம் அமைய வேண்டும். இயன்ற வகைகளில் எல்லாம் தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும். அது உயிருக்கு ஆக்கம் தந்து முடியில் நம்மை அமரத்துவம் பெறச் செய்யும்.

நாமெல்லாம் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த நாட்டில் பிறந்தவர்கள். கம்பனிடம் ஆழ்ந்த மதிப்புக் கொண்டவர்கள். ராமகாதையைத் தமிழில் பாடிய கம்பன் தமது முடிந்த முடிவாக, "அறம் வெல்லும், பாவம் தோற்கும்" என்கிறார். இதுவே ராமகாதையின் சாரமாகும். மகாபாரதம் முழுவதும் அறத்தின் வெற்றியாகவே கொண்டாடப்பெறுகிறது. "தர்மம் தலைகாக்கும்" என்பது உண்மை, முழு உண்மை முலாம் பூசப்படாத உண்மை.

"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும் அறியாமை என்று அறிதல் வேண்டும்" என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

பிறருக்கு நாம் உதவ வேண்டும், அதைச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாவிட்டால் பிறருக்கு உபத்திரவமாவது செய்யாமல் இருக்க வேண்டும்.

இந்தக் கருத்தைப் புறநானூறு, "நல்லவை செய்தல் ஆற்றீராயினும் அல்லவை செய்தல் ஒம்புமின்!" என்று அழகுபடக் கூறுகிறது.

நமக்கு வாய்த்துள்ள கடமைகளையெல்லாம், "கடவுளுக்குச் செய்யும் தொண்டு" என்ற எண்ணத்தில் நாம் செய்து வரவேண்டும். இறைவனுக்குப் பிரியமான வகையில் நாம் வாழ வேண்டும். அதுவே நம் உயிர் உய்வு பெறுவதற்கு உரிய வழியாகும்.

சுகமும் துக்கமும் அநித்தியமானவை, ஆத்மாவோ நித்தியமானது. அநித்தியமான இன்ப துன்பங்களுக்காக நித்தியமான ஆத்மாவை நாம் விற்றுவிடக் கூடாது. நித்தியமான ஆத்மாவைத் தற்காலிக அற்ப சுகங்களுக்காக நாம் இழக்கவும் பலியிடவும் கூடாது. காமம், பயம், பேராசை ஆகியவற்றுக்கு ஆட்படுவது காரணமாக மனிதன் அதர்மம் செய்கிறான். எனவே இவற்றில் எச்சரிக்கை மிக மிகத் தேவை.

"பாம்பு, தேள் முதலிய விஷ ஜந்துக்கள் வசிக்கும் வீட்டில் வாழ்பவர்கள் எப்போதும் எச்சரிக்கையாகவே இருப்பார்கள். அதுபோல் மனிதனும் உலகில் மாயைக்குப் பலியாகிவிடாமல் எச்சரிக்கையாக வாழ வேண்டும்" என்ற பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசத்தையும் நம் நினைவில் எட்டிப் பார்க்கிறது.

சிவாலயங்களில் சிவன் சன்னதிக்கு எதிரில் நந்தி இருப்பதைப் பார்க்கிறோம். நந்தி, சைவ சமயத்தில் தர்மத்தைக் குறிப்பிடுகிறது. இது, தர்மத்தின் வழியில் சென்றால்தான் நாம் இறைவனை அணுக முடியும் என்பதை உணர்த்துகிறது.

வடமொழியிலுள்ள "தர்" என்ற வேர்ச்சொல்லியிருந்து "தர்மம்" என்ற சொல் வந்துள்ளது. இதற்குத் "தாங்கியிருக்கும் அடிப்படை இயல்பு" என்று பொருள். ஒரு பொருளின் அடிப்படையான இயல்பு எதுவோ, அதுவே அந்தப் பொருளின் தர்மமாகும். இந்து தர்ம சாஸ்திரங்களில் முக்கியமானவை மனு ஸ்மிருதி, பராசர ஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி ஆகியவையாகும். இவற்றுடன் சாணக்கியன் இயற்றிய அர்த்தசாஸ்திரத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

# மாயையை வெல்லும் உபாயம்!



பகவான் ஸ்ரீகிருஷ்ணர், குணமயமான எனது தெய்வீக மாயை கடத்தற்கரியது. ஆனால் என்னை எவர் பக்தியுடன் வழிபடுகிறார்களோ, அவர்கள் மாயையைக் கடப்பார்கள் என்று கூறியுள்ளார். மாயையைக் கடப்பதற்கு எளிய வழி பகவானை வழிபடுவதுதான். மனமுருகிய பிரார்த்தனையும், தீவிர ஆத்மசாதனையும் இருந்தால் குருவருளாலும் திருவருளாலும் மாயையைக் கடக்க முடியும்.

ஸ்மிருதிகளில் நிரந்தரமாக எல்லாக் காலங்களுக்கும் பொருந்தும் உண்மைகளும் உண்டு, குறிப்பிட்ட சில காலங்களுக்கு மட்டும் பொருந்தும் சில உண்மைகளும் உண்டு.

ஒரு பெரிய கட்டிடத்தை அதன் அஸ்திவாரம் தாங்குகிறது. அது போல் தனி மனித வாழ்க்கைக்கும், சமுதாய நலனுக்கும் அஸ்திவாரம் போன்ற ஒழுக்க நெறிகளை இந்து தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மனிதன் மெல்ல மெல்ல உயர்ந்து இறுதியில் சென்றடைகிற இடம் ஆன்மீகம், அதற்குத் தர்மம் என்ற ஒருவழிப்பாதை மட்டுமே உண்டு.

**அறிமின் அறநெறி, அஞ்சுமின்கூற்றம்,**
**பொறுமின் பிறர்கடுஞ் சொல், போற்றுமின் வஞ்சம்"**
**வெறுமின் வினைதீயார் கேண்மை,**
**எஞ்ஞான்றும்**
**பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.**

● சுவாமி கமலாத்மானந்தர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஸ் பிரவுண் ஒரு ரோமன் கத்தோலிக்கப் பெண். அவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர். தெய்வ மாகப் போற்றி வந்த அவரது அன்னை இறந்து விட்டார். அதனால் பிரவுண் அடைந்த துன்பம் அளவிட முடியாது. அவர் ஆறுதல் தேடி ஒரு கத்தோலிக்கப் பாதிரியாரிடம் சென்றார். அந்தப் பாதிரியார் "உன் அன்னை பரலோகத்தில் வாழ்கிறார், இதில் நம்பிக்கை வைத்து மன ஆறுதல் கொள்வாயாக" என்று கூறி சமாதானப்படுத்தினார். அது அப் பெண்ணின் துன்பத்தை அதிகப்படுத்தியதே தவிர குறையவில்லை.

பிறகு அவர் ஆவிகள் மூலம் ஆறுதல் பெறலாம் என்ற நம்பிக்கையில் ஜெரால்டைன் கம்மினஸ் என்ற மீடியத்தின் உதவியை நாடினார். கம்மின்ஸ் உய்ஜா போர்டின் மூலம் அப்பெண்ணைத் தன் அன்னையுடன் பேசச் செய்தார். அன்னையின் ஆவி பிரவுணிடம், "நான் இறந்த சில நாட்களுக்கெல்லாம் நீ தற்கொலை செய்து கொள்ளத் துணிந்துவிட்டாய். அதை நினைத்து நான் மிகவும் வருந்தினேன்" என்று கூறியது. மிஸ் பிரவுண் அன்னையைப் பார்க்க முடி யாததால் இனி வாழ்வதில் பயனில்லை என்று எண்ணித் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்ததை ஒப்புக் கொண்டார். அதைத் தொடர்ந்து பலமுறை அன்னையுடன் தொடர்பு கொண்டார். சில நாட்களிலேயே மிஸ் பிரவுண் சகஜ நிலைக்கு வந்து விட்டார். பின்னர் அவர் வாழ்க்கை வெற்றியும், மகிழ்ச்சியும் நிறைந்ததாகவே அமைந்தன.

**மம்மியின் சாபம்**: இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பத்திரிகை அதிபர் ஒருவர் ஓர் எகிப்திய சமாதியைக் கொள்ளையிட்டார். அந்த சமாதியில் இருந்த ஆண் மம்மியை இங்கிலாந்தில் உள்ள தன் வீட்டுக்கு ஒரு ஞாபகச் சின்னமாக எண்ணி கொண்டு வந்து விட்டார். அது 3000 ஆண்டுகளுக்கு முன் புதைக்கப்பட்ட சடலம். அதைப் பரிசோதனை செய்து பார்த்தபோது அதன் மேல் உறையில் எழுத்துகள் காணப்பட்டன. அவை ஹீரோக்ளிபிக்ஸ் மொழியில் எழுதப்பட்டிருந்தது. அதில் "என் உடல் புதைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து அதை எடுத்துச் செல்பவன் பலமான தாக்குதலால் மரணம் அடைவான். அவன் உடல் புதைக்கப்படும் இடம் கண்டுபிடிக்கப்படாமலே போய்விடும்" என்று எழுதியிருந்தது. இதை அந்தப் பிரபு ஏளனம் செய்தார்.

சில காலம் கழித்து அவர் ஆபிரிக்காவின் மத்தியப் பகுதியில் உள்ள காடுகளுக்கு வேட்டையாடச் சென்றார். ஒரு நாள் மாலை அவரும், அவருடன் வந்தவர்களும் ஒரு பெரிய ஆற்றின் கரையில் கூடாரம் அமைத்துத் தங்கினர். மறுநாள் வெயில் மிகவும் கடுமையாக எரித்தது. வெப்பம் அதிகமாக இருக்கிறது. நான் சிறிது தூங்குகிறேன் எனக்கூற அவருடைய நண்பர்கள் அவரைக் கூடாரத்தில் தனியே விட்டுவிட்டு வேட்டைக்குச் சென்றனர். அன்று மாலை வேட்டை முடித்து திரும்பி வந்தவர்கள் கூடாரம் முழு வதும் உருத்தெரியாமல் அழிக்கப்பட்டுக் கிடந்ததைக் கண்டு திடுக்கிட்டார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில காட்டு யானைகள் கூடாரத்துக்குள் புகுந்து அங்கு தூங்கிக் கொண்டிருந்த பிரபுவை மிதித்துக் கொன்று விட்டன. அவர் நண்பர்கள் அவரது உடலை ஓர் சோகத்துடன் இங்கிலாந்து கொண்டு வந்து சேர்த் தனர். செய்தி அறிந்த அவர் மனைவி அவர் உடலை இங்கிலாந்திலேயே புதைக்க விரும்பி சடலத்தைப் பாதுகாப்பாகக் கொண்டு வர ஆபிரிக்காவுக்கு ஆட் களை அனுப்பினார். அவரது பிணத்தைப் புதைத் திருந்த உயரமான மணல் மேடு அடையாளம் காண முடியாதபடி முற்றிலும் அழிவுற்றிருந்தது. கடும் மழை பெய்து ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட் டுவிட்டது. அச்சடலம் எவ்வளவு முயன்று தேடி யும் கண்டுபிடிக்க முடியாது போனது. மம்மியின் சாபம் நிறைவேறியது.

**ஆவிகள் வேறு, மன ஆற்றல்கள் வேறு:** ஆவிகள் உளவென்பதற்கு இவைபோன்ற தெளி வான ஆதாரங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. எனினும், "ஆவிகள் என்று தனியாக ஒன்றும் கிடை யாது. அசாதாரண சம்பவங்கள் எல்லாம் மனதின் செயல்பாடுகளே" என்று வாதிடும் அறிஞர் பெருமக் களும் இல்லாமலில்லை.

**ஒவ்வொருவர் மனங்களிலும் புதைந்து கிடக்கும்:** 1. தொலைமனத் தொடர்பாற்றல் (டெலி பதி), 2. அறிவுக்கப்பாற்பட்ட அபூர்வமான சக்தி (ஈ.எஸ்.பி) இவை இரண்டுமே உலகில் நடக்கும் வியக் கத்தக்க உன்னதமான நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்த இரண்டு ஆற்றல்களைக் கொண்டும் கிட்டத்தட்ட ஆவிகள் மூலம் நாம் பெறும் எல்லா பயன்களையும் பெற முடியும். ஆகை யால் அவரவர் ஆராய்ச்சிகள் பற்றிச் சிந்திப்பது அவசியம். •



## இளமையில் ஆன்மீகப் பண்புகள்!

அதிகாலையில் சூரியன் உதிப்பதற்கு முன்பு கடைந்தெடுக்கப்படும் வெண்ணெய்தான் சிறந்தது. சூரியன் உதித்த பிறகு கடையப்படும் வெண்ணெய் அவ்வளவு சிறந்ததல்ல. அதுபோல் இளமையி லேயே தவ வாழ்க்கையில் ஈடுபடுபவர்கள் அதிகா லையில் கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெயை போன்றவர்கள். மற்றவர்களோ பகலில் கடையப் படும் வெண்ணெய் போன்றவர்கள். செங்கல், ஓடு ஆகியவற்றின் மீது பெயர் சின்னம் போன்ற வியா பார முத்திரையைப் பதியவைத்துச் சுட்டால், அந்த முத்திரை அவற்றின் மீது என்றென்றும் பதிந்தி ருக்கும். அதுபோன்ற இளைஞர்கள் உலக வாழ்க் கையில் ஈடுபடுவதற்கு முன்பே, ஆன்மீகப் பண்பு என்ற முத்திரையைத் தங்கள் இதயத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அவ்விதம் செய்தால் அவர்கள் பந்தத்தில் சிக்கிக் கொள்ள மாட்டார்கள்.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராசிகளின் குணமறிந்து பலன் பார்க்க வேண்டும்

ராசிகள், சர ராசி, ஸ்திர ராசி, உபய ராசி என்று மூன்று தன்மைகளை உடையவர்கள் மற்றும் இங்கு குணம் என்று ஒன்று உண்டு. அதாவது ரஜோ குணம், சாத்துவ குணம், தாமஸகுணம் என்று உண்டு. இந்த ராசிகளின் குணங்கள் தான் அங்குள்ள கிரஹகத்துக்கு தடையை கொடுக்கிறது என்பது உண்மை. அதை அறிந்து பலன் பார்க்க வேண்டும்.

### சர ராசிகள்


இந்த சர ராசிகள் ஜாதகர்களுக்கு ஜோதிடம் சொல்வது மிக சுலபம். இவர்கள் வாழ்க்கையை வெகு சிறப்பாக ஏற்றுக்கொள்வார்கள். இவர்கள் சீர்திருத்தங்கள், மாற்றங்கள் இவைகளை வரவேற்பார்கள். புதிய எண்ணங்கள் (Idea) அல்லது காரியங்கள் (action required) துரிதமாக நடக்க செய்யவேண்டிய காரியங்கள் என்பதை வரவேற்பார்கள். வாழ்க்கையில் வரும் இன்னல் களும் இடையூறுகளும் தான் வாழ்க்கையை உயர்த்தும் என்பார்கள்.



### ஸ்திர ராசிகள்

இவர்களுக்கு என்ன பலிதம் சொன்னாலும் ஒன்றும் நடக்கவில்லை. எதுவும் நடக்க போவதாக தெரியவில்லை என்ற சொற்கள் அதிகமாக சொல் வார்கள். இவர்கள் மாற்றங்களை அதிகமாக விரும்பமாட்டார்கள்.

இவர்களுக்கு ஜோதிடம் சொல்லுவது கடினம். இவர்களும் ஜோதிடர்களை நாடமாட்டார்கள். இவர்கள் நடக்கவில்லை என்று சொல்வது இவர்கள் மாற்றங்களை விரும்ப மாட்டார்கள் என்பதுடன் சேர்கிறது.



இவர்களுக்கு மாற்றம் என்றால் ஒரு அலர்ஜி என்று சொல்ல வேண்டும். அப்படியும் ஒரு மாற்றம் வந்தால் அந்த மாற்றத்தை பற்றி பல நாட்கள் சிந்தித்து அதில் செயல்படுவார்கள். பல விடயங்கள் வாழ்க் கையில் நடக்கும் ஆனால் எதையும் முழுமனத்துடன் ஏற்றுக்கொண்டதாக சொல்லமாட்டார்கள். இவர்கள் எதையும் தள்ளி போட்டுக் கொண்டு போவார்கள். பழைய பஞ்சாங்கம் மாதிரி இருப் பார்கள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவர்களிடம் காரியங் களை செய்ய ஒரு முடிவான நாளை சொல்ல வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் ஒரு முடிவுக்கு வருவார்கள். இவர்கள் எல்லா காரியங்களிலும் தாமதம் செய்வார்கள். இதில் ரிஷபம், மிக தாமதம், சிம்மம் சரி செய்வோம் என்று கிளம்புவார்கள். விருச்சிகம் போட்டியு டன் தாமதம் செய்வார்கள்.

**கும்பம்**

அவர்கள் எப்படி விரும்புகிறார்களோ அப்படி செய்ய ஆசைப்படுவார்கள். ஒரு இடத்திலிருந்து கிளம்பாமல் தாமதம் செய் வார்கள். ஆனால் கிளம்பிவிட்டால் போக வேண்டிய இடம் போய் அங்கு தங்கிவிடு வார்கள். உடன் கிளம்ப மாட்டார்கள்.





## வசிஷ்ட மகரிஷியின் வாக்கு!

இந்த உலகில் பொருளைச் சேர்ப்பதை விடத் தவத்தைச் சேர்ப்பதுதான் சிறந்தது, உயர்ந்தது, மிகமிக மேலானது, உத்தம மானது, தலையாயது. யார் இந்த உலகின் பொருள்களைச் சேர்ப்பதை விட்டொ ழிக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாத் துன்பங்களும் நீங்குகின்றன. பொருளைச் சேர்ப்பவன் எவனும் இன்பமாக இருக்க முடியாது. அந்தணர்கள் எத்தனைக்கு எத்தனை பிறரிடமிருந்து பொருளைப் பெறு வதை விட்டொழிக்கிறார்களோ, அத்த னைக்கு அத்தனை அவர்களுடைய பிரம்ம தேஜஸ் அதிகரிக்கிறது. தராசின் ஒரு பக்கம் "வேண்டாம்" என்ற தன்மையையும், இன்னொரு பக்கம் மகா சாம்ராஜ்யத்தையும் வைத்தால் "வேண்டாம்" என்ற தன்மை உள்ள தட்டுதான் கீழே இறங்கும்" என்று, வசிஷ்ட மகரிஷி கூறியுள்ளார்.

**உபய ராசிகள்**

இவர்கள் கஷ்டத்துக்கு என்று பிறந்தவர்கள். அதனால் இவர்கள் ஜாதகங்களை பார்த்து பலிதம் சொல்லும் பொழுது கெட்ட விடயங்களை அதிக மாக சொல்லக்கூடாது. ஏன் என்றால் இவர்கள் அந்த கெட்ட விடயங்களை மனதில் வைத்து கொண்டு தங்கள் வாழ்க்கையே நசிந்துவிட்டது என்று எண்ணுவார்கள்.

இவர்கள் அதிகமாக சிந்தித்துக்கொண்டே இருப் பார்கள். அதனால் காரியத்தில் கவனக்குறைவு ஏற்படும். அதை எண்ணி வருந்துவார்கள். எந்த காரியத்தையும் புத்தியின், சக்தியை கொண்டு சாதிக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். இதில் மிதுன உபய ராசிகள் ஓர் அளவுக்கு காரியங்களை நடத்திக் கொண்டு போவார்கள் மேலும் இவர்கள். ஆகாச கோட்டை கட்டிக்கொண்டு தன்னுடைய காலத்தை எப்படியும் தாண்டி விடுவார்கள்.

கன்னியாராசி உபயமாக வந்தால் பெருமை யாக எல்லாம் செய்வார்கள். அடிக்கடி தாம் எல் லோரையும் விட அதிகமாக செயல்படுகிறோம். கஷ்டத்தை சுமக்கிறோம் என்று எண்ணுவார்கள். இதுவே தனுசு உபயராசியாக இருப்பவர்கள் காரியங்களை உடனுக்கு உடன் செய்ய வேண்டும் என்று வேகமாக செய்வார்கள் அப்படிச்செய்தாலும் அந்த காரியங்கள் தனக்கு என்று வந்தால் மன திருப்தி அடையமாட்டார்கள்.

அதுவே மீனம் உபய ராசியாக வந்துவிட்டால் தான் கஷ்டத்துக்கு என்று பிறந்தவர்கள் ஆகையால் ஏதோ நம்மால் முடிந்தவற்றை செய்து விட்டு போவோம் என்று இருப்பார்கள். தன் கஷ்டத்தை விட பிறர் கஷ்டம் இவர்களை பாதிக்கும் இவர்களுக்கு எதையும் நல்லதாகவே எண்ண தோன்றாது. பயம் அதிகமாக இருக்கும் இவர் களுக்கு அடிக்கடி நல்ல உபதேசங்கள் தேவை. இல்லாவிட்டால் வாழ்க்கை சிறக்காது.

M.G. பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேரத்தில் பிரிந்துவிடப்போகிறது. அப்போது கண்ணபிரான், கர்ணனுக்குத் தமது தரிசனம் அருளினார். அந்த நிலையில் கர்ணன், ஸ்ரீகிருஷ்ண பராமாத்மாவிடம் என்ன பிரார்த்தனை செய்தான் தெரியுமா?

"அல்லல் வெவ்வினையால் இன்னும் உற்பவம் உண்டாயினும், ஏழேழு பிறப்பும் இல்லையென்று உரைப்போர்க்கு இல்லையென்று உரையா இதயம் நீ அளித்தருள் என்றான்" என்று காட்டுகிறார் வில்லிபுத்தூரர்.

இதில் கர்ணன்,"எனக்கு இனியும் பிறவி இருக்குமானால், நான் தான தர்மங்கள் செய்வ தற்கு எனக்கு நிறையப் பணம் கொடு"

# மன அழுக்கற்றவர்க்கே பயன் தரும் அறம்!

தூய உள்ளம் இல்லாத ஒருவன் எவ்வளவுதான் கல்வி கற்றாலும் அதனால் மேன்மை பெற்று விடமாட்டான், தூய உள்ளம் இல்லாத ஒருவன் எவ்வளவுதான் தீர்த்த யாத்திரை மேற்கொண்டாலும், கோயில் குளங்களுக்குச் சென்றாலும், பூஜை முதலியன செய்தாலும் மேலானவனாகி விடமாட்டான், தூய உள்ளம் இல்லாத ஒருவன் எவ்வளவோ ஜபமும் தியானமும் செய்யலாம், தவங்கள் இயற்றலாம், ஆனால் அவை பலிக்கமாட்டா. தூய மனம் இல்லாதவன் வாரி வாரி வழங்கித் தான தர்மங்கள் செய்தாலும்கூட, பெரிய புண்ணியசாலி ஆகிவிடமாட்டான்.

இந்தக் கருத்துக்களையெல்லாம் அதிவீரராம பாண்டியர் தமது காசி கண்டம் என்ற நூலில், "கற்றதம் கல்வியும் கடவுள் பூஜையும் நற்றவம் இயற்றலும் நவையில் தானமும் மற்றுள அறங்களும் மனத்தின்பால் அழுக்கு அற்றவர்க்கே பயனவிக்கும் என்பரால்" என்று குறிப்பிடுகிறார்.

எனவே எந்த அறச்செயலும் தனக்கு உரிய நற்பயனை முழுமையாகத் தருவதற்கு, முதலில் அதைச் செய்பவனிடம் தூய உள்ளம் இருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

வில்லிபாரதத்தில் ஒரு காட்சி

கர்ணனின் உயிர் இன்னும் சிறிது என்று கண்ணனிடம் கேட்கவில்லை. மாறாக, "ஊழ்வினை காரணமாக இனியும் எனக்குப் பிறவிகள் வாய்க்குமானால், என்னிடம் தானம் கேட்டு வருபவர்களிடம் "இல்லை" என்று சொல்லாத மனநிலையை எனக்குத் தந்த ருளுங்கள்" என்று, நல்ல உள்ளத்தைத்தான் கேட்டுப் பிரார்த்தனை செய்கிறான். ஏனென்றால், கொடுக்கக் கூடிய மனம் இருக்குமானால், கொடுக் கக் கூடிய வாய்ப்பையும் இயற்கை ஏற்படுத்திக் கொடுத்து விடும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.

இதனால்தான் அவ்வையாரும், "அறஞ்செய விரும்பு" என்றார். விருப்பம் இருந்தால், அது எப்படியாவது, எப்போதாவது நிச்சயம் செயல் வடிவம் பெற்றுவிடும்.

தூய உள்ளமே இறைவன் குடிகொண்டிருக்கும் கோயிலாகும்.

இந்த மனத்தூய்மையை நாம் எப்படிப் பெறுவது என்பது கேள்வி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அனுஷ்டான முறை தந்திர சாஸ்திரத்தின்படி அமைகிறது!

பிராம்மணர்களில் எவர் கர்மானுஷ்டானங்களை ஸ்மிருதிகளில் கூறியபடி செய்கிறார்களோ அவர்கள் ஸ்மார்த்தர்கள். சைவ தந்திர (ஆகம) சாஸ்திரங்களைப் பின்பற்றிச் செய்பவர்கள் சைவர்கள், வைஷ்ணவ தந்திர (ஆகம) சாஸ்திரங்களைப் பின்பற்றிச் செய்பவர்கள் வைஷ்ணவர்கள். கருதியும் ஸ்மிருதியும் எல்லோருக்கும் பொதுவானவை என்றாலும், சைவர் வைஷ்ணவர் சாக்தர் ஆகியவர்களுக்கு அனுஷ்டான முறை தந்திர சாஸ்திரத்தின்படி மாறுபடுகிறது. (தந்திரம் என்றாலும், ஆகமம் என்றாலும் பொருள் ஒன்றுதான். தமிழ்நாட்டில் இப்போது தந்திரம் என்ற சொல்லுக்குப் பதிலாக ஆகமம் என்ற சொல் அதிகமாக வழக்கத்தில் உள்ளது.)

திருவள்ளுவதேவர், "வாய்மையைப் பின் பற்றுவதால் மனத் தூய்மை பெறலாம்" என்று கூறுகிறார்.

"புறம்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை வாய்மையால் காணப்படும்" என்பது வள்ளுவர் வாய்மொழி.

மனத்தூய்மை என்பதைச் சித்தசுத்தி என்று வேதாந்திகள் குறிப்பிடுகிறார்கள்.

ஞானம் பெறுவதற்கு முதலில் சித்தசுத்தி தேவை. இந்தச் சித்தசுத்தியைப் பெறுவதற்குரிய வழி நகாம்ய கர்மத்தில் ஈடுபடுவதுதான், பற்றற்று, பயனில் ஆசை வைக்காமல் செயல் புரிவதுதான் என்று வேதாந்தம் கூறுகிறது.

ஆச்சாரியர்கள் சிலர் நாம் உட்கொள்ளும் உணவு தூய்மையாகவும், சாத்வீகமாகவும் இருந்தால் தான் சித்தசுத்தி அமையும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகாரம் என்றால் வயிற்றுப் பசிக்குத் தரப்படும் உணவு மட்டுமல்ல, ஐம்புலன்களால் அனுபவிக்கப்படும் பொருள்கள் அந்த அந்தப் புலன்களுக்கு உரிய உணவாகும்.

உதாரணமாக, ஒருவன் ஒரு பெண்ணைத் தீய இச்சையுடன் பார்த்தால், அது கண் என்ற புலனுக்குத் தரப்பட்ட தீய உணவு ஆகும். இது போல் தீய சிந்தனைகள் உள்ளத்திற்குத் தரப்படும் தீய உணவாகும்.

ஜபம், தியானம், பிரார்த்தனை, சத்சங்கம் போன்றவை உள்ளத்திற்குத் தரப்படும் தூய உணவாகும்.

ஆகவே, ஆகாரம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதில் நாம் உட்கொள்ளும் உணவு, நாம் புலன்களுக்குத் தரும் உணவு, நாம் மனதிற்குத் தரும் உணவு ஆகியவை அனைத்தும் அடங்கியுள்ளன.

பகவான், கீதையில் மனத்தூய்மைக்கு வழி என்று ஒரு முக்கியமான கருத்தைக் கூறுகிறார்.

"யக்ஞோ தானம் தபஸ் சைவ பாவனானி மனீஷிணாம்."

அதாவது, "யக்ஞம், தானம், தவம் ஆகியவை மனிதர்களுக்குப் பரிசுத்தம் அளிப்பவை" என்று ஸ்ரீ கிருஷ்ணன் கூறுகிறார்.

யக்ஞம் என்றவுடன் நாம் யாக குண்டம், சமித், வேள்வித் தீ, ஆஹுதி ஆகியவற்றை நினைக்கிறோம். அதுவும் யக்ஞம்தான்.

ஆனால் இன்றையச் சூழ்நிலையில் யக்ஞம் என்பது பரோபகாரமாகச் செய்யப்படும் பொது நலப்பணிகள் அனைத்தையும்கூடக் குறிக்கும்.



நாட்டுநலனுக்கு உகந்த எந்த ஒரு பொதுக் காரியமும் யக்ஞமே ஆகும். "பரோ பகாரார்த்தம் இதம் சரீரம்" என்று சமஸ்கிருதத்தில் ஒரு வசனம் கூறுகிறது. அதாவது "இந்த உடல் பிறர் நலனுக்காகவே அமைந்தது" என்பது இதன் பொருளாகும். எனவே, தன்னலமின்றிப் பிறர் நலன் பொருட்டுச் செய்யப்படும் எந்த ஒரு நற்செயலையும் யக்ஞம் என்றே நாம் கொள்ள வேண்டும். "இத்தகைய யக்ஞ காரியங்கள் அவற்றைச் செய்பவர்களுக்குப் புனிதம் அளிக்கின்றன" என்று பகவான் கீதையில் தெரிவிக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகளும் பலன்களும்

# அசுரன்

ஓர் அசுரனை அல்லது இராட்சதனைக் கனவில் கண்டால் உங்களுக்கு உள்ள சிரமங்கள் அனைத்தையும் உங்களுடைய கடுமையான உழைப்பினால் நீங்கள் போக்கிக்கொண்டு விடலாம். இப்போது நீங்கள் ஈடுபட்டுள்ள முயற்சிக்குக் கடுமையான உழைப்பு இருந்தால் நல்ல வெற்றி கிடைக்கும்.

உங்களை ஓர் அசுரன் தூக்கிச் செல்வது போல் கனவு கண்டால் நீங்கள் ஒரு பெரிய இக்கட்டிலிருந்து விடுபடுவீர்கள். உங்கள் மீதுதொடரப்பட்டுள்ள வழக்குகள் தள்ளுபடி ஆகும். உங்களுக்கு வேண்டியவர்கள் சிறையில் இருந்தால் அவர்கள் விரைவில் விடுதலை அடைவார்கள்.

உங்களை ஓர் அசுரன் பயமுறுத்துவதுபோல் அல்லது துன்புறுத்துவது போல் கனவு கண்டால் நீங்கள் ஒரு புதிய முயற்சியில் ஈடுபடுபவதற்கான சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. அவற்றை நீங்கள் நழுவவிடாமல் துணிந்து செயலில் இறங்க வேண்டும். அது உங்களது எதிர்கால முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்.

ஓர் அசுரனை நீங்கள் நண்பனாகக் கொள்வது போல் கனவு கண்டால் உங்களுக்கு ஒரு பெரிய அதிருஷ்டம் வரப்போகிறது. ஒரு பெரிய பணக்காரர் உங்களோடு தொடர்பு கொள்ளப் போகிறார். அவரோடு சேர்ந்து நீங்களும் ஒரு பணக்காரராகி விடலாம்.

குறிப்பு புராணக் கதைகளில் வரும் இரணியன் ஓர் அசுரன். இராவணன் ஓர் இராட்சதன். அசுரர்களையும் இராட்சதர்களையம் நீங்கள் நனவுலகில் காணமுடியாது. கனவில் காணலாம். •





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னி



துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

வெளிப்படையாக பேசும் மனோ நிலை கொண்ட கன்னி ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம குருவாகவும் பார்க்குமிடம் எல்லாம் சிறப்பாகவும் அமையும் நினைத்ததை சாதிக்கும் வலிமை பெறுவீர்கள். பொருளாதார வளர்ச்சி பெறுவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

திட்டமிட்ட படி செயல்படுவீர்கள். உங்களுக்கு கொடுத்த வேலையை தவறாமல் செய்து பலன்களை பெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் சிறப்பாக அமையும். வரவுக்குள் செலவுகளை சுருக்கி கொள்வீர்கள். பொருளாதாரத்தில் நற்பலன் பெறுவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

புதிய மாற்றங்களுக்கு வழிவகுக்கும் சமரச தீர்வுகளுக்கு உதவியாக இருப்பீர்கள். கடமையை செய்து வளமையை பெறுவீர்கள். திறமையான செயல்பாடுகளால் எல்லோரின் அன்பையும் பெறுவீர்கள். பொருளாதாரத்தில் வளமை பெறுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானத்தில் கவனம் செலுத்த வேண்டி வரும். அவசர காரியங்களை தவிர்த்து தொழிலில் கவனம் செலுத்தி முன்னேற்றம் காண முயற்சிகளை எடுப்பீர்கள். கல்விக்கு தேவையான உபகரணங்கள் விளையாட்டு சாமான்கள் விற்பனை நல்ல வளர்ச்சியை தரும். பொருளாதாரத்தில் மேன்மையடைவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினரின் பணிகள் சிறப்பாக அமையும். சாகசங்கள் செய்பவர்கள். வித்தை ஜாலம் செய்பவர்களுக்கு நல்ல எதிர்காலம் அமையும். காலத்திற்கு தகுந்தபடி தங்களை மாற்றிக் கொள்வீர்கள். விருப்பமான செயல்களை செய்து பயன் பெறுவீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் வளர்ச்சிக்கு தகுந்த காலமாக அமையும். சிறுதொழில்களின் ஆர்வம் கொள்வீர்கள். தோட்ட தொழிலில் வளர்ச்சியும், வருமானமும் கிடைக்கும். உறவினர்களின் நட்பு பயனுள்ளதாக அமையும். பொருளாதாரம் நன்மை தரும்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் மிகவும் ஆர்வம் கொண்டு விளங்குவீர்கள். ஆற்றலால் எளிதில் எதையும் புரிந்து கொள்வீர்கள். ஆசிரியரின் உதவி பயனுள்ளதாக அமையும்.



**இம்மாதம் நீங்கள் வழி பட வேண்டிய தெய்வங்கள்**

வெள்ளிக்கிழமைகளில் மாரியம்மன் வழிபாடு செய்து நெய் விளக்கு போட்டுவர எல்லா துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

22.08.2016 திங்கள் இரவு 08.29 முதல் 24.08.2016 புதன் இரவு 10.49 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்**

தன்னை பற்றி அறிந்து கொண்டு பழகுபவர்களிடம் நெருக்கமாக பழகுவீர்கள். எதை பேசினாலும் சுருக்கமாக பேசி முடிப்பீர்கள். பொருளாதார வளர்ச்சி பெறுவீர்கள்.

**ஹஸ்தம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்த சிரமங்கள் நீங்கி புதிய கடன் மூலம் விரைவில் கடன் தீரும். வாய்ப்பு பெறுவீர்கள். வளர்ச்சியை நோக்கி செயல்படுவீர்கள்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

விரக்தியுடன் வாழ்க்கையிலிருந்து விடுபடுவீர்கள். குறுகிய காலத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள். தொழிலில் கவனம் செலுத்தி வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள்: மஞ்சள், பச்சை, வெண்மை
அதிர்ஷ்ட திசைகள் : தெற்கு, தென்மேற்கு, மேற்கு
அதிர்ஷ்ட கிழமைகள் : புதன், வியாழன், சனி

**சதுர்வேதிகள்!**

நான்கு வேதங்களையும் கற்றறிந்த அறிஞர்களைச் "சதுர் வேதிகள்" என்று அழைப்பார்கள். அந்தக் காலத்தில் சதுர்வேதிகளான வேத விற்பன்னர்களுக்கு அரசர்கள் வழங்கிய ஊர்களைச் "சதுர் வேதி மங்கலங்கள்" என்று கூறுவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

டொக்டர் சிவப்பிரியா



# பெண்ணொருபாகனாய் காட்சிதந்த மத்வ மாதேஸ்வரர்!

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில் புரியும் பரமசிவன் பிரம்ம தேவனுக்குப் படைக்கும் ஆற்றலை அருளிச் செய்தார். இறைவனை வணங்கி சிருஷ்டியை மேற்கொண்ட பிரம்ம தேவன் தனது படைப்பில் திருப்தியில்லாமல் மனம் வருந்தினார். காஞ்சிபுரம் வந்து ஏகாம்பரேஸ்வரரைப் பூஜை செய்தார். தொழிலில் பரிபூரணத் திருப்தி உண்டாகுமாறு அருளிச் செய்ய வேண்டும் என்று தொழுதார். எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட பரமசிவம், ஆண் பெண் அலி (இருபால்) என்ற மூன்று வகையான உயிரினங்களின் தோற்றத்திற்கு மூலாதாரமான ஆணும் பெண்ணும் ஒன்றாகவுள்ள அர்த்தநாரீஸ்வரனாகப் பிரம்மனுக்குத் திருக்காட்சி தந்து மறைந்தார். பிரம்மனுக்கு அருள் புரிந்த பெண்ணொருபாகன் இங்கு மத்வ மாதேஸ்வரர் என்ற பெயருடன் தனிச் சன்னதியில் திகழ்கின்றார். மேனியின் ஒரு பகுதி பெண்ணுருவாயுள்ள அலிப் பெருமானை

**ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி**
**பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி**
**ஏகம்பத்தில் இயல்பாய் இருந்து**
**பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்**

என்று தட்சிணாமூர்த்தியால் ஓங்காரப்பொருள் உபதேசிக்கப்பெற்ற மாணிக்கவாசகப் பெருமான் போற்றுகின்றார். தரும தேவராகிய ரிஷப தேவர் பரமேஸ்வரனின் வாகனம் ஆவதற்காகக் காஞ்சிபுரம் வந்து ஏகாம்பரேஸ்வரரைப் பூஜித்து வணங்கிய பின் லிங்க மெய்ப் பொருளைப் பிரதிட்டை செய்து வழிபட்டார்.

பரமசிவம் ரிஷப தேவருக்கு அருள் புரிந்தார். ரிஷப தேவருக்கு அருளிய சர்வேஸ்வரன் ரிஷ பேஸ்வரர் (இட பேஸ்வரர்) என்ற திருநாமத்துடன் புனித தீர்த்தமான குளக்கரையருகே தனிச் சன்னதியில் உள்ளார். அஉம் என்ற ஓங்கார வடிவமாக விளங்கும் லிங்கத்தில் ரிஷபேஸ்வரர் சன்னதியில் அகரப் பகுதியான பாணம் மட்டுமே உள்ளது. உகரப் பகுதியான ஆவுடையாரும் மகரப் பகுதியான பீடமும் இல்லை.

நாள்தோறும் நான்கு திசைகளுக்கும் சென்று சிவபூஜை செய்யும் சிறந்த சிவபக்தனான வாலி காஞ்சிபுரம் வந்து ஏகாம்பரேஸ்வரரை வழிபட்ட பின் லிங்கப் பிரதிட்டை செய்து பரமேஸ்வரனைப் பூஜித்தான். வாலிக்கு அருள்புரிந்த வாலீஸ்வரர் சன்னதி கொடிமரம் உள்ள மண்டபத்திற்கு அருகே உள்ளது. கொடிக்கம்பமும் நந்தியும் உள்ள நீளமான மண்டபம் முழுவதும் அழகிய தூண்கள் உள்ளன. இந்தத் தூண்களில் சிவபரம்பொருளின் பல்வேறு வடிவங்களும் தெய்வங்கள். சித்தர்கள், அடியவர்கள், முனிவர்கள், மற்றும் பலப்பல வடிவங்களும் நிறைந்து காணப்படுகின்றன.

இந்த மண்டபத்தில் கொடிமரம் அருகே கச்சி மயானம் என்பது தனிக் கோயிலாகத் திகழ்ந்து கருவறைச் சுவற்றின் வெளிப்புறம் பிரம்மன் துர்க்கை லிங்கோற்பவர் ஆகிய திருவுருவங்களைக் கொண்டுள்ளது. கச்சி மயானம் எமதர்மராலும் பிரம்மதேவனாலும் பூஜிக்கப்பட்ட கோயிலாகும். கச்சி மயானத்தைத் திருநாவுக்கரசர் போற்றியுள்ளார். கச்சி மயானேஸ்வரர் திருக் கோயிலின் முன்பு உள்ள தூணில் மிக அரிதான யோக தட்சிணாமூர்த்தியின்




திரு. ஏகம்பன் செம்பொற்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திரு வுருவம் காணப்படுகின்றது. வலது முன் கரம் இங்கு நெஞ்சில் பதிந்திருக்க மற்றொரு முன்கரம் பக்கத்தே நீண்டுள்ளது. இரண்டு கால்களும் பக்கத்தில் இருக்க ஒரு கால் நீண்டு தொங்கவிடப்பட்ட நிலையிலும் மற்றொரு கால் தூக்கி முழங்கால் மடிக்கப்பட்ட நிலையிலும் உள்ளன.

இதுபோன்று பல்வேறு அரிய சிவமூர்த்திகள் மண்டபத் தூண்கள் முழுவதும் உள்ளன. ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் உள்ள குளமே அல்லாமல் கோயிலுக்கு அருகேயுள்ள மங்கள தீர்த்தம் என்ற குளமும் கம்பை நதியும் புனிதத் தீர்த்தங்களாக உள்ளன. காஞ்சி ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் பெருங்கோயிலாக மட்டுமன்று பொற் கூரைகளையும் தங்கத் திருமேனிகளையும் கொண்டு பொற்கோயிலாகவும் பொலிவுற்றதை

**திரு ஏகம்பன் செம்பொற்கோயில் (திருவாசகம்)**

என்று மாணிக்க வாசகப் பெருமான் போற்று கின்றார். காஞ்சிபுரம் முழுவதும் அடிக்கொரு சிவலாயம் என்று கூறும் வகையில் எண்ணற்ற ஈஸ்வரன் கோயில்களையும் தொட்டால் கைப்பொருட்களைப் பொன்னாக்கும் பொற்சிலை, தான் யார் கண்ணுக்கும் புலனாகாமல் இருந்து எல்லோரையும் பார்க்கக்கூடிய அதிசய மண்டபம், தீமையெல்லாம் நன்மையாக்கும் அற்புதப் பொய்கை, சுந்தர ரூபம் தரும் சுந்தரக்குளம் போன்று பலப்பல அதிசயங்களையும் அற்புதங்களையும் கொண்டு அருமைத் திருத்தலமாகக் காஞ்சித் திருநகரம் திகழ்ந்தது. சுந்தரர் போற்றிய அறுபத்து மூவர்களில் ஒருவரான திருக்குறிப்புத் தொண்டர் பிறந்த காஞ்சிபுரத்தைப் பற்றிக் கூறும் போது சத்தியப் புலவரான சேக்கிழார் பெருமான் இத்திருத்தலத்தின் சிறப்புகள் அருமை பெருமைகள் அனைத்தையும் மிக அழகாக விளக்க மாக விவரித்துள்ளார்.

காமாட்சியம்மன் நாள்தோறும் நீராடி சிவபூஜைக் காகப் பயன்படுத்திய கம்பையாறு போன்று கங்கையை விடச் சிறந்த நதிகள் காஞ்சியில் உள்ளன. காஞ்சியில் ஒரு நாளுக்கு மூன்று தாமரை மலர்கள் மட்டுமே மலர்கின்ற குளத்திலிருந்து படைக்கும் தெய்வம் பிரம்மன், காக்கும் தெய்வம் விஷ்ணு, அழிக்கும் தெய்வம் ருத்திரன் ஆகிய மூன்று மூர்த்திகளும் மூன்று தாமரை மலர்களைப் பறித்து ஏகாம்பரேஸ்வரரை வழிபட்டு வந்தனர். மூன்று மூர்த்திகளும் கச்சிக் கம்பனைப் பூஜை செய்து தங்கிய பூஞ்சோலைக்கு ருத்திர சோலை என்று பெயர். இந்தச் சோலையிலுள்ள வில்வ மரத்திலிருந்து மூன்று மூர்த்திகளும் வில்வ இலைகளைப் பறித்து சிவ பூஜை செய்தனர். இதைக் காட்டும் வகையிலேயே வில்வ இலை மூன்று தளங்களாக (மூன்று இதழ் கொண்டது ஒரு இலை) அர்ச்சிக்கப்படுகின்றது. வில்வ இலையால் செய்யப்படும் சிவபூஜையின் மகிமையை வில்வாஷ்டகம் என்ற சமஸ்கிருத சுலோகம் அருமையாக உரைக்கின்றது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தரும் தம்மபதமும்

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு, கி.மு.563 ஆம் ஆண்டு புத்தர் பெருமான் அவதரித்தார்.

சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்ட அவர், தமது வாழ்க்கையில் ஒரே ஒரு முறை வயோதிகன், நோயாளி, இறந்த மனிதன், துறவி ஆகியவர்களைக் கண்டார். அவையே அவரது வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை, மிகப் பெரிய திருப்புமுனையை உண்டாக்கின.

புத்தர் கண்ட அதே நான்கு காட்சிகளை, நாமும் நமது வாழ்நாளில் எத்தனை எத்தனையோ முறை பார்த்து வருகிறோம். ஆனால் நமது வாழ்க்கையில் அவை திருப்பு முனையாக அமையவில்லையே! நமது உள்ளத்தில் அவை ஆழ்ந்து பதியவில்லையே! ஏன்? அதற்குப் பதிலாக, "நல்ல மாட்டுக்கு ஓர் அடி, நல்ல மனிதனுக்கு ஒரு சொல் என்ற பழ மொழிதான் என் நினைவுக்கு வருகிறது.

தமது இருபத்தொன்பதாம் வயதில் புத்தர் துறவறம் மேற்கொண்டார். அப்போதிலிருந்து அவர், ஆறு ஆண்டுகள் கடுந்தவம் பழகி "புத்தர்" என்ற மெய்ஞ்ஞானம் பெற்ற நிலையை எய்தினார். அதன் பிறகு அவர் 45 ஆண்டுகள் தமது போதனைகளின் உருவமாகவே வாழ்ந்து, பௌத்த தர்மப் பிரசாரத்தை முன்னின்று நடத்தி யிருக்கிறார்.

புத்தர் அவதரித்தது, அவர் மெய்ஞ்ஞானம் பெற்றது, அவர் உலகிலிருந்து மறைந்தது ஆகிய மூன்றுமே வைகாசிப் பௌர்ணமி நாளன்று நிகழ்ந்திருக்கின்றன. ஆகவே, வைகாசிப் பௌர்ணமி நாள் மூன்று விதங்களிலும் பௌத்தர்களுக்கு ஒரு புனிதமான நன்னாள் ஆகும்.

புரோகிதர்களின் கொடுங்கோன்மையை அடியோடு தகர்த்து, மதத்தில் உண்மையான ஒரு மறுமலர்ச்சியைக் கண்டவர் புத்தரே ஆவார்.

ஜாதி வேறுபாடின்றி ஆண் பெண் யார் வேண்டுமானாலும் துறவறம் மேற்கொள்ளலாம் என்று துணிவாகச் சொல்லி, அதைச் செயலிலும் காட்டிய முதல் சமயத் தலைவரும் புத்தரே ஆவார்.

கர்ம விதியையும் நிலையாமையையும், புத்தர் அழுத்தம் திருத்தமாகப் போதித்தார். மரணத்தோடு எல்லாமே முடிந்து போவதில்லை, மறுமை உண்டு என்பதை புத்தர் அருளிய கதைகளும் உபதேசங்களும் நமக்கு மிகவும் தெளிவாக உணர்த்துகின்றன.

"இதுதான் மனித வாழ்க்கை" என்று எடுத்துக் காட்டி, "இந்த வழிகளில் செல்" இந்த வழிகளைத் தவிர்த்து விடு, அதன்படி செய்தால் நீ மேலான நிலையை அடைவாய் என்று புத்தர் கூறிய வழிகளைப் பின்பற்றி, மேலான நிலையை எண்ணற்றவர்கள் அடைந்திருக்கிறார்கள்.

மனிதனின் துன்பங்களுக்கு ஓர் எல்லையே இல்லை, இதைத் தெளிவாக உணர்ந்த புத்தர், அந்தத் துன்பங்களுக்கு ஒரே முடிவு ஒரே முற்றுப்புள்ளி "நிர்வாணம்" என்னும் முக்தி நிலையைப் பெறுவதுதான் என்று கண்டார்.

1. துக்கம், 2. துக்க உற்பத்திக்குக் காரணம், 3. துக்க நிவாரணம், 4. துக்க நிவர்த்திக்கு வழி பற்றிய உண்மைகளை புத்தர் ஆராய்ந்து, அவற்றை அன்றைய மக்கள் மொழியாக விளங்கிய பாலி மொழியில் ஐயம்திரிபற விளக்கினார்.

நாடு தழுவிய வகையில் மக்கள் மொழியில் மதப்பிரச்சாரம் செய்த முதலாமவரும் புத்தரே ஆவார்.

பௌத்த பிக்குகளுக்கும் பொது மக்களுக்கும் ஜாதகக் கதைகள் மூலமாகவும் அறிவுரைகள் மூலமாகவும் புத்தர் பல அரிய உபதேசங்கள் செய்திருக்கிறார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரின் உவமைகள், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் உவமைகளை நமக்கு நினைவுபடுத்துகின்றன.

புத்தர் பல்வேறு சந்தர்ப்பங்களில் அருளிய உபதேசங்களின் தொகுப்புதான், "தம்மபதம் (அறவழி), என்ற நூலாக இப்போது வழங்கி வருகிறது.

இந்து மதத்திற்கு உபநிடதங்கள், கீதை, பிரம்ம சூத்திரம் ஆகிய மூன்றும் பிரமாண நூல்களாக விளங்கி வருகின்றன. அது போல் பௌத்த மதத்திற்குத் திரிபிடகம் என்று சிறப்பித்துக் கூறப்படும் ஸுத்த பிடகம், வனய பிடகம், அபிதம்ம பிடகம் ஆகிய மூன்றும் பிரமாண நூல்களாக விளங்குகின்றன.

மகாபாரதத்தின் ஒரு பகுதியாக கீதை அமைந்திருப்பது போன்று, ஸுத்தபிடகத்தின் ஐந்து நிகாயங்களில் ஒரு பகுதியாகத் தம்மபதம் அமைந்திருக்கிறது. பல பிரிவுகளையுடைய இந்துமதத்தில் கீதை முதலிடம் பெற்றிருப்பதைப் போல், பதினெட்டு உட்பிரிவுகளைக் கொண்ட பௌத்த மதத்தில் தம்மபதம் முதலிடம் பெற்றிருக்கிறது.



தம்மபதத்தில் இருபத்தாறு அத்தியாயங்களில் 423 உபதேசங்கள் அடங்கியுள்ளன. ராமாயணம், மகாபாரதம் மற்றும் இந்துமதப் புராணங்கள்போல் பெரியதாக இல்லாமல், 423 உபதேசங்கள் மட்டுமே அடங்கிய நூல் தம்மபதம் என்னும் போது, "அடேயப்பா! மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதாக இருக்கிறதே!" என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது.

ஒரே கருத்தை உடன்பாட்டு முறையிலும் எதிர்மறையாகவும் கூறும் முறை "இரட்டைச் செய்யுள் இயல்" எனப்படும். உதாரணமாக, "நான்கு கூரை வேயப்படாத வீட்டிற்குள் மழைநீர் புகுவதைப் போல, பயிற்சியின் மூலம் பண்படாத மனதிற்குள் தீய ஆசைகள் புகுந்து விடுகின்றன" என்று தம்மபதம் உபதேசம் பதின்மூன்றில் பார்க்கிறோம். அதற்கு அடுத்த பதினான்காம் உபதேசம் "நன்கு கூரை வேய்ந்த வீட்டிற்குள் மழைநீர் புகாததைப் போல, நன்கு பயிற்சி பெற்றமனதிற்குள் தீய ஆசைகள் புக முடியாது" என்று அமைந்திருக்கிறது.

இவ்விதம் கருத்துக்களை உடன்பாட்டு முறையிலும், எதிர்மறையாகவும் கூறும் விதத் தில் தம்மபதம் முழுவதும் அமைந்துள்ளது. சில கருத்துக்களை உடன்பாட்டு முறையில் சொன்னாலே போதும், சில கருத்துக்களை எதிர்மறையாகவும் சொல்லும்போதுதான். சொல் லப்படும் கருத்தின் சிறப்பு நம் உள்ளத்தில் நன்கு பதிகிறது. இந்த இரண்டு முறைகளும் தம்மபதம் நூலில் இடம் பெற்றுள்ளன.

இத்தகைய சிறப்பைப் பெற்ற தம்மபதம் நூல், பல நூறு ஆண்டுகளாக எண்ணற்ற மக்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தியுள்ளது. இனியும் அதன் பணி அவ்விதமே தொடர்ந்து அமையும்.

## "கைவல்ய நிலை"

ஆன்மீக நூல்களில் இடம் பெற்றிருக்கும் "கேவலம்" என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு, முழுமையானது, மறைபடாதது, பிற ஒன்றுடனும் சேராதது, தனியாக இருப்பது என்றெல்லாம் பொருள். ஆத்மா, உலகப்பற்றற்றுத் தனிப் பெருமையுடன் விளங்கும் நிலை "கைவல்யம்" எனப்படும். அவன் "கேவலம் முட்டாள்" என்றால், முழு முட்டாள் என்று அர்த்தம் அப்படியும் தமிழில் சொல் உபயோகிக்கப்படும். தமிழில் மிகச் சிறந்தது என்ற கருத்தில் பிரமாதம் என்ற சொல்லை நாம் உபயோ கிக்கிறோம். ஆனால் பிரமாதம் என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு உண்மையான பொருள் பைத்தியம், தவறு என்பன. இது போன்ற சில சமஸ்கிருதச் சொற்கள் தமிழ் வழக்கில் உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


துன்பத்தை கண்டு எப்பொழுதும் துவண்டுவிடாத மனம் கொண்ட துலாம் ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு விரைய குருவால் பாதிப்பையும் சனியில் பொருளாதார வளர்ச்சியையும் பெறுவீர்கள். வரவும் செலவும் சமமாக இருக்கும்.

### பணியாளர்களுக்கு

பணியில் சிரமங்கள் இருந்தாலும் எந்த ஒரு வேலையையும் சுமையாக எண்ணாமல் கடமையாக எண்ணுவீர்கள். புதிய கடன்களை பெற்று பழைய கடன்களை தீர்ப்பீர்கள். விருப்பமான செயல்களை செய்து வருமானத்தை பெருக்கி கொள்வீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது நலனில் எல்லோரின் விருப்பம் என்ன என்பதை அறிந்தும் அதனுடன் தன்னையும் இணைத்துக் கொள்வீர்கள். பயனுள்ள விடயங்களை செய்து பண்புகளை வளர்த்துக் கொள்வீர்கள். அரசாங்க உதவிகளை பிறருக்கு பெற்று தருவீர்கள்.



### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வெள்ளிக்கிழமை துர்க்கையம்மன் வழிபாடு செய்து புளிச்சாதம் நைவேத்தியம் வைத்து நெய் விளக்கு போட்டு புளி சாதத்தை தானம் செய்து வர நினைத்த காரியம் வெற்றியை தரும்.

### மாணவர்களுக்கு

மாணவர்கள் அதிக கவனமுடன் பயில வேண்டி வரும். கணணி கல்வி, அறிவியல் ஆராய்ச்சி கல்வி சிறப்பாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

24.08.2016 புதன் இரவு 10.50 முதல் 26.08.2016 வெள்ளி இரவு 01.31 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்

திட்டமிட்ட செயல்பாடுகளில் தாமதம் உண்டாகும். உங்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் வேறு ஒருவருக்கு சென்று விடுவதை அறிந்து வருத்தம் கொள்வீர்கள்.

#### சுவாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தொடர் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். அன்னியர் உதவிகள் கிடைக்கும். திருப்பமாக சில விடயங்கள் நடந்து உங்களுக்கு உற்சாகத்தை தரும்.

# துலாம்



துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

#### விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

புத்திரர்களின் வேலை வாய்ப்பு களுக்கு தடைகள் நீங்கி விரைவில் வேலைக்கு செல்வார்கள். தங்க நகைகள் அடகு வைக்கும் நிலை உண்டாகும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: பழுத்த வெண்மை, சிவப்பு, கருப்பு
அதிர்ஷ்ட திசைகள்: மேற்கு, கிழக்கு, வடமேற்கு
அதிர்ஷ்ட கிழமைகள் : வெள்ளி, ஞாயிறு, சனி

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானத்தில் சந்திரனின் பார்வை படு வது தொழில் முன்னேற்றம் தரும். கூட்டு தொழிலில் சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டி வரும். புதிய நண்பர்களின் சேர்க்கையில் தொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதாரத்தில் சிரமம் குறையும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினரின் செயல்பாடுகள் பாராட்டும்படி அமையும். ஆடல் பாடல் நிகழ்ச்சிகளில் சிறந்து விளங்குவீர்கள். அதிக பேச்சை குறைத்து செயலில் ஈடுபடுவீர்கள். அதிக அலைச்சல் இருந்தாலும் எதிலும் நற்பலன்களை பெறுவீர்கள் பொருளாதாரத்தில் ஏற்றம் பெறுவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களின் வளர்ச்சிக்கு உங்களின் பங்குகள் வரவேற்பை தரும். குறுகிய காலத்தில் பலன் கிடைக்கும் தொழிலில் உங்களை ஈடுபடுத்தி கொள்வீர்கள். முதலீடு இல்லாத தொழில் நல்ல லாபம் தரும்.


### எல்லையற்றது இறை அன்பு!

"தாயும் பிதாவும் தமரும் குருவும் தனி முதலும் காதலனும் காதலியும் அவனல்லாது இல்லை. எனவே இறைவன் எல்லாருக்கும் எல்லாமாகி இருப்பவன். அதனால், இறைவன் மீது கொள்ளும் அன்பை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எவரும் கட்டுப்படுத்த இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபஸ்தம்பன்



# வேதங்கள் அனைத்தும் காயத்ரி மந்திரமே!

## ஸ்போட வாதம்!

ஒரே மூல சப்தத்திலிருந்து எல்லாம் வெளிவந்தது ஓங்காரத்திலிருந்து தான் அனைத்தும் தோன்றியது என்ற வாதம் ஸ்போடவாதம் எனப் பெறுகிறது. நாதம் என்பது ஓம் என்ற ஒலியையும், பிந்து என்பது ஒளியையும் குறிக்கும். உலகில் பல வகையான ஒலிகளைக் கேட்கிறோம், பல வகையான ஒளிகளைப் பார்க்கிறோம். உதாரணமாக, ஒலி இருப்பதால் தான் நாம் ஒருவர் பேசுவதை மற்றொருவர் புரிந்து கொள்கிறோம். ஒளி என்ற ஒன்று இருப்பதால்தான் உலகிலுள்ளவற்றை நாம் பார்க்கமுடிகிறது. ஒலி, ஒளி முதலானவற்றிலிருந்தே பிரபஞ்சம் முழுவதும் தோற்றத்திற்கு வந்து செயல்படுகிறது என்பதால் "நாதபித்து கலாதி என்ற பரம்பொருளை ஸ்போடவாதம் குறிப்பிடுகிறது.

"வேதங்கள் அனைத்தும் காயத்ரி மந்திரத்தில் ஒன்றி விடுகின்றன. காயத்ரி, பிரணவத்தில் (ஓம்) கலந்து விடுகிறது. "ஓம்" சமாதியில் சேர்ந்து விடுகிறது" என்று ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறியுள்ளார்.

வேதங்களின் சாரமாக "ஓம்" என்பது விளங்குகிறது. இந்தப் பிரபஞ்சமானது விரிவடைவதாகவும், பின்னர் ஒடுங்குவதாகவும் கூறப்படுகிறது. இந்த விரிவு நிலையும், ஒடுக்கநிலையும் அலையின் இயக்கம் போன்று தொடக்கமோ அல்லது முடிவோ இன்றி மாறி மாறிச் செயல்பட்டு வருவதாக அன்றைய ஞானிகளும், இன்றைய விஞ்ஞானிகளும் சொல்லியுள்ளனர். "ஓம்" என்ற இந்த ஒலியைப் பிரித்தால் "அஉம்" என்று ஆகின்றது.

"அ" என்று உச்சரிக்கும் போது செங்குத்து அசைவையும், "உ" என்பது வட்ட அசைவையும், "ம்" என்பது படுகை அசைவையும் உண்டு பண்ணுகிறது.

மேலும், "ஓம்" என்பதிலுள்ள "அஉம்" என்னும் தொனிகள் முறையே விழிப்பு நிலையையும், கனவு நிலையையும், உறக்க நிலையையும் உணர்த்துவதாகக் கூறப்படுகிறது.

காயத்ரி மந்திரத்திலுள்ள "ஓம் பூர் புவஸ் ஸுவ" என்பது இந்த மூன்று நிலைகளையும் குறிப்பதாகும். மூன்று நிலைகளுக்கும் அப்பாற்பட்ட நிலையாக "ஓம்" என்பது சிறப்பிக்கப்படுகிறது. காயத்ரிதேவி சக்தி யைத் தரும் உமாதேவியாகவும், செல்வத்தைத் தரும் லட்சுமி தேவியாகவும், அறிவைத் தரும் சரஸ்வதி தேவியாகவும் போற்றப்படுகிறாள்.


காலை வேளையில் நீராடிய பின்னர் சூரியனை நோக்கி நின்ற வண்ணம் மனத்தை ஒருமுகப்படுத்தி காயத்ரி மந்திரத்தை உச்சரித்தால் அறிவு பெருகும். நினைவாற்றல் வளரும். பெரும் சக்தி கிடைக்கும். நினைத்தவை அனைத்தும் நிறைவேறும். எனவேதான், காயத்ரி மந்திரத்தை "வேதங்களின் தாய் போன்றது" என்று போற்றுகிறார்கள்.

"ஓம்" என்பது பிரணவ மந்திரம். இதுதான் "கடவுளின் ஒளி" என்று போற்றப்படுகிறது. இந்த "ஓம்" என்பதன் விரிவு தான் காயத்ரி. காயத்ரியின் விரிவுதான் வேதம். வேதத்தின் விளக்கம்தான் இந்தப் பிரபஞ்சம் என்று கொள்ள வேண்டும் என்பது பெரியோர்களின் ஒருமித்த கருத்தாகும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜான்.பி.நாயகம்

# ஆரிய பட்டரின் துல்லிய வானியல் கணிப்புகள்!



ஆரிய பட்டர் எழுதிய ஆரிய பாத்யாவில் கிரகணங்கள் வரும் நல்ல நேரம் ஆகியவற்றைக் கணக்கிடும் முறைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன என்பதை பார்த்தோம். இந்த கணக்குகள் எவ்வளவு துல்லியமானவை என்பதற்கு ஒரு உதாரணத்தை இங்கே கூற வேண்டும்.

1765ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 30ஆம் திகதி ஒரு முழுமையான சந்திர கிரகணம் தோன்றியது. இந்த கிரகணம் தென்னிந்தியாவில்தான் முழுமையாகத் தெரியும் என்று வானியல் அறிஞர்கள் அறிவித்ததால் பல ஐரோப்பிய வானியல் நிபுணர்கள் புதுச்சேரிக்கு வந்தனர்.

அக்காலத்தில் மிகப் புகழ்பெற்ற வானியல் அறிஞராக இருந்த குலோமி "ரீ ஜென்டில்" என்ற பிரான்சு நாட்டு விஞ்ஞானியும் புதுச்சேரி வந்திருந்தார்.

1752இல் தொபியாஸ் மேயர் என்ற அறிஞர் உருவாக்கிய நவீன பஞ்சாங்கத்தின் அடிப்படையில் அந்த சந்திர கிரகணம் எந்த நேரத்தில் துவங்கி, எப்போது முடியும் என்பதை மேலை நாட்டு அறிஞர்கள் கணித்து வைத்திருந்தனர். ஆரிய பாத்தியாவில் கூறப்பட்டுள்ள கணக்குகளின் அடிப்படையில் (6ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது). இந்திய ஜோதிடர்களும் கிரகண நேரத்தை கணித்து வைத்திருந்தனர்.

கிரகணம் வந்தபோது குலாமிக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ஆரியப்பட்டரின் கணித அடிப்படையில் கணிக்கப்பட்ட நேரத்திற்கும் கிரகணம் துவங்கிய நேரத்திற்கும் இடையே இருந்த வித்தியாசம் 41 விநாடிகள் மட்டுமே.

ஆனால் தொபியாஸ் மேயரின் நவீன பஞ்சாங்கத்தின் அடிப்படையில் மேலை நாட்டு அறிஞர்கள் கணித்த நேரத்திற்கும் கிரகணம் தோன்றிய நேரத்திற்கும் இடையே இருந்த வித்தியாசம் 68 விநாடிகள்.

ஆக 17ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய விஞ்ஞானிகளின் கணக்கை விடை 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆரிய பட்டர் எழுதி வைத்துள்ள கணக்குகளே துல்லியமாக இருந்தன. இந்திய வானியலின் சிறப்பை ஐரோப்பிய விஞ்ஞானிகள் உணர்ந்து கொள்ளவும். ஆரிய பட்டரின் பெருமைகளை அவர்கள் புரிந்து கொள்ளவும். இந்த சந்திர கிரகணம் ஒரு முக்கியமான காரணமாக இருந்தது.

## ஆரிய பட்டரின் பிற சாதனைகள்

பூமியின் சுற்றளவு என்ன என்பதை ஆரிய பட்டருக்கு முன்பே கிரேக்க வானியல் அறிஞர்கள் கணக்கிட்டு எழுதி வைத்துள்ளனர். நவீன கணக்கு களுக்கும் கிரேக்கர்களின் கணக்குகளுக்கும் இடையிலான வித்தியாசம் 5 முதல் 10 சதவிகிதம்.

ஆரிய பட்டரின் ஆரிய பாத்தியா நூலில் பூமியின் சுற்றளவு 39,968.0582 கிலோ மீற்றர்கள் என்ற குறிப்பு உள்ளது. நவீன கணினிகள் கல்வித்துறை அளவு 40,075,0167 கிலோ மீற்றர்கள். இவை இரண்டிற் கும் இடையிலான வித்தியாசம் வெறும் 0.2% (சதவிகிதம்) தான்!

ஆரிய பட்டர் தனது நூலில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தை அக்கால இந்திய அளவான யோஜனா என்ற அளவில் குறிப்பிட்டுள்ளார். அதை கிலோ மீற்றரில் மாற்றும் போது சிறு வித்தியாசங்கள் வரும் இந்த 0.2% வித்தியாசம் கூட அதனால் நிகழ்ந்ததாக இருக்கலாம். நவீன கணினிகளின் துணையின்றி பூமியின் சுற்றளவை கண்டுபிடித்தவர்களில் ஆரிய பட்









டரின் கணக்கே மிகத் துல்லியமானது என்பதை மேலை நாட்டு விஞ்ஞானிகளும் வியந்து பாராட்டுகின்றனர்.

**சிடரல் நாள்**

ஆரிய பட்டரின் கணக்கு 23 மணி 56 நிமிடம் 41 வினாடிகள் நவீன கணினி கணக்கு 23:56:4091

**சிடரல் வருடம்:** ஆரிய பட்டரின் கணக்கு 365 நாள் 6 மணி 12 நிமிடம் 30 வினாடிகள் நவீன கணினி கணக்கு 365 நாள் 6 மணி, 9 நிமிடம் 10 வினாடிகள் ஆக வெறும் 3 நிமிடம் 20 வினாடிகள் மட்டுமே வித்தியாசம்

**சைன், வெர்சைன்**

00 முதல் 900 வரை இவற்றின் மதிப்புகளை ஆரிய பட்டர் ஒரு அட்டவணையாகத் தொகுத்துத் தந்துள்ளார். இவை இன்றும் 4 தசம புள்ளிகள் வரைச் சரியானவையாகவே உள்ளன.

டிரிகனோமெட்ரி என்ற கணித முறை உருவானதில் ஆரியபட்டரின் பங்கு மிகக் கணிசமானது.

**ஆரிய பட்டரின் பிறநூல்கள்**

ஆரிய பாத்தியா தவிர வேறு சில நூல்களையும் ஆரிய பட்டர் எழுதி யுள்ளார். ஆனால் அந்த நூல்களின் மூலப் பிரதிகளோ. நகல்களோ நமக்குக் கிடைக்கவில்லை. ஆரிய பட்டா சித்தாந்தம் என்பது அவர் எழுதிய மற்றொரு முக்கியமான நூலாகும்.

இந்த நூல் "சூரிய சித்தாந்தம்" என்ற நூலின் அடிப்படையில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. சூரிய சித்தாந்தத்தில் இருந்த பல தவறான கருத்துகளையும் திருத்தி சீர் செய்து, தனது புதிய குண்டுபிடிப்புகளையும் இணைத்து ஆரிய பட்டர் இந்த நூலை எழுதியிருக்கிறார்.

மூலநூல் நமக்கு கிடைக்க வில்லை என்றாலும் ஆரிய பட்டருக்குப் பின் வந்த இந்திய அறிஞர்களான பிரம்மகுப்தா, வராகமிகிரர், முதலாம் பாஸ்கரன் ஆகியோர் இந்த ஆரிய பட்டா சித்தாந்தத்தில் இருந்த பல கருத்துக்களை தங்களது நூல்களில் மேற்கோள் காட்டியுள்ளனர். இவற்றிலிருந்து மூல நூலில் இருந்த பல செய்திகளை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற வாழ்வுக்கு

# பாரம்பரிய வாழ்வியல் முறைகள்!

**மாறி வரும் உணவு பழக்கங்களாலும், படபடப்பு பரபரப்பு நிறைந்த வாழ்க்கையினாலும் இன்றைய சூழலில் ஏறக்குறைய 60-70 சதவீதமான மக்கள் மலம், சிறுநீர் உபாதையினால் தொந்தரவு பெறுகின்றனர். இப்பாதிப்பு கூடிக் கொண்டே வருகிறதே தவிர குறைந்தபாடில்லை. பல பேருக்கு மலம், சிறுநீர் கழிக்கும் முறை கூட தெரிவதில்லை. இவ்விரண்டும் தான் அநேக நோய்களுக்கு காரணம் என்றும் புரிவதில்லை.**

மலம், சிறுநீர் கழித்தல் என்பது ஒரு கடன் கிடையாது. இது ஒரு உடலைக் காக்கும் உன்னதக் கலை என்று பாரம்பரிய நூல்களும் முன்னோர்களும் கூறுகின்றனர். இந்த உன்னதக் கலை நாளடைவில் மெல்ல மெல்ல மறைந்து தற்போது மருந்துக்கடைகளை நம்பி மக்கள் வாழும் நிலை உள்ளது. முன்னோர்கள் கூறிய மலம், சிறுநீர் கழிக் கும் கலையை நாம் காண்போமா?

### பாரம்பரிய வாழ்வியல் முறைப்படி "மலம் சிறுநீர்" கழிக்கும் முறை

1. "அறுநீர்", "மும்மலம்", என்று சித்தர்கள் கூறுவதால் ஒரு நாளைக்கு ஆறு தடவை சிறுநீரும், மூன்று முறை மலமும் கழித்தல் வேண்டும் குறைந்தது 5 தடவை சிறுநீரும் 2 தடவையாவது மலமும் கழித்தால் நல்லது.

2. மலம் அதிகமாக உடலில் சேரச் சேர உடலில் வாத சம்பந்தப்பட்ட பிணிகள் வரக் காரணமாகின்றன. அதேபோல் உடலில் சிறுநீர் மாறுபட்டு கழியும் போது பித்த சம்பந்தப்பட்ட நோய்கள் தோன்ற ஏதுவாகின்றன. இவ்விரண்டும் சரிவர இருந்தால் தான் உடலில் செரித்தல் உள்ளிட்ட அனைத்துச் செயல்பாடுகளும் சரியாக நடைபெறும்.

"பேதியால் வாதந்தாழும்..."

"பிரிந்திடும் பித்தம் தீராச் சலத்தினாலே" என்றும்

"இரு மலங்கள் தங்காதிறங்குங்கால். சமளாக்கினி சாரும் சாரா நோயீட்டம்.." என்று சித்தர்கள் கூறுவதை அறியலாம்.

3. சிறுநீர் கழிக்கும் முன் அதற்குரிய முறைப்படி அமர்ந்து, நம்முடைய இடது கையால் வலப் பக்கத்திலுள்ள அடிவயிற்றை பிடித்தோ அல்லது மெதுவாக அமிழ்த்தோ விட முழுவதும் பலன் கிடைக்கும். இவ்வாறு சிறுநீர் சரிவர வரவில்லை. என்றாலும், சிறுநீர்ப்பிணிகள் ஏதும் இருந்தாலும் கழிக்கும் முன், வலப்பக்கமாக சற்றே படுத்துக் கொண்டு பின் சிறுநீர் கழிக்கச் செல்ல வேண்டும். நின்று கொண்டும், தவிர்க்க முடியாத பிறநிலைகளையும் விடுத்து, மற்ற நேரங்களில் இதை நாம் கடைப்பிடிக்கலாம்.

4. மலம் சரிவர கழிய வேண்டுமாயின் நம்முடைய வலது கையால் இடப்பக்கம் அடிவயிற்றை பிடித்தோ அல்லது மெதுவாக அமிழ்த்தோ விட நல்ல பலன் கிடைக்கும். மலச்சிக்கல் அல்லது மற்றப்பிணிகள் இருந்தால் கழிக்கும் முன், சற்ற இடப் பக்கமாக படுத்து, வலது பக்க நாசியில் பிராண வாயு (சுவாசம்) வரும்படி செய்து பின் மலம் கழிக்கச் செல்லல் நல்லது.

5. மலம், சிறுநீர் கழிக்கும் போது இதிலே தான் கவனம் இருத்தல் வேண்டும்.

6. உணவு உண்ணும் முன், உடற்பயிற்சி செய்யும் முன் மலம், சிறுநீர் உடலில் இல்லாதிருக்க வேண்டும் நன்கு கழித்துப் பின்னர் செல்லல் நல்லது.


7. மலம் போக வேண்டிய நேரத்தில் போகாமல் தடுத்து (அடக்கும்) நிறுத்தும்போது வயிற்றுப் பிணிகள், வாயுப்பிணிகள், பொருத்துவலி உள்ளிட்ட வாதப் பிணிகள், மார்பு படபடப்பு, உட்சூடு, அசீரணம் உள்ளிட்ட பல நோய்கள் உண்டாகக் காரணமாகிறது. எனவே மலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் போது உடன் அது கழிவதற்கு ஆயத்தம் செய்தல் நல்லது.

8. அதேபோல சிறுநீர் போக செல்லாமல் தடுத்து அடக்கும் போது நீர் எரிச்சல், நீர்க் கட்டு, கல்லடைப்பு, நீர்த்தாரைப்புண், மூட்டுக்கள், வீக்கம், உட்சூடு முதலிய நோய்கள் உண்டாக காரணமாகி விடும். எனவே சிறுநீர் வரும் போது உடன் கழிவதற்கு ஆயத்தம் செய்தல் நல்லது.



9. மலம், சிறுநீர் இரண்டும் கழியும் போது தடுத்து அடக் கும் போது மனச் சிதைவு, உடல் படபடப்பு, எரிச்சல் உள்ளிட்ட பிணிகளும் உருவாக காரணமாகி விடும்.

10. மலம் கழித்தவுடன் ஆசன (மல) வாயை 11 தடவை நீர் விட்டு அலம்பிக் கொள்ள சித்தர் நூல்கள் அறிவுறுத்துகிறது. அது போல சிறுநீர் கழித்தவுடனும் உறுப்பை நீரில் கழுவ அறிவுறுத்துகிறது. இவைகள் நடைமுறையில் சாத்தியமா! என்ற கேள்வி எல்லோருக்கும் எழும். உடலுக்கு நல்லது என்று கூறும் போது இதற்கும் நேரம் விட்டு அல்லது கூடிய வகையில் வீட்டில் இருக்கும் போதாவது மேற்கொள்ளலாம்.

11. மலம், சிறுநீர் சரி வர கழிவதற்கு உணவு முறையும் ஒரு காரணம் என்பதால் உணவு, வகைகளையும் சரிவர உண்ண வேண்டும்.

12. மலம், சிறுநீர் கழிக்க செல்லும் போது அதிக இறுக்கத்துடன் ஆடைகள் இருக்கக் கூடாது. பாதம் அழுந்தும்படியும் அமர்ந்து இருக்கக் கூடாது.

13. மலம், சிறுநீர் நோயில்லாத போதும் அடிக்கடியும் கழிதல் கூடாது. முறைப்படுத்த வேண்டும். இவைகள் ஒழுங்குப்படுத்தக் கூடியவை. ஒழுங்குப் படுத்துவதற்கு கட்டுப்படக்கூடியவை.

14. மலம், சிறுநீர் கழிதல் என்பது இயற்கையாக உடலில் ஏற்படும் வேகம் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்தளவுக்கு இதை புனிதமாகக் கூறியுள்ளனர்.

15. சுற்றுப்புறத்தில் இயல்பாக காணும் சூழ்நிலை, காலநிலை இவைகளுக்குத் தக்கபடி மலத்தின் அளவும், மற்ற குணங்களும் சிறிது மாறுபடும். ஆனால் மலம் கழிக்கிற முறையை காலத்தை மாற்றக் கூடாது என்கிறது நம் முன்னோர் நூற்கள்.

16. பட்டினி (உப வாசம்) இருக்கும் முன்னும், உடலுறவு கொள்ளும் முன்னும், குளிக்கும் முன்னும், பிற நோய்களுக்கு மருந்து எடுக்கும் முன்னும், மலம், சிறுநீர் சரி வர கழித்தல் வேண்டும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். குறிப்பாக சுகமான தூக்கத்திற்கு செல்லும் முன்னும், பசித்து இருந்து நல்ல உணவு, உண்ணும் முன்னும் சரி வர மலம் கழித்தல் வேண்டும் என்று முன்னோர்கள் கூறுகின்றனர்.

ஆக, மலம், சிறுநீர் ஆகியன கழிக்கும் போது முன்னோர்களின் வழிமுறைகள் நெடுநாள் நோயில்லாமல் வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

அவர்கள், அறிவுறுத்துகிற ஒவ்வொரு வழிமுறைக்கும் எண்ணற்ற நன்மைகள், உண்மைகள் புதைந்துள்ளது என்பதை மறத்தல் கூடாது.

**டொக்டர் வே.கணபதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் தீர அகத்தியர் அருளிய பாடல்கள்



**இது அகத்தியர் அருளிய பாடல், கடன்கள் தீரவும், செல்வம் பெருகவும் இப்பாடல் அருளப்பட்டுள்ளது. இந்தப் பாடலை தினமும் ஒரு வேளையாவது படித்து வந்தால் கடன்கள் தீரும் செல்வம் கிடைக்கும்.**

அகத்திய முனிவர் தன் துணை லோப முத்திரையோடு கொல்லாபுரம் சென்று. அன்னை மகாலட்சுமி மீது இந்தப் பாடல்களைப் பாடினார்.

பாடல்களைக் கேட்டு, திருமகள் மகிழ்ந்து, அகத்தியருக்குக் காட்சி அளித்து. உன்னுடைய பாடல்களால் நான் மகிழ்ச்சி அடைந்தேன். இப்பாடல்களைப் படிப்பவர்கள் யாவரும், அரிய, பெரிய இன்பங்கள் கிடைக்கப் பெறுவார்கள். இப்பாடல்கள் உள்ள ஏடானது வீட்டில் இருந்தால் வறுமையைக் கொடுக்கிற தவ்வையானவள், அந்த வீட்டிற்குள் நுழைய மாட்டாள் என்று திருவாய் மலர்ந்தருளினாள்.

கி.பி.1564 முதல் 1604 ஆண்டு வரை, தென் பாண்டி நாட்டை ஆண்டு வந்த, அதிவீரராம பாண்டியர் என்பவரால் இப்பாடல் மொழி பெயர்க்கப் பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பாடலை, தினமும் ஒரு வேளையாவது படித்து வந்தால் கடன்கள் தீரும். செல்வம் பெருகும்.

மூவுலகும் இடரியற்றும் அடலவுணர்
உயிரொழிய முனிவு கூர்ந்த
பூவை உறழ் திருமேனி அருட்கடவுள்
அகன்மார்பில் பொலிந்து தோன்றித்
தேவர் உலகினும் விளங்கும்
புகழ்க்கொல்லாபுரத்தினிது சேர்ந்து வைகும்
பாவை இருதாள் தொழுது பழமறைதேர்
குறுமுனிவன் பழச்சுக்கின்றான்

*பொருள்:* மூன்று உலகங்களுக்கும் கொடுமைகள் பல செய்த, அசுரர்களின் உயிரை மாய்த்த, காயா மலரைப் போன்ற உடலினை உடைய, அருள்மிக்க திருமாலின் பரந்த மார்பில் வசிக்கும், தேவர்களுடைய உலகைக் காட்டிலும் பெருமையில் சிறந்து விளங்கும் பெருமையை உடைய, கொல்லாபுரம் என்ற ஊரில் சேர்ந்து. வீற்றிருக்கின்ற பாவையாகிய திருமகளின் இரண்டு திருவடிகளையும் பணிந்து, பழமையான மறைகளை எல்லாம் ஆராய்ந்து உணர்ந்த அகத்திய முனிவர் புகழ்ந்து பாடலானார்.

கொழுதியிசை அளிமுரலும் தாமரைமென்
பொகுட்டினுரை கொள்கைபோல
மழையுறழுந் திருமேனி மணிவண்ணன்
இதயமலர் வைகு மானே!
முழுதுலகும் இனிதீன்ற அருட்கொம்பே
கரகமலம் முகிழ்ந்தெந் நாளுங்
கழிபெருங் காதலில் தொழுவோர் வினைதீர
அருள் கொழிக்குங் கமலக்கண்ணாய்!

*பொருள்:* வண்டுகள் ஊர்ந்து, பண்களைப் பாடும் இடமாக விளங்கும், தாமரை மலரின் மென்மையான பொகுட்டின் மீது வாழும் தன்மையைப் போல, கருமுகிலை ஒத்த அழகிய உடலினை உடைய மணிவண்ணனாகிய திருமாலின் உள்ளத் தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் திருமகளே! எல்லா உலகங்களையும் இனிதாகப் பெற்ற அருட்கொடியே! கையாகிய தாமரை மலரைக் குவித்து, எந்த நாளும் மிகுந்த பேரன்பினோடு வணங்குபவர்களுடைய தீவினைகள் ஒழியுமாறு அருளைப் பொழியும், தாமரை மலர் போலும் கண்களை உடையவளே!

கமலைதிரு மருமார்பன் மனைக்கிழத்தி
செழுங்கமலக் கையாய் செய்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமலைபசுங் கழைகுழைக்கும்
வேனிலோன்
தனையீன்ற விந்தை தூய
அமுதகும்ப மலர்க் கரத்தாய் பாற்கடலுள்
அவதரித்தோய் அன்பர் நெஞ்சத்
திமிரமகன்றிட ஒளிருஞ் செஞ்சுடரே என
வணக்கம் செய்வான் மன்னோ.

***பொருள்:*** திருமகளே! அழகிய மரு அமைந்த மார்பினை உடையவராகிய திருமாலின் இல்லக் கிழத்தியே! செழுமை வாய்ந்த தாமரை மலர் போன்ற கைகளை உடையவளே! செந்நிறமுள்ள விமலையே! பசுமையான கரும்பினை வில்லாக வளைக்கின்ற வேனிற் காலத்திற்கு உரியவனான மன்மதனைப் பெற்ற திருமகளே! தூய்மை வாய்ந்த அமுதம் நிறைந்த குடத்தை ஏந்திய தாமரை மலர் போன்ற கைகளை உடையவளே! திருப்பாற்கடலில் பிறந்தவளே! அன்பர் நெஞ்சத் திமிரமாகிய இருள் அகன்றிட விளங்குகின்ற செழுமையான பேரொ ளியே!

மடற்கமல நறும் பொகுட்டில் அரசிருக்கும்
செந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணி
வண்ணன் உலகமெலாங் காவல் பூண்டான்
படைத்தனன் நான்முகக் கிழவன்
பசுங்குழவி

## “சப்தாஹ பாராயண முறை”!

சுகதேவர், பரீட்சித் மன்னனுக்கு ஏழு நாட்கள் பாகவதம் கூறினார். அதனால் பாகவதத்தை ஏழு நாட்கள் பாராயணம் செய்வது, அல்லது சொற்பொழிவு செய்வது “ஸப்தாஹ முறை” எனப்படும். எந்த வழிபாட்டையும் ஏழு நாட்கள் செய்வது ஸப்தாஹ முறை என்று அழைக்கப்படுகிறது.

மதிபுனைந்த பரமன் தானும்
துடைத்தனன் நின் பெருங்கீர்த்தி எம்மனோ
ரால் எடுத்துச் சொல்லற்பாற்றோ

***பொருள்:*** இதழ்களை உடைய தாமரைப் பூ பொகுட்டில் வீற்றிருக்கும் செம்பவழம் போன்ற அதரத்தை உடைய மயில் போன்றவளே! உன் னுடைய கடைக்கண்ணின் அருள் பெற்றதனால் அல்லவா, நீலமணி போன்ற வண்ணத்தை உடைய திருமால் உலகம் முழுவதையும் காக்கும் தொழிலை மேற்கொண்டார். நான்முகனான பிரம் மன், படைப்புத் தொழிலை மேற்கொண்டார். உன்னுடைய பெரும் புகழானது. எம்மைப் போன் றோரால் எடுத்துக் கூறுவதற்கு முடியக் கூடிய தன்மை படைத்ததோ?



மல்லல் நெடும் புவியனைத்தும்
பொதுநீக்கித்
தனிபுரக்கு மன்னர் தாமும்
கல்வியினில் பேரறிவில் கட்டழகில்
நிகரில்லாக் காட்சியோடும்
வெல் படையில் பகை துரந்து வெஞ்சமரில்
வாகை புனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையும் அணியிழை
நின் அருள்நோக்கம் அடைந்துள்ளாரே!...

***பொருள்:*** அகவிதழ்களை உடைய தாமரைப் பொகுட்டில் தங்கியுள்ள அழகிய அணிகலன்களை அணிந்த திருமகளே! பொதுவாக விளங்கும் தன்மையை உடைய வளம் பொருந்திய நெடும் உலகம் முழுவதையும் அதனுடைய அந்தப் பொது வாக விளங்கும் அத்தன்மையை நீக்கி, தமது தனி யுடையாக்கி, அரசாட்சி செய்யும் மன்னர்களும், கல்வியிலும், பேரறிவிலும், மிகுந்த அழகிலும் ஒப்பில்லாத தன்மையைப் பெற்றவர்களும் வெல் கின்ற படையைக் கொண்டு, பகைவர்களை விரட் டும் கொடிய போரில் வெற்றிவாகை சூடும் வீரர் களும், உன்னுடைய திருவருள் பார்வையைப் பெற்றவர்களே!

S. சுப்ரமணியன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கள்ளனுக்கு கருணை காட்டிய

# ஸ்ரீ வைகுந்தம் கள்ளர்பிரான்!



**பிரம்மதேவன் பீடம் கொண்டிருக்கும் சத்திய லோகத்தில் ஒரு முறை பிரளயம் ஏற்பட்டது. சத்தியலோகமே வெள்ளை மயமாகக் காட்சியளித்தது. சோமுகாசூரன் என்னும் அரக்கன் ஒருவன் இந்தப் பிரளயப் பொழுதினைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்தினான். பிரம்ம தேவன் வைத்திருந்த படைப்புத் தொழில் பற்றிய சிருஷ்டி ரகசிய ஏடுகளை அபகரித்துச் சென்றான்.**

பிரளயம் முடிந்தது. பிரம்மனால் ரகசிய ஏடுகள் இல்லாமல் படைப்புத் தொழிலைத் தொடங்க முடியவில்லை. பிரபஞ்சமே ஸ்தம்பித்த நிலையில் நான்முகன், காக்கும் கடவுளான நாராயணனை வேண்டித் தவம் புரிய எண்ணினார். தன்னிடம் இருந்த பிரம்ம திருதண்டத்தை ஒரு பெண்ணாக்கி தவம் புரிய தகுந்த இடத்தைத் தேடுமாறு ஏவினார்.

அகிலம் முழுதும் தேடி அலைந்த அந்த அரிவை, முடிவில் பொருணை நதியின் கரையில் சோலைகள் மிகுந்த ஒரு இடத்தை தேர்வு செய்து அயனிடம் வந்து உரைத்தாள். நான்முகனும் அந்த இடத்தில் வைகுந்தநாதனை நோக்கிக் கடும் தவம் புரிந்தார்.

நான்முகனின் நற்தவத்தால் மகிழ்ந்த மாதவனும், அசுரனை அழித்து ஏடுகளை பிரம்மனுக்கு மீட்டுக் கொடுத்தார். வைகுந்தநாதனாக அவருக்கு தரிசனமும் அளித்தார்.

பிரம்மன் தனக்கு வைகுந்தநாதனாக காட்சி அருளிய அதே இடத்தில் பூலோகத்தினருக்கும் அதே கோலத்தில் என்றென்றும் நின்று அருள் புரியுமாறு வேண்டினார். மாலனும் மனமிசைந்தான். பிரம்மன் தன் கையினாலேயே மூல விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சதுர்முகன் பக்தியில் மாயோன் மயங்கி, வேண்டுபவர்களுக்கு வேண்டும் அருள் புரியும் வேங்கடவன் வைகுந்தநாதனாக கோயில் கொண்ட இடமே தாமிரபரணி நதியின் வடகரையில் உள்ள திருவைகுந்தம் என்னும் திவ்யத்தலம்.

இந்தத் தலத்தில் பெருமான் ஒரு கள்வனையும், நாட்டின் காவலனையும் திருத்துவதற்காக ஒரு முறை கள்ளன் கோலமும் பூண்டிருக்கிறான். அந்த அற்புத வரலாறு...

களவுத் தொழில் ஆற்றிய காலதூஷகன் திரு வைகுந்தநாதரின் பக்தன். அன்றாடம் களவுத் தொழிலில் அவன் ஈட்டும் வருமானத்தில் பாதியை அவருக்கு அர்ப்பணிப்பது அவனது வழக்கம்.

அந்த நாட்டை அப்போது ஆண்டு வந்த அரசன் அற வழியில் மனத்தைச் செலுத்தாமல், மற வழி நாடிச் சென்று மக்கள் நலனை மறந்திருந்தான்.

ஒரு நாள் காலதூஷகன் எம்பெருமான் அனுமதியுடன் அரண்மனையில் திருடுவதற்காகச் செல்ல, அவனுடன் வந்த சக திருடர்கள் அரசாங்க அதிகாரிகளிடம் பிடிபட்டனர்.

தப்பிச் சென்ற காலதூஷகன் அச்சுதன் ஆலயத்தைப் புகலிடமாக அடைந்தான்.. ஒரு வேதியர் உருவில் வந்த கருணாமூர்த்தியும் அவனைக் காப்பதாக ஆறுதல் கூறி. காலதூஷகன் வேடத்தில் அரசவையை அடைந்தார்.

அரசன் அரசவையில் கள்வன் உருவில் இருந்த பெருமானிடம் விசாரணை நடத்தினான். தர்ம காரியங்களில் செல்லாத செல்வம், கள்ளர்களையே சென்று அடையும் என்று கூறிய கோவிந்தனும் தன் சுய உருவைக் காட்டி அவனைத் திருத்தினார். மன்னனும் அன்று முதல் அற வழியில் ஈடுபட்டு, மக்கள் நலனைப் பேணத் தொடங்கினான்.


அன்று முதல் கள்ளன் வடிவெடுத்த கருணைக் கடல் கள்ளர்பிரான் என்றும் வழிபடப்படுகிறார். அவரது நாயகியும் கள்ளர்பிரான் நாயகியாக தரிசனம் அளிக்கிறார்.

ஆலய முகப்பில் வரிசைத் தூண்கள் கொண்ட அழகான வெளி மண்டபம். அதனை அடுத்து ராஜ கோபுரத்துடன் கூடிய நுழைவாயில்.

இதனைக் கடந்து சென்றால் வெளிச்சுற்றில் நீராழி மண்டபமும் இராமர் மற்றும் திருவேங்கடமுடையான் சந்நிதிகளும் அமைந்துள்ளன.

பிரகாரம் முழுவதும் விளங்கும் எழில் மண்டபங்களில் யாளி, யானை, போர் வீரர்கள் ஆகிய கண்கவர் சிற்பங்கள் பொலிவாக திகழ்கின்றன.

கொடிமரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் மேற்கு நோக்கிய லக்ஷ்மி நரசிம்மர் மற்றும் தசாவதார தரிசனம்.



கருடாழ்வாரை வணங்கிச் சென்றால் கிழக்கு நோக்கிய திருமுக மண்டலத்தோடு ஆதிசேஷன் குடை பிடிக்க, நின்ற திருக்கோலத்தில் வைகுந்த நாதர் சேவை சாதிக்கிறார்.

உற்சவர் கள்ளர்பிரான் ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் காட்சியளிக்கிறார். மற்ற தலங்களைப் போல் ஆதிசேஷனின் மேல் பள்ளி கொண்ட கோலத்தில் இல்லாமல் பரந்தாமன், நின்ற நெடுமாலாய் காட்சியளிப்பது இந்தத் தலத்தின் சிறப்பு.

ஸ்ரீதேவி, பூதேவி சமேதரராக தரிசனம் தரும் உற்சவர் திருமேனியைக் கண்டவர்கள் மெய் மறப்பார்கள்.

நீலவண்ணனின் வலது புறம் தலநாயகி வைகுந்த நாயகியும், இடது புறம் சோராநாத நாயகியும் தனிச் சந்நிதிகளில் கோயில் கொண்டுள்ளார்கள். நவதிருப்பதிகளில் ஒன்றான இந்தத் திருப்பதி நவக்கிரக நாயகனான சூரியனுக்குரிய தலமாகக் கருதப்படுகிறது. ஆண்டுதோறும் ஐப்பசி மற்றும் சித்திரை மாதங்களில் சூரியன் தன் கதிர்களை வைகுந்தநாதனின் திருக்கழல்களில் பதித்து வழிபாடு செய்கிறான்.

ஸ்ரீ வைஜெயந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மிராண்டா

# ஜாதகக்கணிப்பில் விஞ்ஞான அணுகுமுறை!

நமது வாழ்க்கையில் எண்ணங்கள், ஆசைகள் மற்றுமுள்ள சுபநிகழ்ச்சிகள் எப்பொழுது எப்படி நிறைவேற போகிறது என்பதையும், துன்பங்கள் துயரங்கள் எப்பொழுதெல்லாம் நம்மை தாக்கிவிடும் என்பதையும், சோதனைகளிலிருந்து சவால்களில் இருந்து எப்பொழுது சாதனை படைத்து சுபிட்ஷம் பெறுவோம் என்பதையும் தெரிந்து கொள்ள நமது ஜாதகங்களை ஜோதிடரிடம் எடுத்து செல்வது அன்றாட வாழ்க்கையில் நமக்கு ஏற்பட்டு விட்ட வழக்கம். ஜோதிடர் ஜாதகத்தில் உள்ள கிரக அமைப்புகளை பார்த்து விட்டு பலாபலன்களை கூறியவுடன் அந்த கூற்று. உண்மையிலேயே நமக்கு சுபிட்ஷம் பெற உதவியதா என்பதுதான் இப்போதைய கேள்வி. விஞ்ஞான உலகில் நாகரிகத்தின் உச்சியில் காலடி வைத்துக் கொண்டு செல்கின்ற இன்றைய சமுதாயம், குறிப்பாக இளம் தலைமுறையினர் ஜோதிட சாஸ்திரத்தையும் ஜாதக விளக்கங்களையும் சம்பிரதாயம்தான் என்று மட்டும் கருதாமல் இதில் ஏதோ விஞ்ஞான அடிப்படை உள்ளது என்று ஆர்வம் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். இந்த நிலையில் ஜாதகத்திற்கு பலன் சொல்வதில் விஞ்ஞான கண்ணோட்டத்தை, அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது.

ஜாதகத்தில் குறிப்பிட்ட கிரகத்திற்கு கேந்திரத்தில் உதாரணமாக சந்திரன் அல்லது ஜென்ம லக்னம் அமைந்து விட்டால் இந்த மாதிரியான யோகங்கள் நீ பெற்றுவிட்டாய் ஆகவே உனது எதிர்ப்பார்ப்புகள், ஆசைகள் அத்தனையும் நடந்துவிடும் என்று கூறும் போது ஜாதகர்களுக்கு இந்த கூற்று திருப்தி தரவில்லை என்பதுதான் இன்றைய உண்மையான நிலை ஜாதகர்கள் பலன்களை மாத்திரம் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. விளக்கம் வேண்டும் என்கிறார்கள். இந்த விளக்கத்தை சாதாரண மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் சொல்லியாக வேண்டும் கிரகங்களின் இயக்கம், பார்வைகள், இணைப்புகள் அந்தந்த ஜாதகர்களுக்கு எப்படியெல்லாம் இயக்கம் தந்து எண்ண அலைகளை உண்டாக்கி சிந்திக்க செய்து செயல்களில் இறங்க செய்து சாதனைகள் பண்ணவோ அல்லது சோதனைகளை சந்திக்கவோ காரணமாக இருக்கிறது என்பதை எல்லாம் தெரிந்து கொள்ள அறிந்து கொள்ளத்தான் நாம் ஆர்வம் காட்டுகிறோமே தவிர, கேட்ட சமாச்சாரத்தையே மீண்டும் மீண்டும் கேட்கவோ அல்லது நான்கு கிரகங்கள் ஜாதகத்தில் சொட்சேத்திரம் ஆட்சி, இரண்டு கிரகங்கள் உச்சம் என்று பெருமை படுத்துவதிலோ எவ்வித பயனும் இல்லை என்று எண்ணுகிறோம்.

ஆகவேதான் அன்று சொல்லப்பட்ட அடித் தள பொதுவிதிகளை கருத்துக்களை ஏற்றுக் கொண்டாலும்கூட இயற்கையின் காலங்கள், சுற்றுப் புற சூழ்நிலைகள், வாழ்க்கை முறைகள் விருப்பு வெறுப்புகள், எதிர்பார்ப்புகள், சிந்திக்கும் முறைகள், செயல்படும் விதங்கள், உணவு பழக்கங்கள் அத் தனையிலும் புதுப்புது மாற்றங்கள் ஏற்பட்ட பின் ஜாதகத்தை அலசி ஆராய்வதிலும் சற்று விசாலமான விஞ்ஞான கண்ணோட்டத்தோடு தனித்தனி ஜாதகத்தின் கிரக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிலைகளை கருத் தோடு கவனித்து இப்படித் தான் ஜாதகம் இயங்கு கிறது என்பதை புரியும் படியாக படிப் படியான இயக்கத் தையும் அதன் வாயி லாக ஜாதகரின் இயக்கத் தையும் ஜாதக ருக்கு எடுத்துரைக்கும் பொழுது தான் அவர்கள் இந்த ஜோதிட சாஸ்திரத் தின் வாயிலாக முழுமை யான நன்மை பெறுகி றார்கள். நம்பிக்கை கொள்கிறார்கள். ஜோதி டருக்கும் அந்த ஜாதக ருக்கும் அபிமானமும் நெருக் கமும் ஏற்படு கிறது.

ஆகவேதான் ஒட் டுமொத்தமாக ஜாதகத் திற்கு புராதன முறைப் படி பலன் சொல்லி பயன் இல்லை. ஜோதி டத்தில் லக்ன ராசிகள் அந் தந்த ஜாதகரின் மனநிலையை எப்படி யெல்லாம் செயல்பட வைத்து அந்த ஜாதகர் பலன்களை பெறுகிறார் அல்லது விளைவுகளை சந்திக்கிறார் என்றும் காண வேண்டும்.

ஜாதக ரீதியாக எத்தனை ஆசீர்வாதங்கள் வரப் பிரசாதங்கள் அவர் பெற்றிருக்கிறார் என்பதையும், அதே ஜாதகத்தில் மறுபக்கம் என்னென்ன சவால் களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்பு தனையும் ஆராய்ந்து அவருக்கு விளக்கங்கள் கூறும் பொழுது அந்த ஜாதகர் ஜோதிட சாஸ்திரத்தை முழுக்க முழுக்க விஞ்ஞானமாக கருதிக்கொண்டு விடலாமே. இத்தனை சிறப்பு அம்சங்கள் நமது அணுகுமுறையில் பெற்றுவிடும் பொழுது, இனி இந்த ஜோதிடத்தை "ஜோதிட மனஇயல் அல்லது ஜோதிட மனவளம் (ஆங்கிலத்தில் Astro Psychology)" என்று அழைத்து விடலாமே. அதாவது மனோபாவத்தையும் ஜாதக கிரகங்களினால் ஏற்படுகின்ற இயக்கத்தையும் ஒருங் கிணைந்து ஆய்வு செய்யும் பொழுதுதான் அந் தந்த ஜாதகத்தில் ஜாதகரின் இயக்கத்தையும் கண்டு அறிய முடியும் பலன்களையும் விளைவுகளையும் நன்கு அறிய முடியும். அந்தந்த ஜாதகர்கள் ஜாதக ரீதியாக தங்களுடைய தோற்றம், சிந்தனை, அணு குமுறை அத்தனையையும் அறிந்து கொள்ளும் பொழுது, அவர்கள் தம்மை திருத்திக் கொள்ளவும் ஆர்வம் காட்டவும் ஆறுதல் பெறவும் அகோரத்தை குறைத்துக் கொள்ளவும் சவால்களை சமாளித்து சாதனை பெறவும் வாய்ப்பு பெற்று விடுகிறார்கள். இந்த அஸ்ட்ரோ சைகாலஜி முறையில் நம்மை வாட் டுகின்ற விசித்திர துன்பங்களை கண்டுகொள்ளவும் அவைகளை நிவர்த்தி செய்து சுபிட்ஷங்கள் பெற்றுக் கொள்ளவும் பலப்பல சிறப்பு பகுதிகளாக ஜாதகத்தை அணுகி ஆய்வு செய்ய வேண்டும்.

**அதே ஜாதகத்தில் மறுபக்கம் என்னென்ன சவால்களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது என்பதனையும் ஆராய்ந்து அவருக்கு விளக்கங்கள் கூறும் பொழுது அந்த ஜாதகர் ஜோதிட சாஸ்திரத்தை முழுக்க முழுக்க விஞ்ஞானமாக கருதிக்கொண்டு விடலாமே**

அப்படி அலசி ஆய்வு செய்யும் பொழுது தான் நமக்கு முழுமையான விவரங்கள் ஜாதகரைப் பற்றிய நிலைகள் அவர் சந்திக்க இருக்கும் சவால்கள் மற்றும் அவருக்கு கொடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுபிட் ஷமான வாழ்க்கை அனுபவங்கள் அத்தனையும் நாம் அறிந்து கொள்ள ஏதுவாகிறது.

இந்த நிலையில்தான் ஜாதகங்களுக்கு பலன் சொல்ல அணுகும்பொழுது அந்தந்த ஜாதகரும் முழு அறிவுரையும் ஆலோசனையும் பயன்களும் பெற்று விடுகிறார் என்பதில் சந்தேகமே இல்லை.

## சாங்கியம் ஞானயோகத்தைக் குறிக்கும்!

பொதுவாக இந்தியத் தத்துவ வர லாற்றில் "சாங்கியம்" என்றால், அது கபிலர் தோற்றுவித்த சாங்கிய தத்துவத்தைத்தான் குறிக்கும். பகவத்கீதை தோன்றுவதற்கும் முன்பே கபிலரின் சாங்கிய தத்துவம் வழக்கில் இருந்திருக்கிறது. கபிலரின் சாங் கிய தரிசனத்தைப் பின்பற்றியே ஈசுவர கிருஷ்ணர், தமது சாங்கிய காரிகை நூலை எழுதியிருக்கிறார். ஈசுவரகிருஷ்ணர், பக வத்கீதைக்குப் பிற்பட்டவர் என்று நாம் உறுதியாகச் சொல்வதற்கில்லை. பகவத் கீதையில் சாங்கியம் என்ற சொல் பொதுவாக ஞான யோகத்தைக் குறிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான எதிர்காலம் அமைந்திட...!

உடலில் வலிமையும், உள்ளத்தில் தெளிவும் கொண்டவர்களாகக் குழந்தைகளை நாம் வளர்க்க வேண்டும். அப்படிச் செய்தால் புதுயுகம் படைக்கும் வீரத்திலகங்கள் தோன்றுவார்கள். அதனால் வளமான எதிர்காலம் அமையும்.

இன்று கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்கள்தான், நாளைய எதிர்கால தூண்களாக விளங்கப் போகிறார்கள். எனவேதான் கல்வி ஒரு நாட்டின் வளங்களில் முதலிடம் பெறுகிறது.

ஒழுக்கமும் பண்பும் கல்வியோடு சேர்த்து மாணவர்களுக்கு தரப்படாவிட்டால், அறிவு மட்டும் வளர்த்து சமுதாயத்தில் குழப்பங்களையே ஏற்படுத்தும்.

நாட்டின் மீது பக்தி, மதிப்பு, மரியாதை ஏற்படும் படி குழந்தைகளை இளைஞர்களை நாம் வளர்க்க வேண்டும்.

காலையும் மாலையும் ஜபம், தியானம், பிரார்த்தனை ஆகியவற்றைத் தத்தம் மத நெறிக்கு ஏற்பப் பழகுவது என்பதை, கல்வியின் ஓர் அங்கமாகக் கல்வி நிறுவனங்களில் அமைக்க வேண்டும். இதனால் மத நல்லிணக்கமும் சாந்தியும் சமுதாயத்தில் நிலவும்.

## கூடார்த்தம்!

ஒரு ஞானியின் உபதேசமோ, சுலோகமோ நேரடியான பொருளைத் தராமல், மறைமுகமாகவும் குறிப்பாகவும் வேறொரு உட்கருத்தைத் தெரிவிப்பதாக இருந்தால், அதற்குக் கூடார்த்தம் என்று பெயர். மதுசூதன சரஸ்வதி எழுதிய கீதாபாஷ்யத்திற்கு, "கூடார்த்த தீபிகா" என்று பெயர். இதற்கு "ரகசியப் பொருளை விளக்கும் தீபம் என்று பொருள். மறைபொருள்கூற்று, சூன்ய பாஷணம் ஆகிய இரண்டு சொற்களும் கூடார்த்தம் என்ற பொருள் உடையவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்ததை அடைய எதையும் செய்ய துணியும் விருச்சிக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு லாபஸ்தானத்தில் குரு அமர்ந்து ஐந்தாம், ஏழாமிடத்தை பார்ப்பது உங்களின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். புத்திர பாக்கியம் கிட்டும்.

### பணியாளர்களுக்கு

உழைப்பிற்கு முக்கியத்துவம் தருவீர்கள். எதிலும் உங்களை முழு மையாக ஈடுபடுத்தி கொள்வீர்கள். சக தொழிலாளர்களின் வளர்ச்சி பக்கபலமாக இருந்து வருவீர்கள். தொழிற்சங்க பேதமின்றி அனை வருடனும் அனுசரித்து செல்வீர்கள். பொருளாதார நிலை நன்மை தரும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது காரியங்களில் அதிரடி முடிவுகளை ஆதரிப்பீர்கள். இரக்கமற்றவர்களிடம் சிநேகம் காட்டமாட்டீர்கள். எதிலும் நினைத்ததை சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் பிரதிபலிக்கும். உரிமைக்கு குரல் கொடுப்பீர்கள். பொருளா தாரம் சிறப்பாக அமையும்.



### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

செவ்வாய்க்கிழமைகளில் சுப்ரமணியரை வணங்கி வேலுக்கு அபிசேகம் செய்து நெய்விளக்கு போட்டுவர நினைத்த காரியம் கை கூடும்.

தாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

26.08.2016 வெள்ளி இரவு 01.32 முதல் 29.08.2016 திங்கள் அதிகாலை 05.27 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### விசாகம் 4ஆம் பாதம்

புதிய கடன் பெற்று பழைய கடனை அடைப்பீர்கள். தொழிலில் இருந்து வந்த மந்த நிலை மறையும். தொழிலில் போட்டி மறைந்து வெற்றியை பெறுவீர்கள்.

### அனுசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தொழிலாளர்களின் நலன் மேம்பாடு அடையும். அடிமைத் தனம் மாறி சுதந்திரமான பணியை செய்யும் வாய்ப்புகள் அமையும். அரசாங்க சலுகைகளை பெறுவீர்கள்.

### கேட்டை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

கேட்ட இடத்தில் பணம் வரும். கலைஞர்களின் வளர்ச்சி சிறப்பாக அமையும். கருத்துகளை உட னுக்குடன் தெளிவுபடுத்தி சொல்வீர்கள்.

# விருச்சிகம்



துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

### வியாபாரிகளுக்கு

தொழிலில் கவனம் செலுத்துவீர்கள். முன் பைவிட தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். நல்ல நண்பர்கள் சேர்க்கையால் புதிய தொழில் வாய்ப்புகள் அமையும். எரிபொருள் சார்ந்த தொழில் முன்னேற்றம் தரும். பொருளாதார நிலை வளர்ச்சியை தரும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் சிறப்பாக செயல்படுவீர்கள். நிகழ்ச்சிகளை முறையாக செயல்படுத்தி ரசிகர்களின் ஆதரவை பெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். எதிலும் விரும்பி வாழ்க்கையை அடைய சிரத்தையுடன் செயல்படுவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### பெண்களுக்கு

பெண்களின் வாழ்க்கை சூழ்நிலை மாற்றம் உண்டாகும். எதிலும் தனக்கு தனி இடம் வேண்டு மென்று நினைத்து செயல்படுவீர்கள். சுயதொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிட்டும். பொருளாதாரம் ஏற்றம் தரும்.

### மாணவர்களுக்கு

எலக்டிரிகல், இலத்திரனியல் கல்வி சிறப்பாக அமையும். சக நண்பர்களின் உதவிகள் பயனுள்ள

அதிர்ஷ்ட நிறங்கள்: ஒரஞ்சு, சிவப்பு, வெண்மை
அதிர்ஷ்ட திசைகள் : வடக்கு, கிழக்கு, தெற்கு
அதிர்ஷ்ட கிழமைகள் : ஞாயிறு, திங்கள், வெள்ளி

### உறங்குமுன் ஆஞ்சநேயரை நினையுங்கள்!

இரவில் தூங்கச் செல்வதற்கு முன்பு பகவத்கீதை, திருவாசகம், ஸ்ரீராம கிருஷ்ணரின் உபதேசங்கள் போன்ற வற்றைப் படிப்பது நல்லது.அது மனதை அமைதி பெறச் செய்து உயர்ந்த நிலையில் வைத்திருப்பதற்குப் பெரிதும் உதவி செய்யும். இரவில் உறங்குவதற்கு முன்பு ஆஞ்சநேயரை நினைத்து பிரார்த்தனை செய்தால், கெட்ட கனவுகள் வராது என்று பெரியோர்கள் சொல்லக்கேட்டிருக்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் எளிதில் செய்யலாம்
# நவக்கிரக பரிகாரங்கள்

நமதுவாழ்க்கைப்பாதைநன்குஅமையவும், நம்மை நல்ல முறையில் வழி நடத்திச் செல்லவும் நவக்கிரக நாயகர்கள் உதவுகின்றனர். ஒவ்வொரு கிரகத்துக்கும் தொடர்புடையவராக ஒவ்வொரு கடவுள் உள்ளார். சூரியனுக்கு சிவனும், சந்திரனுக்கு பார்வதியும், செவ்வாய்க்கு முருகனும், புதனுக்கு விஷ்ணுவும், குருவுக்கு தட்சிணாமூர்த்தியும், சுக்கிரனுக்கு லட்சுமியும், சனிக்கு சனீஸ்வரரும், ராகுவுக்கு துர்க்கையும், கேதுவுக்கு விநாயகரும் வழிபடு தெய்வங்களாகின்றனர். இதுபோலவே நவக்கிரக பூஜை, மிருத்யுஞ்சய ஜெபம், லட்சுமி பூஜை உள்பட பல்வேறு யாகங்களும் நடத்தப்படுகின்றன.

**இவை தவிர, நவக்கிரக தோஷம் போக்கும் சில பொதுவான வழிமுறைகளும் உள்ளன. இவ்வழிமுறைகள் எளிதானதும் எல்லாராலும் கடைப்பிடிக்கக் கூடியதுமாகும். அவற்றை இங்கு காண்போம்.**

காய்ச்சாத பசும்பாலை ஏதேனும் ஒரு கோவிலுக்கு 15 நாட்கள் கொடுத்தல், வெள்ளி கோப்பைகளை நீர் அருந்தப் பயன்படுத்துதல் சுக்கிரனை பலப்படுத்தும்.

நீலம் மற்றும் பச்சை ஆடைகளை தவிர்த்தல் சனி, புதன் பாதிப்பிலிருந்து விலக்கும்.

தினமும் நெற்றியில் மஞ்சள் திலகம் அணிதல் குருவருள் கிடைக்க வழி செய்யும்.

கண் தெரியாதவர்களுக்கு இனிப்புகள் வழங்குதல் சனியை ப்ரீத்தி அடையச் செய்யும்.

கைப்பிடி அரிசியை நதி அல்லது ஏரியில் போடவும். இது சந்திரனின் பலத்தைக் கூட்டும்.

தோளில் செய்த மணிபர்ஸில் பணம் வைக்க வேண்டாம். சனி கெட்டிருப்பவர்களின் கெடு பலனைக் குறைக்கும்.

வாகனத்தை எப்போதும் நல்ல நிலையில் சீராக வைத்திருக்க வேண்டும். சனி பலம் நன்றாக அமையும். (ஜாதகத்தில் சனி கெட்டு, அவரது தசை நடந்தால் வாகனத்தில் அதிக பராமரிப்பு செலவு ஏற்படும் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்.)

வீட்டில் சூரியனுக்குரிய யாகங்கள் செய்வதும் தினமும் சூரியனுக்கு நீர் படைப்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதும் சூரிய பலத்தை அதிக ரிக்கச் செய் யும். தினமும் சரஸ்வதி மந்திரம் ஜெபிப்பது புதன் பலத்தைக் கூட்டும். பிள்ளை களின் கல்வியை மேம்படுத்தும்.

வியாழக்கிழமைகளில் கோவில்களில் லட்டு வழங்குவது குரு பலத்தை அதிகரிக்கும். அது போல் வியாழக்கிழமைகளில் பூண்டு, வெங் காயம் தவிர்ப்பது நல்லது.

பசுவின் கோமியத்தை வீட்டில் அவ்வப்போது தெளித்தால் வீட்டிலுள்ள பீடைகள் அகலும்.

16 நாட்கள் கோவிலில் கொள்ளு தானம் செய் வது கேது ப்ரீத்திக்கு உகந்தது.

பையில் சிறிய வெள்ளிக்கட்டி வைத்திருப் பதும், கையில் வெள்ளி வளையம் அணிவதும் சுக்கிரனுக்கு நல்லது. அனுமனை அனுதினமும் வணங்கினால் சனியினால் ஏற்படும் சங்கடங்கள் அகலும். சர்க்கரை, கடலைப்பருப்பு, நெய், அரிசி ஆகியவற்றை மாதப் பிறப்பன்று தானமளித்தால், வீட்டில் அன்னபூரணியின் கடாட்சம் கிட்டும்.

இரவில் ஒரு கைப்பிடியளவு பச்சைப் பயிறை நீரிலிட்டு, மறுநாள் அதனை புறாக்களுக்கு உண வாக அளித்தால் புதனால் ஏற்படும் தோஷம் நீங் கும்.

வெள்ளிக்கிழமைகளில் பசுக்களுக்கு புல் அளித்தால் சுக்கிரனின் அனுக்கிரகம் கிடைக்கும்.

இரவில் படுக்கையில் தலை அருகே கீரை இலைகள் கொஞ்சத்தை வைத்திருந்து, அதனை மறுநாள் ஒரு பசுமாட்டிற்குக் கொடுக்கவும். இவ் வாறு மூன்று செவ்வாய்க்கிழமைகள் கொடுக் கவும். செவ்வாயினால் உண்டாகும் தோஷம் நீங்கும். ஆடுகளுக்கு உணவளித்தலும் நன்று.

மேற்கண்டவை எல்லாமே எளிதான எல்லாரும் செய்யக்கூடிய பரிகாரங்கள். வசதி உள்ளவர்கள் ஹோமம் போன்ற சற்று செலவுள்ள பரிகாரங்களைச் செய்யலாம். அனைத்து கிரக தோஷத்திற்கும் நவ கிரக ஹோமம் நல்லது. பாலாரிஷ்ட தோஷம், அற்ப ஆயுள் தோஷம் போன்றவற்றுக்கு ஆயுள் ஹோமம் சிறந்தது.

விபத்தை ஏற்படுத்தும் கிரக அமைப்புகள், கண் டக தோஷம் போன்றவற்றை நிவர்த்தி செய்ய மிருத் யுஞ்சய ஹோமம் சிறந்தது. எதிரிகள் தொல்லை, செய்வினை தொல்லைகள் உள்ளவர் கள். சுதர் சன ஹோமம் அல்லது மிருத்யுஞ்சய ஹோமம் செய்தல் நல்லது. இதே ஹோமங்களை மாரக தசா புக்திகள் நடக்கும் போதும் செய்தால் நல்ல பலன் கிடைக்கும். ஏழரைச் சனி நடக்கும் போது நவகி ரக ஹோமமும், கணபதி ஹோமமும் நடத்தினால் ஏழரைச் சனியினால் ஏற்படும் தடைகள் மட்டுப் படும். திருமணத் தடை நீங்க சுயம்வர கலா பார்வதி ஹோமம் செய்யலாம். எதிரிகளை வெல்லவும், அர சியல் வெற்றிக்காகவும் சண்டி ஹோமம் செய்வர். வெள்ளிக் கிழமைகளில் கோ பூஜை செய்வது மகா லட்சுமியின் கடாட்சம் பெருக வழி செய்யும்.

மேற்கண்ட யாகங்களை ஹோமங்களை சொந்த செலவில் நடத்த முடியாதவர்கள், பொது இடங்கள், கோவில்களில் நடக்கும் போது அதில் பங்கு பற்றி புண்ணியம் பெற லாம். விஷ்ணுவை மட்டுமே வணங்கும் வைஷ் ணவர்கள், சூரியனை வணங்க ராமரையும் சந்திரனை வணங்க கிருஷ்ணரையும், செவ் வாயை வணங்க நரசிம்மரையும், புதனுக்கு வேங்கடாசலபதியையும், குருவுக்கு வாம னரையும், சுக்கிரனுக்கு லட்சுமியையும், சனிக்கு கூர்ம அவதாரத்தையும், ராகுவுக்கு வராகரையும், கேதுவுக்கு மத்சய என்ற மீன் அவதாரத்தையும் வணங்கவும்.

• ஆர். மகாலட்சுமி

## மகா வாக்கியங்கள்!

சுவாமி விவேகானந்தர், ஒருவர் தனது முக்திக்காகவும் உலக நன்மைக் காகவும் வாழ்தல் என்ற கருத்தை ஆத்மனோ மோக்ஷார்த்தம் ஜகத்ஹிதாய ச என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற மகா வாக்கியத்துடன் ஆத்மனோ மோக்ஷார்த் தம் ஜகத்ஹிதாய ச என்பதையும் மற்றொரு மகா வாக்கியமாகவே நாம் கொள்ள வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாமுயற்சியும், துணிச்சலும் கொண்டு செயல்படும் தனுசு ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு தன ஸ்தானத்தை பார்வை இடுவது வாகன வசதி களையும் மனைவீடு வாங்கும் வாய்ப்பும் அமைத்து தருவார். ஏற்ற மான காலமாக அமையும்.

**பணியாளர்களுக்கு**

தொழிலில் எதையும் ஆர்வத்து டன் செய்து கவனமாக செயல்படு வீர்கள். புதிய தொழிலில் ஆர்வமுடன் செயல்பட்டு பாராட்டுதல்களை பெறுவீர்கள். திறமையை வளர்த்து செயலில் வெற்றியை பெறுவீர்கள். தலைமை பண்புகளை நன்றாக அறிந் திருப்பீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர் களுக்கு**

அரசியல்வாதிகளும், பொது நல ஆர்வலர்களும் சிறந்து விளங்கு வீர்கள். எதிலும் ஈடுபாடுகளுடன் செயல்பட்டு திறமையை வெளிப் படுத்துவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். பொது நலனில் நீங்கள் மற்றவர்களின் எதிர்பார்ப்பு தகுந்தபடி நடந்து கொள்வீர்கள்.



**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

சனிக்கிழமைகளில் பைரவரையும் அம்மனை யும் தொடர்ந்து வழிபட்டு நெய் விளக்கு ஏற்றிவர சகலகாரியமும் சாதகமாக அமையும்.

தொழில்நுட்ப அறிவியலில் சிறந்து விளங்குவீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

29.08.2016 திங்கள் அதிகாலை 05.28 முதல் 31.08.2016 புதன் பகல் 11.30 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**மூலம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

முதலீடு இல்லாத தொழிலில் ஆதாயம் கிட்டும். வரவுக்கு உட்பட்டு செலவுகளை செய்வீர்கள். சேமிப்பு செய்ய வாய்ப்பு அமையும். பொருளாதாரம் சிறக்கும்.

**பூராடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

பொது நலனில் சிரத்தையுடன் செயல்படுவீர்கள். ஆபத்து காலங் களில் பிறருக்கு உதவிகளை செய் வீர்கள். தொழிலில் முன்னைவிட முன்னேற்றம் உண்டாகும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்**

அரசாங்க சலுகைகள் கிடைக்கும். வெளிப்படையான சில காரியங்கள் உங்களை ஊக்கப்படுத்தும் தினசரி செய்ய வேண்டியதை தெளிவாக செய்து முடிப்பீர்கள்.

# தனுசு



துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

**வியாபாரிகளுக்கு**

தொழிலில் முன் ஆலோசனையுடன் செயல் படுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் குரு அமர்ந்தி ருப்பது உங்களின் வியாபார வளர்ச்சிக்கு உறுது ணையாக அமையும். தங்க நகை அடகு, விலை உயர்ந்த பொருட்களின் மூலம் ஆதாயம் கிடைக்கும். பொருளாதாரத்தில் மேன்மை தரும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினருக்கு நெருக்கடிகள் மறைந்து நற்பலன் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப காரிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவீர்கள். வெற்றி பாதையைத் தேர்வு செய்து வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதார நிலையில் வளர்ச்சியை தரும்.

**பெண்களுக்கு**

பெண்களின் சிறப்பை அறிந்து செயல்படுவீர்கள். நினைத்ததை சாதித்து கொண்டிருப்பீர்கள். சுய தொழிலில் கவனமுடன் செயல்படுவீர்கள். பொரு ளாதாரம் சிறப்பாக அமையும்.

**மாணவர்களுக்கு**

கடல் ஆராய்ச்சி, ஆசிரியர் பயிற்சி, கணிணி துறையில் கல்வியில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள்: மஞ்சள், நீலம், வெண்மை
அதிர்ஷ்ட திசைகள் : கிழக்கு, தென்கிழக்கு, மேற்கு
அதிர்ஷ்ட கிழமைகள் : வியாழன், வெள்ளி, சனி

## மார்கழி பூஜை

மார்கழி மாதத்தில் சூரிய உதயத்திற்கு முன்பு நீராடி வழிபாடு செய்வது வழக்கம். வாசலில் கோலமிடுவது பூஜையின் ஓர் அங்கம். பூசணியும் பரங்கியும் காய்த்து, அதன் மேல் பூ தோன்றும் இயல்பு கொண்டவை. (மற்றச் செடிகளில் பூத்த பிறகு காய் தோன்றும்.) பூவுடனே காய் தோன்றுவது நாம் காரியம் தொடங்கும் போதே, அதன் பயன் சித்திக்கும் என்பதற்கு அடையாளமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனிமனித வாழ்க்கையை செம்மைப்படுத்தும் கீதை

நல்ல உணவை உட்கொண்டால் நமது உடல் நல்ல ஆரோக்கிய நிலையில் இருக்கிறது. பொருந்தாத உணவை உட்கொண்டால் உடல் நலம் கெடுகிறது.

அதுபோல் வியாபார ரீதியில் எழுதப்படும் மனிதனின் மிருக இயல்பைத் தூண்டும் தீய நூல்கள் தீய பத்திரிகைகள், பொருந்தாத உணவு போன்றவை. அவற்றைப் படிப்பதால் மனிதனின் மன நிலை பாதிக்கப்படும். அறியாமை என்ற இருள் மேலும் மேலும் சூழ்ந்து கொள்ளும். மனதின் ஆற்றல்கள் சிதைந்து போகும். உயர்ந்த சிந்தனைகளைச் சிந்திக்க இயலாத நிலை ஏற்படும். உயர்ந்த இலட்சியத்திலிருந்து நழுவும் நிலை ஏற்படும். உடல்நலம் பாதிக்கப்படும்.

இதற்கு மாறாக, நல்ல உணவு மனிதனின் உடல் நலத்தை உறுதிப்படுத்துவதுபோல், மனிதன் தன்னிடமுள்ள தெய்வீக இயல்புகளை வெளிப்படுத்த உதவும் பெருநூல் கீதை.

கீதையைக் கற்பது நமது மனதை வளப்படுத்தும். முடிவில் ஆத்மஞானத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும்.

“எவனால் பகவத்கீதை சிறிதேனும் படிக்கப்பட்டதோ, கங்கா தீர்த்தம் துளியேனும் பருகப்பட்டதோ விஷ்ணுவின் அர்ச்சனை ஒரு தடவையேனும் செய்யப்பட்டதோ அவனுக்கு யமனிடம் பயப்பட வேண்டிய நிலை ஏற்படாது என்று, பஜகோவிந்தம் கீதையின் முக்கியத்துவத்தை இரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறது. கீதை கங்கை போன்றது. கங்கையின் ஒவ்வொரு துளி நீரும் புனிதம் வாய்ந்தது. அதுபோல் கீதையின் ஒவ்வொரு சுலோகமும், தெய்வீகமும் முக்கியத்துவமும் உடையது.

கீதையிலிருந்து தினமும் ஓர் அத்தியாயத்தைப் பாராயணம் செய்வது தினமும் ஒரு சுலோகத்தை மனப்பாடம் செய்து, அதன் பொருளை ஆழ்ந்து சிந்திப்பது ஆகியவை ஆரோக்கியம் வாய்ந்த மிகவும் நல்ல பழக்கங்களாகும். இதை ஆத்மசாதகர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் ஓர் அங்கமாகவே கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்விதம் செய்வது நமது தனிமனித வாழ்க்கைக்கு ஆன்மீக வளம் சேர்ப்பதோடு சமுதாய நலனையும் மேன்மை பெறச் செய்யும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆர்.பொன்னம்மாள்



# அலங்காநல்லூர் அருள்மிகு முனியாண்டி!

அமைவிடம் மதுரையிலிருந்து 18 கி.மீ தொலைவில் உள்ளது அலங்காநல்லூர். கேரள ராஜ வம்சத்தில் பிறந்தவர் இந்த முனியாண்டி பிரசித்தி பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு இவர் உத்தரவில் தான் நடத்தப்படுகிறது.

முனியாண்டி சிறுவனாயிருந்த போதிலிருந்தே துஷ்டத்தனம் அதிகம் செய்வார். வளர்ந்தால் சரியாகிவிடும் என்று பெரியவர்கள் சமாதானம் செய்து கொண்டனர். ஆனால் ஆள் வளர்ந்த பிறகும் பல மடங்கு வலதுக்கேற்றபடி விஷமங்களும் விருத்தியாயின. மது அருந்திவிட்டு முனியாண்டி செய்த அட்டகாசங்களைத் தாங்கமாட்டாமல் ஊரார் அவர் உயரத்துக்கு மரப்பெட்டி செய்யச் சொல்லி, அவரைக் கட்டிப் போட்டு உள்ளே அடைத்து ஆற்றில் விட்டு விட்டார்கள். கரை ஒதுங்கிய பெட்டியைச் சிலர் எடுத்து வந்து பெரியகுளத்தில் இருந்த தொட்டிய நாயக்கர்களிடம் சேர்த்தனர். அவர்கள் அதை திறக்க முயற்சித்தபோது "அலங்கா நல்லூருக்குப் போய் அங்கேயிருக்கும் திருப்பதி நாயக்கரின் வளத்தில் எனக்கு ஆலயம் எழுப்புங்கள். நான் உங்களைக் காப்பாற்ற வந்தவன்" என்று பெட்டிக்குள்ளிருந்து குரல் வந்தது. ஆனால் அவர்களோ பயந்துபோய் மறுபடியும் பெட்டியை ஆற்றில் விட்டு விட்டனர். நீரில் மூழ்கி நெடு நேரம் ஊறியிருந்ததால் மரப்பெட்டி உடைந்தது. படுத்திருந்த முனியாண்டி ஆலமரத்தடியில் சிலையாக எழுந்தருளினார். ஊர் மக்கள் முட்டை, சுடுக்காய், சுண்ணாம்பு ஆகிய எல்லாவற்றையும் குழைத்துக் கலந்து சிலைக்குப் பூசினார்கள். நாயக்கர்கள் பூஜை செய்தனர்.

பக்தர்கள் தங்கள் கஷ்டம் தீர புளியோதரை, எலுமிச்சை சாதம், சர்க்கரைப் பொங்கல், பஞ்சாமிர்தம், தயிர் சாதம், வாழைக் குலை, கரும்பு என்றெல்லாம் நிவேதித்தார்கள். ஆனாலும் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் முற்றிலுமாக தீர்ந்தபாடில்லை! பூஜையில் என்ன குறை என்று குழம்பினார்கள். அந்த நேரம் மல்லக் கோட்டையிலிருந்து ஹரிஜனங்கள் குடி புகுந்திருந்தனர். வலசை பக்கத்திலுள்ள நதியில் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த சிறு பெண்ணை ஆற்று வெள்ளம் இழுத்துக் கொண்டு போயிற்று. அவளுடைய தமையன்களான சோணாசலமும், நொண்டியும் ஆற்றில் குதித்துத் தேடினார்கள். அப்போது "அலங்காநல்லூருக்குப் போங்க" என்று அசரீரியின் குரல் கேட்டது. அவ்வாறே சென்றதும் பெண்ணை பத்திரமாக மீட்டனர். அந்தப் பெண்ணின் தந்தை பொற்றாமனுக்கு கட்டுமஸ்தான தேகம். ஆற்றங்கரையிலுள்ள முனியாண்டி கோவிலுக்கு கும்பிட





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த அவருக்கு அருள் வந்துவிட்டது. திருநீறு தூவியும் ஆட்டம் கட்டுப்படவில்லை! வேடிக்கை பார்த்த ஒருவரின் கையிலிருந்த மது பாட்டிலை "வெடுக்"கென்று பறித்தார். தலையைச் சிலுப்பிக் கொண்டு "மளுக், மளுக்" கென்று குடித்து ஏப்பம் விட்டார். "இப்போதுதான் எனக்கு சரியான படையல் கெடச்சது! உங்க கஷ்டமெல்லாம் தீர்ந்தது. போங்க என்றபடி "சாமி" மலையேறியது. அப்போது முதல் பொற்றாமன் அந்தச் சாமிக்குப் பூசாரியானார். அன்றிலிருந்து ஜனங் களின் அவலங்கள் முற்றிலுமாக நீங்கின. மது, இறைச்சி என்று பக்தர்கள் முனியாண்டிக்கு சமர்ப்பித்தனர்.

மீண்டும் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் அலங்காநல்லூர் மக்கள் வாந்திபேதியால் சிரமப்பட்டனர். குஞ்சும், குளுவானுமாக மக்கள் மண்ணுக்கு இரையாயினார். "இங்கே மஞ்சு விரட்டு நடத்துங்க. திமிரெடுத்தவன், போட்டி, பொறாமைக்காரன் மாடு பிடிப்பான். அது எனக்கு உசிர்காணிக்கை" என்று பூசாரி மேல் இறங்கி அருள்வாக்குச் சொன்னார் முனியாண்டி. அது முதல் பொங்கல் திருநாளை அடுத்து இங்கு ஜல்லிக்கட்டு எனப்படும் மாடு பிடிக்கும் ஆட்டம் நடைபெற்று வருகிறது. தைமாதம் மாட்டுப் பொங்கலுக்கு மறுநாள் வாடிவாசலுக்கு மாடுகள் வருமுன் இங்கே திருநீறு வைக்கப்படுகின்றன. முப்பது மாடுகளில் ஆரம்பித்த ஜல்லிக்கட்டுக்காளைகளின் எண்ணிக்கை இன்று ஐந்நூறையும் தாண்டிவிட்டன. பங்குனி மாதம் ஐந்து நாட்கள் திருவிழா. செவ்வாயிலிருந்து சனிக்கிழமை வரை அலங்காநல்லூர் திமிலோகப்படுகிறது. குலவை யிட்டுப் பொங்கல் வைக்கிற கூட்டம் ஒருபுறம்! ஐயனார் சிலையை மந்தையில் வைத்து ஜல்லிக்கட்டு மைதானத்தில் குதிரைக்கால் நாடகம் நடத்தப்படுகிறது. மாட்டின் உடம்பில் வைக்கோல் பிரியைக் கட்டி வயலில் அவிழ்த்து விடுகிறார்கள். இன்றளவும் அது எருதுக்கட்டு என்று கொண்டாடப்படுகிறது. மண்ணால் முனியாண்டி உருவத்தைச் செய்து, வண்ணம் பூசி கிராமத்தில் "புறப்பாடு" நடக்கிறது. அப்போது கிராமத்துப் பெண்கள் பலருக்கு அருள் வந்து "சாமி"யாடுகிறார்கள். பொற்றாமனின் வாரிசுகள்தான் பூசாரிகளாக இருந்து வழிபாடுகள் செய்கின்றனர். சடை முடிதரித்த முனியாண்டி சாமிக்குப் பின்னாலுள்ள மரத்தில், தொட்டில் கட்டி பிள்ளை வரத்துக்கும் வேண்டிக் கொள்கிறார்கள். அலங்காரநல்லூர் முனியாண்டி எல்லோராலும் விரும்பி வழிபடப்படும் ஜல்லிக்கட்டு தெய்வம்! ●

## வாழ்க்கையின் இயல்பை உணர்த்திய வறுமை!

உலக வாழ்க்கையின் இயல்பை வறுமைதான் நரேந்திரருக்கு உணர்த்தியது. அந்த வறுமையும் பரிவ்ராஜக வாழ்க்கையும் இல்லாமல் இருந்திருந்தால் பிற்காலத்தில் விவேகானந்தர் அந்த அளவுக்குச் சமுதாய நலன் பற்றியக் கருத்துக்களைப் பேசியிருப்பாரா என்பது சந்தேகம் தான். சமுதாய நலனுக்குத் தேவையான ஆக்கபூர்வமான கருத்துக்களை அவர் நிறையச் சொல்லியிருக்கிறார். அவ்விதம் அவர் சமுதாய நலன் பற்றிய கருத்துக்களை வழங்க வேண்டும் என்பதற்காகவே தெய்வம் அத்தகைய சூழ்நிலைகளில் அவரை வைத்தது போலும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கால பைரவர்

## 108 போற்றிகள்!



ஓம் பைரவனே போற்றி
ஓம் பயநாசகனே போற்றி
ஓம் அஷ்டரூபனே போற்றி
ஓம் அஷ்டமித் தோன்றலே போற்றி
ஓம் அயன்குருவே போற்றி
ஓம் அறக் காவலனே போற்றி
ஓம் அகந்தையழிப்பவனே போற்றி
ஓம் அடங்காரின் அழிவே போற்றி
ஓம் அற்புதனே போற்றி
ஓம் அசிதாங்கபைரவனே போற்றி
ஓம் ஆனந்தபைரவனே போற்றி
ஓம் ஆலயக் காவலனே போற்றி
ஓம் இன்னல் பொடிப்பவனே போற்றி
ஓம் இடுகாட்டு இருப்பவனே போற்றி
ஓம் உக்ரபைரவனே போற்றி
ஓம் உடுக்கையேந்தியவனே போற்றி
ஓம் உதிரங்குடித்தவனே போற்றி
ஓம் உன்மத்த பைரவனே போற்றி
ஓம் உறங்கையில் காப்பவனே போற்றி
ஓம் ஊழித்தருள்வோனே போற்றி
ஓம் எல்லைத் தேவனே போற்றி
ஓம் எளிதில் இரங்குபவனே போற்றி
ஓம் கபாலதாரியே போற்றி
ஓம் கங்காள மூர்த்தியே போற்றி
ஓம் கர்வபங்கனே போற்றி
ஓம் கல்பாந்தபைரவனே போற்றி
ஓம் கதாயுதனே போற்றி
ஓம் கனல்வீசுங் கண்ணனே போற்றி
ஓம் கருமேகநிறனே போற்றி
ஓம் கட்வாங்கதாரியே போற்றி
ஓம் களவைக்குலைப்போனே போற்றி
ஓம் கருணாமூர்த்தியே போற்றி
ஓம் கால பைரவனே போற்றி
ஓம் காபாலிகர் தேவனே போற்றி
ஓம் கார்த்திகையில் பிறந்தவனே போற்றி
ஓம் காலாஷ்டமி நாதனே போற்றி
ஓம் காசி நாதனே போற்றி
ஓம் காவல் தெய்வமே போற்றி

ஓம் க்ரோதபைரவனே போற்றி
ஓம் கொன்றைப் பிரியனே போற்றி
ஓம் சண்டபைரவனே போற்றி
ஓம் சட்டை நாதனே போற்றி
ஓம் சம்ஹார பைரவனே போற்றி
ஓம் சம்ஹார காலபைரவனே போற்றி
ஓம் சிவத்தோன்றலே போற்றி
ஓம் சிவாலயத்திருப்போனே போற்றி
ஓம் சிக்ஷகனே போற்றி
ஓம் சீர்காழித்தேவனே போற்றி
ஓம் சுடர்ச்சடையனே போற்றி
ஓம் சுதந்திர பைரவனே போற்றி
ஓம் சிவஅம்சனே போற்றி
ஓம் சுவேச்சர பைரவனே போற்றி
ஓம் சூலதாரியே போற்றி
ஓம் சூழ்வினையறுப்பவனே போற்றி
ஓம் செம்மேனியனே போற்றி
ஓம் க்ஷேத்ரபாலனே போற்றி
ஓம் தனிச்சன்னதியுடையானே போற்றி
ஓம் தலங்களின் காவலனே போற்றி
ஓம் தீதழிப்பவனே போற்றி
ஓம் துர்வப்னநாசகனே போற்றி
ஓம் தெற்கு நோக்கனே போற்றி
ஓம் தைரியமளிப்பவனே போற்றி
ஓம் நவரஸ ரூபனே போற்றி
ஓம் நரசிம்ம ரூபனே போற்றி
ஓம் நள்ளிரவு நாயகனே போற்றி
ஓம் நரகம் நீக்குபவனே போற்றி
ஓம் நாய் வாகனனே போற்றி
ஓம் நாடியருள்வோனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நிர்வாணனே போற்றி
ஓம் நிறைவளிப்பவனே போற்றி
ஓம் நின்றருள்வோனே போற்றி
ஓம் பயங்கர ஆயுதனே போற்றி

ஓம் பகையழிப்பவனே போற்றி
ஓம் பரசு ஏந்தியவனே போற்றி
ஓம் பலிபீடத்துறைவோனே போற்றி
ஓம் பாபபக்ஷயனே போற்றி
ஓம் பாவம் துலைப்போனே போற்றி
ஓம் பால பைரவனே போற்றி
ஓம் பாம்பணியனே போற்றி
ஓம் பிரளயகாலனே போற்றி
ஓம் பிரம்மசிரச்சேதனே போற்றி
ஓம் பூஷண பைரவனே போற்றி
ஓம் பூதப்ரேதநாதனே போற்றி
ஓம் பெரியவனே போற்றி
ஓம் பைராகியர் நாதனே போற்றி
ஓம் மலநாசகனே போற்றி
ஓம் மஹா பைரவனே போற்றி
ஓம் மணிஞானனே போற்றி
ஓம் மகர குண்டலனே போற்றி
ஓம் மகோதரனே போற்றி
ஓம் மார்த்தாண்ட பைரவனே போற்றி
ஓம் முக்கண்ணனே போற்றி
ஓம் முனீஸ்வரனே போற்றி
ஓம் மூலமூர்த்தியே போற்றி
ஓம் யமவாதனை நீக்குபவனே போற்றி
ஓம் யாவர்க்கும் எளியவனே போற்றி
ஓம் ருத்ரனே போற்றி
ஓம் ருத்ராக்ஷதாரியே போற்றி
ஓம் வடுகபைரவனே போற்றி
ஓம் வடுகநாதனே போற்றி
ஓம் வடகிழக்கருள்வோனே போற்றி
ஓம் வடைமாலைப் பிரியனே போற்றி
ஓம் வாரணாசிவேந்தே போற்றி
ஓம் வாமனர்க்கருளியவனே போற்றி
ஓம் விரிஷண பைரவனே போற்றி
ஓம் வீழாமல் காப்பவனே போற்றி
ஓம் ஸ்வர்ணவயிரவனே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை விரும்பும் பணிவான குணம் கொண்ட மகர ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வை பெறுவதும் சனி பார்வை பெறுவது வளர்ச்சிக்கு வழி வகுக்கும். பணியாளர்களின் வாழ்க்கை வளம் பெறும்.

**பணியாளர்களுக்கு**

பணியின் சிரமத்தை அறிந்து உங்களை மாற்றிக் கொள்ள பழகிக் கொள்வீர்கள். விருப்பத்தை தெரிந்து செயல்படுவீர்கள். உங்களை மதிப்பவர்களுக்கு நீங்கள் விசுவாசமாக இருந்து கொள்வீர்கள். பொருளாதாரத்தில் வெற்றி கிட்டும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

சொன்ன சொல்லை காப்பாற்ற எதையும் செய்யும் மனம் கொண்டு விளங்குவீர்கள். உங்களை நம்பி வந்தவருக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்து வளமான வாழ்க்கையை வாழ வழிகளை ஏற்படுத்தி தரு வீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.



## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

பிரதோச காலங்களில் சிவன் கோவில் சென்று வழிபாடு செய்து வர தொழிலிலும், வேலையிலும் கஷ்டம் நீங்கி சுபிட்சமாக வாழ்வீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

31.08.2016 புதன் பகல் 11.31 முதல் 02.09.2016 வெள்ளி இரவு 07.59 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்**

அரசாங்க காரியங்களில் அனுகூலமாக இருக்கும். அரச ஊழியர்கள் சம்பள உயர்வு பெறுவார்கள். சிறப்பு சலுகைகள் கிடைக்கும். எண்ணிய எண்ணம் நிறைவேறும்.

**திருவோணம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கிழக்கு திசை நோக்கி செல்பவர் களுக்கு தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். முக்கிய திருவிழாக்களில் உங்களுக்கு உரிய மாரியாதை கிடைக்கும்.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

அமைதியான வாழ்க்கை விட்டு வேகமாக செயல்பட ஆரம்பிப்பீர்கள்.

# மகரம்



துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

**வியாபாரிகளுக்கு**

தொழிலில் உயர்வான நிலை அடைய முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். ஆடம்பர பொருட்கள் வண்டி வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். எளிமையான வாழ்க்கையிலிருந்து வசதியான வாழ்க்கைக்கு மாறி வாழ்க்கையை மாற்றிக் கொள்வீர்கள். பண வரவு நன்றாக இருக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் தேடிவரும் சினிமா, தொலைக்காட்சி தொடர்களில் ஒப்பந்தங்கள் பெற சிலருக்கு வாய்ப்புகள் அமையும். அழகு சாதன கடைகள் வைத்திருப்பவர்களுக்கு வருமானம் பெருகும்.

**பெண்களுக்கு**

பெண்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றம் உண்டாகும். பல காலம் காத்திருந்த நற்காரியம் இனி இனிதாக நடக்கும். வருமானம் பெருகும். நினைத்த காரியம் வெற்றியை தரும்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் சிறந்து வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவ கல்வி சிறந்து விளங்குவீர்கள்.

கொடுக்கல் வாங்கலில் கண்டிப்புடன் நடந்து கொள்வீர்கள். பொருளாதார முன்னேற்றம் தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்: நீலம், மஞ்சள், சிவப்பு**
**அதிர்ஷ்ட திசைகள் : தெற்கு, தென்கிழக்கு, வடகிழக்கு**
**அதிர்ஷ்ட கிழமைகள் : சனி, வியாழன், ஞாயிறு**


## ஆவணி அவிட்டம்!

ஆவணி அவிட்டம் என்பது ஆவணி மாதத்தில் வரும் அவிட்ட நட்சத்திரம் கூடிய தினமாகும். வேத அத்தியயனம் செய்பவர்கள் தை மாதம் பௌர்ணமியில் தொடங்கி, ஆவணி அவிட்டத்தன்று அதைப் பூர்த்தி செய்வது என்பது பழைய கால வழக்கம். இவ்விதம் பூர்த்தி செய்வது "உபாகர்மம்" எனப்படும். இது மறுநாள் காயத்ரி ஜபம் 1000 செய்து நிறைவுபெறும். இது ஆவணி அவிட்டத்தின் சிறப்பு. அதற்குப் பிறகு மற்றச் சாஸ்திரங்களின் ஆராய்ச்சி அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐந்து முகம்-கைகளுடன் விநாயகர்!



***நல்லகம்பனை எங்கள் பிரானைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே***

என்று சுந்தர மூர்த்தி சுவாமிகளின் தேவாரத் திருமுறை நல்ல கம்பனைப் போற்றுகின்றது. இந்த நல்ல கம்பருக்கு அருகேதான் கம்பனைப் போற்றுகின்றது. இந்த நல்ல கம்பருக்கு அருகேதான் நிலாத் துண்ட பெருமான் சன்னதியுள்ளது. பாற்கடல் கடையப்பட்ட காலத்தில் மத்தாக உதவிய மேரு மலையைத் தாங்கிக் கடலில் நிறுத்துவதற்காக மகா விஷ்ணு ஆமையாக ஆணவம் மிகுந்து அட்டகாசம் புரிந்தது. தேவர்கள் கலங்கினர். எல்லாம் வல்ல சிவ பரம்பொருளைப் பூஜை செய்து பாற்கடலினைக் காப்பாற்றுமாறு தொழுதனர்.

மேரு மலையை வில்லாக வளைத்த முக்கண் முழுமுதல் ஒருமுகமும் நான்குகரங்களும் கொண்ட வடிவத்துடன் வெளிப்பட்டு ஆமையைப் பிளந்து அதன் ஓட்டினை மார்பில் அணிந்து கொண்டு ஆமையிலிருந்து மகாவிஷ்ணுவை வெளிப்படுத்தி மீண்டும் வைகுண்ட வாழ்வை அருளிச் செய்தார். கச்சு என்றால் ஆமை என்று பொருள். கச்சுவாக அவதாரம் செய்த திருமாலுக்கு அருள் புரிந்ததால் பரமேஸ்வரனுக்குக் கச்சபேஸ்வரர் என்றும் கூர்மசம்ஹாரமூர்த்தி என்றும் பெயர்கள் உண்டாயின. கோபுர வாயிலுக்கு அருகே கச்சுவிற்கு அருள்புரிந்த கச்சபேஸ்வரர் சன்னதியுள்ளது. ராஜகோபுரத்திற்கு வெளியேயுள்ள மண்டபத் தூண்கள் முழுவதும் சிவ வடிவங்களையும் மகா விஷ்ணு சிவபூஜை செய்யும் காட்சியையும் நந்தி சண்டீசர் போன்ற பிற திருவுருவங்களையும் கொண்டு அழகுற விளங்குகின்றது. இறைவன் திருவருளால் ஆமையுடல் நீங்கி மீண்டும் தேவவுடல் பெற்ற திருமால் காஞ்சிபுரத்தில் லிங்க மெய்ப் பொருளைப் பிரதிட்டை செய்து வழி பட்டார். கச்சுவான விஷ்ணு சிவபூஜை புரிந்த இந்த இடமே கச்சபேஸ்வரர் திருக்கோயில்.

கச்சபேஸ்வரர் திருக்கோயில் காரணமாகவே காஞ்சிபுரத்திற்குத் திருக்கச்சி என்று பெயர் உண்டாயிற்று. கச்சுவான விஷ்ணு சிங்கப் பெருமாள் கோயில் என்ற ஊருக்கு அருகேயும் சிவ பூஜை செய்து வழிபட்டார். இந்தத் தலமும் கோயிலும் கச்சூர் ஆலக்கோயில் என்று வழங்கப் படுகின்றன. இத்தலத்திற்கு வந்த சுந்தரர் பசியோடு இருந்த போது ஆலக்கோயில் நாதர் பொதி சோறு கொண்டு வந்து தந்து சுந்தரரின் பசியைப் போக்கியருளினார்.

மகாவிஷ்ணு பன்றியாக அதாவது வராகமாக அவதாரம் செய்து பூமியைத் தாங்கிய பின்னர் வராகம் எல்லோரையும் தாக்கியது. தேவர்கள் மற்றும் தெய்வங்கள் செய்த பிரார்த்தனையினால் பரமேஸ்வரன் பன்றியை கிழித்துக் கொம்பு போன்ற அதன் பல்லை மார்பில் அணிந்து கொண்டு மகா விஷ்ணுவை வெளிப்படுத்தியருளினார். பரமனது திருவருளால் பன்றியுடன் நீங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவவுடல் பெற்ற விஷ்ணு கும்பகோணத்திற்கு அருகேயுள்ள சிவபுரம் என்ற தலத்தில் சிவபூஜை புரிந்து வைகுண்டம் சென்றார். இவ்வாறு முழு முதற் பரமன் ஆமைவோடும் பன்றிக் கொம்பும் அணிந்து கூர்ம சங்கார மூர்த்தியாகவும் வராக சம் கார மூர்த்தியாகவும் நின்ற அழகினை

*அழகு ஆமை அணி கோழற்கொம்பு ஆர்த்த*
*தோடு அரவத்து ஒரு காதன்*
*கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க*

என்று ஆணும் பெண்ணும் கலந்த சிவபெரு மானால் தங்கக் கிண்ணத்தில் பால்சாதம் ஊட்டப் பட்டு மூன்று வயதிலேயே மூன்று காலமும் உணர்ந்த சிவஞான மழலை திருஞான சம்பந்தர் போற்றுகின்றார். சிவபூஜை புரிந்து வரம் பெற்ற காமாட்சியம்மனுக்குக் காஞ்சிபுரத்தில் கோயில் கட்டப்பட்டவாறே சிவபூஜை புரிந்த மகா விஷ்ணு விற்கும் காஞ்சித்திருநகரில் கோயில்கள் அமைக் கப்பட்டன.

கஜாசுரனை வதைத்த பின்னர் விநாயகர் திருச் செங்காட்டங்குடி என்ற திருத்தலத்தில் சிவ பூசை புரிந்தார். ஊனம் அடைந்த தலை நீங்கிப் புதிய யானைத்தலை பெற்றார். காஞ்சிபுரம் அடைந்து ஏகாம்பர முழு முதற்பொருளை வழிபட்ட பிள் ளையார், ஆகமேஸ்வரனைப் போன்று ஐந்து முகங்களும் பத்து கரங்களும் கொண்ட வடிவம் பெறுவதற்கு விரும்பினார். வணங்கித் தொழுத விநா யகருக்குப் பரம் பொருள் தன்னுருவை அருளிச் செய்தார். ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில் பிரகா ரத்தில் பிள்ளையார் ஐந்து முகங்களுடனும் பத்து கைகளுடனும் எழுந்தருளியுள்ளார். கோபுரத்திற்கு அருகேயும் தம்பட்டை விநாயகர் என்ற பெய ருடன் பிள்ளையாருக்குத் தனிச் சன்னதி யுள்ளது.

தில்லையில் பதஞ்சலி முனிவருக்கும் வியாக் கிர பாத முனிவருக்கும் திருநடனக் காட்சி தந்தரு ளிய நடராஜப் பெருமாளின் ஆனந்தக் கூத்தினைக் காண விரும்பிய ஆறுமுகன் காஞ்சிபுரம் வந்து மாமரச் சன்னதியில் உள்ள மூல முழுமுதலை வழி பட்ட பின் ஏகாம்பரேஸ்வரரை நினைந்து மாமர நிழலில் தவம் புரிந்தார். ஆறு முகனுக்கு ஆடல் நாயகன் திருக்காட்சி தந்து ஆனந்த நடன தரிசனம் கொடுத்தார். முருகப் பெரு மான் மாவடிக் கந்தர் என்ற பெயருடன் தனிச் சன்னதி கொண்டுள்ளார். நடராஜர் சன்னதிக்கு அருகேயும் ஆறுமுக சுவா மிக்குத் தனிச்சன்னதி உள்ளது. ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள நடராஜர் சன்னதி மிகவும் தனித்தன்மை வாய்ந்தது. தனிக்கோயில் போன்று பெரியதாக இருக்கும் இச்சன்னதியை வலம் வந்து அம்பலவாணரை வழிபட முடியும். ஆடல் அழ கனின் அலங்காரத்தை

*எழில் கொள் கச்சி நகர் ஏகம்பத்து*
*அண்ணலார் ஆடுகின்ற அலங்காரமே*

என்று தமிழ் வளர்த்த திருஞான சம்பந்தப் பெருமான் பாடுகின்றார். மற்ற சிவாலயங்களில் லிங்கப் பரம்பொருள் உள்ள கருவறைக்கு அருகே மட்டும் உள்ள சண்டீஸ்வரர் ஏகாம்பரேஸ்வரர்த் திருக்கோயிலில் நடராஜர் சன்னதிக்கு அருகேயும் உள்ளார். பிரம்மன் சிரம் அரிந்த பைரவருக்கும் இத்திருக்கோயிலில் தனிச் சன்னதி உள்ளது. வசிஷ்டர், விசுவாமித்திரர், பரத்வாஜர், வால்மீகி, பதஞ்சலி, வியாக்கிர பாதர், அகத்தியர், திருமூலர் மற்றும் பலப்பல பழம்பெரும் முனிவர்களால் பிரதிட்டை செய்து வழிபடப்பட்ட நூற்று முப்பத் தாறு லிங்கங்கள் கோயில் பிரகாரம் முழுவதும் வரிசையாக உள்ளன.

**(தொடரும்)**

*✍டொக்டர் சிவப்பிரியா*

## இருள் மார்க்கமும் ஒளி மார்க்கமும்!



இருள் மார்க்கம் ஒளி மார்க்கம் ஆகியவை பற்றி பகவத்கீதையில் எட்டா வது அத்தியாயத்தின் முடி வில் சொல்லப்பட்டுள்ளன. கர்ம காண்டத்தில் பற்றுள் ளவர்கள் இறந்த பிறகு இருள் மார்க்கத்தில் சென்று, மீண்டும் உலகில் பிறவியை அடைகிறார்கள். ஞானமும் பக்தியும் நல்லொழுக்கமும் மிக்கவர்கள் ஞானம் ஒளிவிடும் ஒளி மார்க்கத்தில் சென்று, படிப்படியாக உயர்ந்த உலகங்கள் சென்று, முக்தி அடைகிறார்கள். அவர்கள் மானிட உலகத்திற்கு மீண்டும் திரும்பி வருவதில்லை என்று உப நிஷதம், பகவத்கீதை முதலிய சாஸ்திரங்கள் கூறுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பம்

துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை



தெளிந்த மனமும், திறமையைக் கொண்டு எதையும் செயல்படுத்தும் கும்ப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம கேது வும், ஏழில் ராகுவும் குழப்பத்தை தந்தாலும் ராசிநாதன் தொழில் ஸ்தானத்தில் இருந்து ஏழாமிடத்தை பார்ப்பது நல்ல பலனை தரும்.

**பணியாளர்களுக்கு**

பணியாளர்களின் திறமைக ளுக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்களின் வாழ்க்கை உழைப்பை நம்பி இருக்கும் என்பதை உணர்ந்து உழைப்பை மூலதனமாக வைத்து தொழிலில் உண்மையை உணர்ந்து செயல்படுவீர்கள். பொருளாதார நிலையில் வெற்றி தரும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது வாழ்வில் உறுதியான நிலை யைக் கொண்டு செயல்படு வீர்கள். புதிய முயற்சிகளில் உங் களுக்கு நன்மையை பெற்று தரும். வரவுக்கு மீறிய செலவுகளை தவிர்ப்பது நல் லது. பொது கருத்தால் சிலருக்கு பிரச்சினை வரலாம். தவிர்த்து விடவும்.

**வியாபாரிகளுக்கு**

தொழிலில் இருந்த போட்டிகள் மறையும். உங் களின் முயற்சிகளுக்கு நல்ல பலன் பெற்று தரும். தொழிலில் வரவு நன்றாக இருக்கும். வெளியூர் சென்று தொழில் செய்து வருபவர்களுக்கு நல்ல மாற்றம் உண்டாகும். பொருளாதாரத்தில் ஏற்றம் பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**


கலைத்துறையினர் கடினமான உழைப்பிற்கு பின்பு சிறப்பாக செயல்படுவீர்கள். ஒப்பந்தபடி சில ருக்கு செயல்பட முடியாமல் போகும். கொடுக்கல் வாங்கலில் சிலருக்க சிக்கல் வரலாம். கவனமாக இருப்பது நல்லது.பொருளாதாரம் சீராக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் முதல் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் இருந்து வருவீர்கள். தன்னை காட் டிலும் சிரமப்படுபவர்களுக்கு உதவிகளை செய் வீர்கள். சுயதொழிலில் உழைப்பிற்கு தகுந்த பலன் கிட்டும்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் கவனம் செலுத்த வேண்டி வரும். உடன் பயிலும் மாணவர்களின் உதவியை பற்றி கவலைப்பட மாட்டீர்கள்.



## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

முஸ்லிம் தர்காவுக்கு வேண்டுதலுக்கு உரிய பொருட்களை வாங்கி கொடுங்கள். சாம்பிராணி, பத்தி வைத்து சிறிது நேரம் அமர்ந்து விட்டு வருவதால் வரும் துன்பம் நீங்கி நல்ல பலனை பெறு வீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

02.09.2016 வெள்ளி இரவு 08.00 முதல் 05.09.2016 திங்கள் காலை 06.38 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்**

கடந்த காலமும் சரி இனி வரும் காலமும் சரி உங்களின் உழைப்பை நம்பியே வாழ்க்கை அமையும். எதையும் தெளிவாக தெரிந்த பின்பு அதை செய்வது நல்லது.

**சதயம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

உங்களை பற்றி மட்டும் பேசி கொண்டிருக்காமல் பிறரின் நலன் பற்றி அதில் ஈடுபாடு கொள்வ தன் மூலம் சுயநலம் கலந்த பொது நலத்தில் உங்களுக்கு வெற்றியை பெற்றுத்தரும்.

**பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்**

பொன் பொருள் சேர்க்கையால் கடந்த காலம் நன்மையை தந்தது இனி இதனை பாதுகாப்பதில் கவனம் செலுத்து வது மிகவும் உறுதுணையாக அமையும்.

அதிர்ஷ்ட நிறங்கள: நீலம், வெண்மை, சிவப்பு
அதிர்ஷ்ட திசைகள் : மேற்கு, தென்கிழக்கு, கிழக்கு
அதிர்ஷ்ட கிழமைகள் : சனி, ஞாயிறு, வெள்ளி

## தர்மத்தில் அடங்குகின்ற தானம்!

"தர், தார்" என்ற சமஸ்கிருத வேர்ச் சொல்லுக்குத் "தாங்குதல்" என்று பொருள். "தானம்" என்ற சொல், பொதுவாக நாம் பிறருக்குச் செய்யும் பொருளுதவியைக் குறிக்கவே உபயோகிக்கப்படுகிறது. தர்மம் என்றால் நல்லொழுக்கம், ஆன்மீக வழியைப் பின்பற்றுதல் பெரியோர் காட்டிய நல்வழியில் வாழ்தல் நியாயமான வழியில் வாழ்க்கை நடத்துதல், தானம் தர்மத்தில் அடங்கும் என்றும் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியே அறிவுக்கு ஆதாரம்!

சுவாமி கமலாத்மானந்தர்



கல்விதான் அறிவுக்கு ஆதாரமாக இருக்கிறது. நாம் புத்தகங்கள் பலவற்றைப் படிக்கக் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது. முக்கியமாக மனிதர்களையும் மனித உள்ளங்களையும் படிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

கல்வி வயிற்றுப்பாட்டை ஒட்டியதாக மட்டுமின்றி, ஒழுக்கத்தையும் ஆன்மீகத்தையும் ஒட்டியதாகவும் இருக்க வேண்டும்.

கல்வியின் பயன் மனிதனை முழு மனிதனாக ஆக்குவதாகும்.

முத்து இல்லாத சிப்பி சிறப்புக்கு உரியதல்ல. அதுபோல் ஒழுக்கத்தைத் தராத கல்வியும் சிறப்புக்கு உரியதல்ல.

சிப்பியில் முத்தும் இருக்க வேண்டும். கல்வியுடன் ஒழுக்கமும் இருக்க வேண்டும்.

ஆன்மீகத்தின் ஓர் அங்கம்தான் ஒழுக்கம். ஆன்மீக அடிப்படையில் கல்வி அமையாவிட்டால், அது மனித மிருகங்களையே உருவாக்கும்.

எனவே நமக்குக் கல்விச் செல்வத்துடன் பண்பாட்டுச் செல்வமும் வேண்டும்.

கல்வி என்பது மனிதனுக்கு உரிய அடிப்படைத் தேவைகளில் ஒன்று. அது பள்ளிக் கூடத்துடன் முடிந்து போவதில்லை. அது வாழ்நாள் முழுவதும் இருக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் தேகத்தையும் ஆன்மாவையும் காப்பாற்றிட

கடவுளை அடைவது, கடவுளை அடைவது என்கிறோமே. அது என்ன சாத்தியமானதா? அப்படி ஒன்று உண்டா?

**கடவுளை அடைவது என்றால் என்ன? மரணமடைந்து அவனோடு ஐக்கியமாவதா? இல்லை.**

மனத்தாலே கடவுளை அடைவதே ஞானி களால் சொல்லப்பட்ட மார்க்கம். கடவுளோடு பேசு வது, கடவுளும் தானும் சகோதரர்கள் என்று கருது வது கடவுளோடு விவாதிப்பது "இவையெல்லாம் கடவுளை அடைவது என்று கொள்ளப்படும். இதற்கு மார்க்கம் என்ன?

தினசரி கோவிலுக்குப் போவதல்ல அது வெற்று சடங்கு. கடமை. சொல்லப் போனால் சமயங்களில் அது வேடமாகவும் தோன்றுவதுண்டு.

கடவுளை அடைய ஒரே வழி, தியானம்.

**தியானம் என்பது என்ன?**

ஒரே பொருளை முழுக்க அறிந்து கொள்ள வேண்டும் என்ற துடிப்போடு பற்றோடு, பிரியத்தோடு ஆழமாகச் சிந்தித்தல்.

பல நேரங்களில், ஏதோ ஒரு விடயம் திரும்பத் திரும்ப நம் நினைவுக்கு வரும். தேகத்திற்குச் சம்பந்தமில்லாமல், ஆன்மா அந்த விடயத்தில் ஐக்கியப் பட்டுவிட்டது என்பதே அதன் பொருள். அது காதலாக இருக் கலாம். தவறில்லை. பாசமாக இருக்கலாம். குற்ற மில்லை. ஆனால் அது இறை வழிபா டாக இருந்தால், ஈடு இணை யில்லாத ஞானம் கைகூடும். எது நமக்குப் பிரிய மானதோ, அதன் வடிவமாகவே நாம் ஆகி விடுகிறோம்.

எல்லா வேதங்களும் இதையே கூறுகின்றன. திருப்பதி மலையே நம் ஞாபகத்தில் இருந் தால், நாம் திருமாலாகவே மாறி விடுகிறோம். நமது நெஞ்சத் திலேயே பத்மாவதி தாயாரும், அலமேலு தாயாரும் இருப்பது போலவே தோன்றுகிறது. நமக்கு மஞ்சள் வர்ணம் தான் பிடிக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். மஞ்சள் நிறத்தில் எதைக் கண்டா லும் நமக்குப் பிரியம் வரும்.

எனக்கு கிருஷ்ணன் மீது பிரியம் அதிகம்.

உடம்பு ஒரு டாக்டரைத் தேடும்போது கூட அந்த டாக்டர் பெயர் கிருஷ்ணன் பெயராக இருந்தால் எனக்கு ஒரு திருப்தி. ஆன்மா ஒன்றைக் குரங்குப் பிடியாகப் பிடிப்பதற்குப் பெயரே, "தியானம்" அப்படிப்பட்ட தியானத்தை ஒருவன் கைக்கொண்டு விட்டால் அவனுடைய நிலை முற்றிலும் வேறாகிவிடும்.

"நான் யார்?" என்ற கேள்விக்கே அங்கே இடம் இருக்காது. "நான் பொய்" என்ற தத்துவம் மாறி, "நானே மெய்" என்ற ஞானம் உதயமாகிவிடும்.

நம்மைவிட உயர்ந்தவர்கள் என்னும் ஞானிகள், மேதைகள் பலர் உலகத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நமக்கும் உள்ள பேதமே அவர்கள் ஈசுவரனை அடையும் முயற்சியில் வெற்றி பெற் றவர்கள். அதனால் ஈசுவரனும் தன்னைப் போல ஒருவனே என்று கண்டு கொண்டவர்கள். ஆக வேதான், இறைவனுக்குச் சமமாக அவர்களை நாம் வணங்குகிறோம்.

பக்குவமற்ற மனிதனுக்கு இது கை கூடாத காரியம் என்பது உண்மையே. வீணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பவன் ஒருவகை தியானம் செய்கிறான். அது ஒரு ஞானியின் தியானத்தைவிட உன்னதமானது. அவன் மனம் ராகத்தில் இருக்கிறது. வாய் அதையே முணு முணுக்கிறது. கை அதையே விளையாடுகிறது. தியான யோகத்தில், இப்படிச் செய்வதுதான் என்று வரையறுக்கப்பட்டாலும், ஞான மார்க்கம் "ஒன்றையே பற்றி நிற்றலே ஞானம்" என்று போதிக்கிறது. கிருஷ்ண விக்கிரகத்தை வைத்து அதனோடு கொஞ்ச உனக்குத் தெரியுமானால், அது இதைவிட உன்னதமான தியானம்.



உடம்பின் ஆரோக்கியத்துக்கும் தியானம் உகந்தது. மகாகவி பாரதி ஈரோட்டில் செய்த சொற்பொழிவில் இப்படிக் கூறுகிறான்.

"அச்சத்தினாலே நாடி தளர்கிறது. கோபத்தினாலே நாடித் துடிப்பு அதிகமாகிறது. பயத்தினாலே நாடி அடங்கி ஒடுங்குகிறது. ஆசையினாலே நாடி வரைமுறை இல்லாமல் இயங்குகிறது. இந்த வரைமுறையற்ற இயக்கத்தினாலே மரணம் சம்பவிக்கிறது. ஆசை,அச்சம், மயக்கம் அனைத்திலிருந்தும் விடுதலைபெற வைப்பதே. தியானம், ஏதேனும் ஒன்றைப் பற்றி நிற்பதே தியானம் என்றாலும் தெய்வத்தைப் பற்றி நிற்பதே அனைத்திலும் உயர்ந்தது. ஆகவே தெய்வத்தையே தியானியுங்கள். உங்கள் தேகமும் ஆன்மாவும் காப்பாற்றப்படும்.

கவியரசன் கண்ணதாசன்.

## ப்ரஹ்மாப்யாஸம்!



மனதைத் திரும்பத் திரும்ப இறைவனைப் பற்றிய சிந்தனையில் ஈடுபடுத்திப் பழகுவது பக்தி யோகத்தில் அப்யாஸ யோகம் எனப்படுகிறது. அதே கருத்து ஞானயோகத்தில் "ப்ரஹ்மாப்யாஸம்" என்று அழைக்கப் பெறுகிறது. சதா சர்வகாலமும் எந்த நிலையிலும் பரப்பிரம்மம் குறித்து வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்களையே சிந்தித்துக் கொண்டிருப்பது, பரப்பிரம்ம தத்துவம் பற்றிய உண்மைகளைத் தகுதி வாய்ந்தவர் களுக்கு எடுத்துச் சொல்வது, மகான் நிலையை அடைந்தவர்கள், மகான் நிலையை விரைவில் அடையப் போகிறவர்கள் என்ற நிலையிலுள்ள ஆன்றோர்களுடன் பரப்பிரம்மம் குறித்துக் கலந்துரையாடுவது, எண்ணெய் ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்திற்கு ஊற்றப்படும் போது எவ்விதம் இடைமுறியாமல் ஒழுகுகிறதோ (தைலதாரை), அதுபோல் இடைமுறியாமல் பிரம்மத்திலேயே கடலில் கரைந்த உப்புப் பொம்மை போல் நிரந்தரமாகக் கரைந்து நிலை பெற்றிருப்பது போன்றவை அனைத்தும் பரஹ்மாப்யாஸம் என்பதில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசனை சபையில் பாண்டவர்கள்!




எதிர்காலத் திட்டங்களைக் குறித்து ஆலோசிக்க பாண்டவர்கள், திரௌபதி, தௌம்யன் ஆகியோருடன் தனியாக ஓர் இடத்தில் கூடினர். "எதிரிகள் நம்மைக் கண்டுபிடிக்காமல் ஒரு வருட காலத்திற்கு மறைந்து வாழத் தகுந்ததோர் இடத்தைக் கூறு" என்று யுதிஷ்டிரர் அர்ஜுனனிடம் கேட்டார்.

அதற்கு அர்ஜுனன், "குரு நாட்டைச் சுற்றி நெடுந்தொலைவில் பாஞ்சாலம் சேதி, மத்ஸ்யம், சூரசேனம், மல்லம், சௌராஷ்டிரம், அவந்தி, குந்திராஷ்டிரம் போன்ற அழகிய நாடுகள் பல உள்ளன. இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்" என்று கூறினான்.

பின்னர் யுதிஷ்டிரர், "மத்ஸ்ய நாட்டுத் தலைவரான வயோதிக வீராடன் அனுபவமிக்க வலிமை வாய்ந்த தரும சிந்தையுள்ள, நேர்மையான அரசர் அவருடைய நாடு நாம் தங்குவதற்கு ஏற்றதாக இருக்கும். நான் ககனகன் என்ற பெயருடன் சதுரங்க நிபுணனாக, பிராமண வேடத்தில் அங்குத் தங்குவேன். என்னுடைய சிறந்த ஆட்டத்தின் மூலம் அரசரை மகிழ்விப்பேன் அரசர் என்னைப் பற்றிக் கேட்டால் "நான் யுதிஷ்டிரருக்கு உயிர் போன்றவன். அவர் என் உயிர் நண்பர்" என்று கூறுவேன்" என்று கூறிவிட்டு பீமனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பார்த்து, "பீமா உன்னுடைய திட்டம் என்ன?" என்று கேட்டார். அதற்கு பீமன், "நான் வல்லாளன் என்ற பெயரில் சிறந்த சமையற்காரனாகச் செல்வேன். வீராட மன்னர் இதுவரையில் சுவைத்திராத, பல சுவையான உணவுவகைகளைச் சமைத்து அவரை சந்தோஷப்படுத்துவேன்" என்று கூறினான்.

பிறகு யுதிஷ்டிரர் அர்ஜுனன் பக்கம் திரும்பி அவனுடைய வீரதீரச் செயல்களைப் புகழ்ந்துரைத்து "அர்ஜுனா, நீ என்ன தொழிலை மேற்கொள்ளப் போகிறாய்? உன்னுடைய பராக்கிரமத்தை எப்படி மறைத்துக் கொள்ளப் போகிறாய்" என்று கேட்டார்.

அதற்கு நகுலன், "நான் வீராட மன்னருடைய குதிரை லாயத்தில் வேலை செய்வேன். தங்களைப் போலவே, எனக்கும் குதிரைகள் பிரியமானவை நான் தமாகி ரந்தி என்ற பெயருடன் அங்கு இருப்பேன்" என்று கூறினான். பின்பு சகாதேவனைப் பார்த்து, "நீ என்ன செய்யப் போகிறாய்" என்று கேட்டார் யுதிஷ்டிரர். அதற்கு சகாதேவன், "நான் தந்திரிபாலன் என்ற பெயருடன் விராட மன்னரின் பசுக்களை மேய்ப் பவனாக இருப்பேன்" என்று கூறினான்.

கடைசியாக யுதிஷ்டிரர் திரௌபதியைப் பார்த்து "திரௌபதி, எங்கள் உயிரினும் மேலானவளே, நீ ஒரு தாயைப் போல் எல்லோர் மனத்திலும் போற்றப்பட வேண்டியவள். கடினமான வேலைகள் செய்து பழக்கப்படாத நீ அங்கு எப்படி இருக்கப் போகிறாய்" என்று கேட்டார். அதற்கு திரௌபதி புன்சிரிப்புடன், "விராட மன்னரின் அரண்மனையில் அரசியின் தோழியாகவும் பணிப்பெண்ணாகவும் சைரந்திரி என்ற பெயருடன் இருப்பேன். நான் யுதிஷ்டிரரின் அரண்மனையில் தாதியாக இருந்ததாக அவர்களிடம் கூறுவேன்" என்று கூறினாள்.

( தொடரும்...)



## மூவகைத் தத்துவ சிந்தனைகள்!

இந்துமதத்தில் அத்வைதம், விசிஷ்டாத் வைதம், துவைதம் ஆகிய மூன்று விதமான முக்கியத்துவம் வாய்ந்த தத்துவச் சிந்தனைகள் இருக்கின்றன. இந்த மூன்றும் ஒன்றுக் கொன்று முரணானவை என்று கருதி, தத்துவ வாதிகள் தங்களுக்குள் பல காலமாகப் பூசலிட்டு வந்தார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் அத்வைதம், விசிஷ்டாத் வைதம், துவைதம் ஆகியவற்றுக்கிடையில் முரண் பாடில்லை என்றும் இவை ஒன்றுக்கொன்று உதவி யாக அமைந்தவை என்றும், இவை ஒரே மனி தனின் ஆன்மீக முதிர்ச்சியின் படிநிலைகள் என்றும் விளக்கினார். இந்த மூன்று தத்துவங் களுக்கிடையில் உள்ள சமரசத்தை ஸ்ரீ ராம கிருஷ்ணர் பெற்ற ஆன்மீக அனுபவங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவான் மோதிரம்

கதை - ஆர்வி

படம் - ஜயந்தி








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகம் என்ன நினைக்கிறது?

அரசன் விக்கிரமாதித்தனும் அமைச்சன் பட்டியும் வழக்கம் போல மாறுவேடத்தில் நகருலா சென்று கொண்டிருந்தார்கள்.

"பட்டி! நாட்டு மக்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?" என்று கேட்டான் விக்கிரமாதித்தன்.

"அரசே! அரண்மனை திரும்பியதும் சொல்கிறேன்" என்றான் பாட்டி.

அவர்கள் எதிரே ஒரு பெண் தலையில் தயிர்ப் பானையுடன் வந்தாள்.

"பட்டி! அந்தப் பெண்ணைப் பார்த்தாயா? பெண்களுக்கு உரிய மென்மையோ நாணமோ இல்லாமல் எருமை மாடு போல நடந்து வருகிறாள். இப்படிப்பட்ட பெண்கள் இருப்பது நம் நாட்டிற்கே அவமானம்" என்றான் விக்கிரமாதித்தன்.

பட்டி பதில் ஏதும் பேசவில்லை.

அந்தப் பெண் அவர்கள் இருவரையும் நெருங்கினாள்.

அவள் அருகே சென்ற பட்டி "அம்மா! அரசர் விக்கிரமாதித்தர் இன்று காலையில் இறந்து விட்டார். நாடே துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கிறது" என்றார்.

அதற்கு அவள் "எந்தப் பாவி இறந்தால் எனக்கு என்ன? இதை ஏன் என்னிடம் சொல்லி எரிச்சலை ஏற்படுத்துகிறாய்?" என்று கோபத்துடன் சொல்லி விட்டு அங்கிருந்து சென்றாள்.

தன்னை இகழ்ந்த அவளைக் கொல்ல வேண்டும் என்று வாளை உருவினான் விக்கிரமாதித்தன்.

அவனை அமைதிப்படுத்தி அங்கிருந்து அழைத்துச் சென்றான் பட்டி.

அவர்கள் எதிரில் கிழவன் ஒருவன் தலையில் விறகுக் கட்டைச் சுமந்து வந்து கொண்டிருந்தான்.

"பட்டி! இந்தக் கிழவரைப் பார்த்தாயா? தள்ளாத வயதிலும் இப்படி உழைக்கிறாரே இவரை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். இப்படிப்பட்டவர்கள் இருப்பதால் தான் நம் நாடு வளமாக உள்ளது" என்றான்.

இப்பொழுதும் பட்டி பதில் ஏது சொல்லவில்லை.

அந்தக் கிழவன் அவர்கள் இருவரையும் நெருங்கினான்.

அவன் அருகே சென்ற பட்டி "அரசர் விக்கிரமாதித்தர் இன்று காலை இறந்து விட்டார்" என்றான்.

"ஐயோ! விக்கிரமாதித்த மகாராசா இறந்து விட்டாரா? அந்தப் புண்ணியவான் உயிரை எமன் கொண்டு சென்று விட்டானா? இனி நாடு என்ன ஆகுமோ? நாங்கள் எப்படி வாழப் போகிறோமோ?" என்று அலறிய அந்தக் கிழவன் விறகுக் கட்டைத் தரையில் போட்டு விட்டு அப்படியே மயங்கி விழுந்தான்.

பட்டியும் விக்கிரமாதித்தனும் அந்தக் கிழவனின் மயக்கத்தைத் தெளிவித்தனர்.

மயக்கம் தெளிந்த அவன் அழுது புலம்பியபடியே அங்கிருந்து சென்றான்.

விக்கிரமாதித்தனுக்கு எதுவும் புரியவில்லை.

"பட்டி! நான் இறந்து விட்டதாக எதற்குப் பொய் சொன்னாய்? இதைக் கேட்ட ஒருத்தி எதுவும் நடவாதது போலச் சென்று விட்டாள். ஆனால் இன்னொருவரோ தனக்கு மிகவும் வேண்டியவர் இறந்து விட்டது போல மயக்கம் அடைந்தார். ஒருத்தி என்னை இகழ்கிறாள். இன்னொருவர் என்னைப் புகழ்கிறார். காரணம் விளங்கவில்லையே."

"அரசே! உலகம் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறது என்று கேட்டீர்களே. அதற்கான பதில் தான் இப்பொழுது நமக்குக் கிடைத்தது.

முதலில் பார்த்த பெண்ணைப் பற்றி நீங்கள் இழிவாகப் பேசினீர்கள். அவளும் உங்களைப் பழித்துப் பேசினாள். கிழவனைப் பார்த்து உயர்வாகப் பேசினீர்கள். அவரும் உங்களைப் புகழ்ந்தார். நாம் எப்படி நினைக்கிறோமோ அப்படித்தான் உலகம் நம்மை நினைக்கிறது" என்று விளக்கம் தந்தான் பட்டி.

எ.சோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல வண்ண ஜொலிப்புடனான 'ஓப்பல் கல்'

குவார்ட்ஸ் தாது வர்க்கங்களில் ஓப்பல் என்னும் கல்லானது பல வண்ண ஜொலிப்புடன் கூடியதும், பல அதிசய சக்திகளை உடையதுமான கல் ஆகும்.

நம்பிக்கையையும். நியாயத்தையும், நேர்மையையும் வளர்க்கக்கூடிய சக்திகள் இதில் இருக்கின்றன. பிரபஞ்சத்தையும், பூமியையும் இணைக்கக் கூடிய சக்தி வாய்ந்த கல் ஆகும்.

பொய், பித்தலாட்டம், லஞ்சம், ஏமாற்றுதல் போன்றவைகளை எதிர்த்துப் போராடி வெற்றியைத் தரும் திறமை இதற்கு இருக்கிறது.

நியாயத்தையும், நேர்மையையும், அன்பையும் பராமரிக்க இந்தக் கல் அணிந்து பலன் அடையலாம். ஒப்பல் கல் அணிந்து தியானம் செய்வதால் அதன் சக்திகள் மூன்றாவது கண் என்னும் நெற்றிக் கண்ணைத் திறக்க உதவி செய்கின்றன.

ஓப்பல் கல்லின் சக்தி பிரவாகமானது சரீரத்தின் எல்லாப் பகுதிகளையும் பாதுகாக்கக் கூடிய ஆற்றல் உடையது ஆகும். இதனுடைய பல வண்ண ஒளிகளால் ஆலயத்தில் இருந்து சக்திகளை இழுத்து உடலில் சேர்த்தும், உடலில் இருந்து கூடுதலான சக்திகள் வெளியேறாமலும் பாதுகாக்கிறது.

இந்தக் கல்லை எந்த வண்ணத்தில், எந்தச் சக்கரங்களில் வைத்து உபயோகப்படுத்தலாம் என்று பார்ப்போம்.

வயலட் வண்ணமும், பிங்க் வண்ண ஒளியும் கொண்ட ஓப்பல் கல்லை சகஸ்ரதளத்தில் வைத்துக் கொண்டால் அதன் சக்திகளை அதிகரிக்கச் செய்கிறது.

ஆக்ஞா சக்கரத்தில் நீல வண்ணம், மஞ்சள், வயலட் மற்றும் இளநீலச் சுடர்களை விட்டு பிரகாசிக்கும் ஓப்பல் கல்லை வைத்து ஆக்ஞா சக்கரத்தை பலப்படுத்தலாம்.

விசுக்தி சக்கரத்துக்கு இளம் பச்சை மற்றும் வெண்மையான வெளிர் நீல ஒளியுடைய ஓப்பல் கல்லை வைத்து அதன் சக்திகளைப் பெறலாம்.

அநாகதச் சக்கரத்தை பலப்படுத்த பிரகாசமான நீல ஒளி அதிகம் வீசும் ஓப்பல் கல்லை வைத்து தியானித்து அதன் சக்திகளை அதிகரிக்கச் செய் யலாம்.

மணிபூரகச் சக்கரத்தை பலப்படுத்த அதிக மஞ்சள் ஒளி விடும் ஓப்பல் கல்லை உபயோகிக்கலாம்.

சுவாதிஷ்டானச் சக்கரத்தை பலப்படுத்த ஓரஞ்சு வண்ணம் கூடுதலாக உள்ள ஓப்பல் கல்லை உபயோகிக்கலாம்.

மூலாதாரச் சக்கரத்தை பலப்படுத்த சிவப்பு ஒளிக் கற்றைகள் அதிகம் உள்ள ஓப்பல் கல்லை உபயோகிக்கலாம்.

இந்தக் கல்லை அந்தந்த சக்கரங்களுக்கு அருகில் தினசரி ஐந்து நிமிடங்கள் பிடித்துக் கொண்டிருந்தாலே நிறைய சக்திகள் கிடைக்கும். இதுபோல சக்கரங்களுக்கு அருகில் கற்களைப் பிடித்து இருக்கும் போதே அதன் சக்திகள் சக்கரப் பகுதியில் பரவுவதை உணரலாம். சக்தி அதிகமாக வந்து விட்டதாக உணர்ந்தால் அத்துடன் கற் களைப் பிடிப்பதை நிறுத்தி விடவும்.

ஓப்பல் கற்களைக் கொண்டு ஓப்பல் சிலிகா (Opal Silica) தண்ணீரைக் கொண்டு பல நோய்களுக்கு மேல் பூச்சு மருந்தாக (Oinment) தயாரிக்கிறார்கள். ஓப்பல் கல்லில் சிலிகான சத்துக்கள் பிராண வாயு என்கிற ஒக்சிஜன் ஜல சத்துக்கள் மற்ற தாதுக்களைவிட அதிக அளவில் இருக்கின்றன. நமது உடலில் மூன்றில் ஒரு பங்கு ஜலம் இருப்பது போல ஓப்பல் கல்லில் மற்ற குவார்ட்ஸ் கற்களைவிட 22.2 சதவிகிதம் அதிக ஜல சத்து இருப்பதாக ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

ராஜயோகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிவும், அன்பும், அறிநெறியும் கொண்டு விளங்கும் மீன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வையும் சந்திரன் லாப ஸ்தானத்திலும் அமருவதும் எடுத்த காரியம் மற்றும். நினைத்ததை அடைவீர்கள். பொருளாதார வளர்ச்சியை பெறுவீர்கள். கடன் தொல்லை மறையும்.

### பணியாளர்களுக்கு

பணியில் மற்றவர்களை மதிக்கும் தன்மை உங்களிடம் இருக்கும். உறவுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். செய்யும் தொழிலை தெய்வமாக நினைப்பீர்கள். தொழிலாளர்களின் ஒற்றுமைக்கு உதவியாக இருப்பீர்கள். பொருளாதார வளர்ச்சியை பெறுவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொதுவிடயங்களில் எல்லோரிடமும் அன்பை செலுத்துவீர்கள். தன்னையும் தன்னை சுற்றி இருக் கும் அனைவரும் வளமாக வாழ உதவிகளை செய்வீர்கள். பொது கருத்துகளில் எல்லோரி டமும் ஒத்துழைப்பீர்கள். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.



## இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமைகளில் விநாயகரை வணங்கி தொடர்ந்து வழிபாடு செய்துவர வாழ்க்கையில் மேன்மை அடைவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் அலைச்சல்கள் இருந்தாலும் நினைத்தபடி வாழ்க் கையை அமைத்து கொள்வீர்கள். எதிலும் வெற்றியை தக்க வைத் துக்கொள்வீர்கள். சிரமத்துடன் இருப்பவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களின் வளர்ச்சிக்காக பல உதவிகளை செய்து வருவீர்கள். சுயதொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். கடன் சிரமம் குறையும். பண புழக்கம் அதிகரிக்கும்.

### மாணவர்களுக்கு

எலக்டிரிக்கல், இலத்திரனியல் தொழில் நுட்ப கல்வியில் வெற்றியை தரும். கடமைகளை தெளிவாக செயல்படுத்துவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

05.09.2016 திங்கள் காலை 06.39 முதல் 07.09.2016 புதன் மாலை 06.20 மணி வரை

# மீனம்



துர்முகி ஆண்டு ஆவணி மாதம்
17.08.2016 முதல் 16.09.2016 வரை

### வியாபாரிகளுக்கு

தொழிலில் இருந்த போட்டிகள் மறையும். நினைத்ததை சாதிக்கும் மனவலிமையை பெறுவீர்கள். எதிலும் கவனமாக செயல்பட்டு நன்மையை பெறுவீர்கள். கடல் சார்ந்த தொழிலில் ஆதாயம் கிட்டும். நகை அடகு கடை கூடுதல் ஆதாயம் தரும். பண வரவு நன்றாக இருக்கும்.

### நட்சத்திர பலன்கள்

### பூரட்டாதி 4ஆம் பாதம்

பொறுமையுடன் செயல்படுவீர்கள். பல காலம் காத்திருந்த காரியம் கைகூடும். தொழிலில் இருந்து வந்த மந்த நிலை மாறி வருமானம் பெருகும்.

### உத்திரட்டாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

உங்களின் கடமைகளை சரியாக செய்து பலன் பெறுவீர்கள். தெளிவான மனநிலை அமையும். உறுதியான செயல்பாடுகள் வெற்றியை தரும்.

### ரேவதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

உயர்கல்வி வாய்ப்புகள் அமையும். ஆசிரியர் பணியில் சிறந்து விளங்குவார்கள். கருத்துள்ள செய்திகளை பலருக்கு சொல்லி மகிழ்வீர்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள்: மஞ்சள், வெள்ளை, நீலம்
அதிர்ஷ்ட திசைகள் : வடக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு
அதிர்ஷ்ட கிழமைகள் : வியாழன், வெள்ளி, சனி

### மனதால் செய்யும் பாவங்கள்!

காமம் கோபம் முதலிய வற்றால் தோன்றும், தீய எண்ணங்களான அசுர இயல்புகள் அனைத்தும், மனதால் செய்யும் பாவம் என்பதில் அடங்கும்.


கணித்தவர் வாடிப்பட்டி
R. ஆனந்தன்
91-9789341554







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சன சிற்பிகள்

சோதிடகேசரி மாதாந்திர சஞ்சிகையை நான் தொடர்ந்து வாசித்து வருகிறேன். அதனில் கடந்த பல மாதங்களாக பிரசுரிக்கப்பட்டு வரும் கனவுகளும் பலன்களும் பகுதி மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. இதனைத் தொடர்ந்து பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**ஆர்.மஞ்சுளா ராமநாதன் மட்டக்களப்பு**

சோதிடகேசரியில் ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்பட்டு வரும் ரிஷி வரலாறு தொடர்பான கட்டுரைகள் நாம் இதுவரை அறிந்திராத பல தகவல்களை அறியத் தருகின்றன. ரிஷிகளின் வாழ்க்கை வரலாறுகள் நமக்கு நல்ல பண்புகளை எடுத்துச் சொல்கின்றன. நன்றி!

**ச.அஸ்வின்குமார், நீர்கொழும்பு**

சோதிடகேசரியில் அண்மையில் வெளியிடப்பட்ட திருகோணேஸ்வரத்தின் தொன்மை என்னும் கட்டுரையானது எம்மை படித்தவுடன் மெய்சிலிர்க்க வைத்தது. படங்களும் தகவல்களும் அற்புதத்திலும் அற்புதம். நன்றி.

**வி.சுந்தரலிங்கம், கொழும்பு**

சோதிடகேசரி ஆன்மீக மாத இதழில் பிரசுரிக்கப்பட்டு வரும் வெளிநாட்டு கோயில்கள் பற்றியதான கட்டுரைகள் மிகவும் அருமையாக இருக்கின்றன. அதில் தரப்படும் அற்புதமான படங்களும் கோயில் விபரங்களும் மிகவும் சுவாரஸ்யமாகவும் புதிதாக அறியதக்கனதாகவும் இருக்கின்றன. தொடரட்டும் உங்கள் ஆன்மீகப் பணி. நன்றி!

**எம்.பாவனி சங்கரி, யாழ்பாணம்**

சோதிடகேசரியில் தற்போது பிரசுரிக்கப்பட்டு வரும் ஆலயச் சிற்பங்கள் சம்பந்தமான கட்டுரைகள் அருமையாக இருக்கின்றன. படங்களில் காணப்படும் சிற்பங்கள் பண்டைய காலச் சிற்பப் பெருமையினை வரலாற்று சிறப்புகளுடன் எடுத்துரைக்கின்றன. தொடரட்டும் உங்கள் சேவை.

**ஆ.நம்புநாயகி, திருகோணமலை**

சோதிடகேசரியில் கடந்த பல மாதங்களாக பிரசுரிக்கப்பட்டு வரும் போதி தர்மரின் போதனைகள் பற்றியதான கட்டுரைகள் இக்கால மனிதர்களுக்கும் நல்ல ஞானத்தை புகட்டுவதாக இருக்கின்றன. தொடர்ந்து பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன். நன்றி!

**எம்.ஆர்.பாலசண்முகம், தெஹிவளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிசக்தி வாய்ந்த பரம்பரை மலையாள மாந்திரீகம்

ஆண் பெண் இருபாலரையும் வசியம் செய்யும் மாந்திரிகத்தில் விசேட சக்தி பெற மந்திராச்சாரியாரான ஜீவகாந்தி சாமியிடம் உங்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி மனநிம்மதி பெறுங்கள். 62 வருடங்களாக நம்பிக்கை நிறைந்த சேவையாற்றிவந்துள்ளேன். ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் எழுத்தோலைகளில் எழுதப்பட்டு பாதுகாப்பாக பேணப்பட்டு வந்திருக்கும் அந்த உண்மையான மலையாள மந்திரங்கள் என்னிடம் உள்ளன.என்னால் முடித்துத்தரப்படும் மாந்திக வேலைகள் முழுமையாக பலன்களைத் தருவதன் இரகசியம் இதுதான்.

## 24 மணிநேரத்துள் பலன் கிடைக்கும் என்ற உத்தரவாதம்

62 வருட அனுபவம் கொண்ட நம்பக சேவை

## இரகசியம் பேணப்படும்

என்னால் முடித்துத் தரக்கூடிய எனைய மாந்திரிக வேலைகள் : நீண்ட காலமாக உங்களுடன் நெருக்கமாகப் பழகி எல்லா பலன்களையும் அனுபவித்துவிட்டு பின்னர் பிரிந்துசென்ற காதலனை/ காதலியை உங்கள் காலடிக்கு கொண்டுவர வேண்டுமா ? கண்டதும் காதல் வந்துவிட்டதா ? வாழ்நாள் முழுவதும் பிரியத்துடன் வாழ்வதற்கு காரியம் செய்து கொடுப்போம், விலகிச்சென்ற தொடர்புகளை திரும்ப ஏற்படுத்தியும் கொடுப்போம்.விலகிசெல்லவும் வைப்போம்,விவாகம் தாமதமாகிச் செல்லகிறதா? குழந்தைகள் இல்லையா ? தொழில் நேர்முகத்தேர்வில் வெற்றிபெறவும்,திடீர் பணவரவுக்கும் காரியம் செய்து கொடுப்போம்.வீடு,வியாபார ஸ்தலம் மென்மேலும் விருத்தியடைய செய்வோம்,செய்வினை அச்சுறுத்தல்,விற்கமுடியாத காணியை விற்றுத்தரல்,அதிக இலாபம் பெறுவதற்கு என பல காரியங்களை செய்து முடித்துத் தருவோம்,சகல மாந்திரீக வேலைகளினதும் முழுப்பலன்கள் சர்வ நிச்சயம்,இரகசியங்கள் பாதுகாக்கப்படும்.

மாந்திரீகவேலைகளுக்கான கட்டணங்களை Commercial Bank - A/C No : 8100095974 என்ற இலக்கத்திற்கு மாத்திரம் பணத்தை வைப்பிலிட்ட பின்னர் இந்த இலக்கத்திற்கு 0765529844 SMS பண்ணவும்.

max adz

*ஆண் பெண் வசிய மாந்திரீகத்தில் பாரம்பரிய நிபுணத்துவம் கொண்ட மஹா குரு*

வெளிநாடுகளில் வசிப்போருக்கு விசேட காப்பு மந்திரம் அருளப்படும்

## சாஸ்த்திரம்

உங்கள் எதிர்கால பலன்களை ஆச்சரியப்படும் வகையிலும் சந்தேகங்களுக்கு அப்பால் உண்மைகளை உள்ள படி அறிந்து கொள்ளுவதற்கு பிரதி செவ்வாய்கிழமை,வெள்ளிக்கிழமை தோறும் காலை 9.30 மணிமுதல் பி.ப 3.30 மணிவரை என்னை நேரில் வந்து சந்தியுங்கள்.ஒரு கை வெற்றிலையுடன் ஏழு காணிக்கை காசுகளை மஞ்சள் நீரில் கழுவி புனிதப்படுத்தி கையோடு எடுத்து வாருங்கள்.

சந்திப்பு : திங்கள்,வெள்ளி : 10 - 2 மணி புதன்,ஞாயிறு : 10 - 5 மணி
சந்திப்புகட்டணம் : 300.00

## ஜீவகாந்தி

No.07-2/1 (2nd Floor), W.A. சில்வா மாவத்தை,வெள்ளவத்தை.
கொழும்பு -06. TEL : 0770416205 / 0765529844
( காலி வீதி சிக்னலுக்கு மிக அருகாமையில் )
Email : jeewakanthi28@gmail.com
தொடர்பு கொள்ளவேண்டிய நேரம் : 10.00 am - 6.00 pm Only


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ ராம ஜெயம்

# 52 வருட காலமாக என்னால் நிரூபித்து கொண்டிருக்கும் மலையாள மாந்திரிக சக்தியின் வேகம்



**உலக மக்களில் என்னை தெரியாதவர் யாருமில்லை**

**உண்மைக்கு எடுத்தக்காட்டு எமது நிறுவனமே**



**ஒரு கூரையின் கீழ் 52 வருட காலமாக**
**மலையாள யந்திர மந்திர சக்திகளை உண்மை வெளிச்சத்துடன் காட்டும்**
**ஒரே ஒரு நிறுவனம் இதுவே...**

**காலம் காலமாக உங்களுடன் நெருக்கமாக பழகிவிட்டு, பிரிந்து சென்ற காதலன்ஃகாதலியை மீண்டும் பெற, பிரிந்த உறவுகள் ஒன்றுசேர, செய்வினை கோளாறா வீட்டில் பயந்து எழுதல் கடும் சிந்தனை இரவில் பயந்து எழுதல் சொல்லிக்கொள்ள முடியாத நோய்கள் மாதவிலக்கு தொல்லை வயிற்றுவலி அதிஷ்டம் வாகனம் பெற தடைசெய்த வியாபாரத்தை முன்னுக்கு கொண்டுவர பங்காளி துரோகம் அகல மனநிம்மதியுடன் அன்றாட கருமம் செய்ய, செல்வக் குழந்தைகளைப் பெற்றெடுக்க சரியான பரிகாரம் மூலம் செவ்வாய்த் தோசம் ராகு தோசம் இவைகளை திறம்பட செய்து திருமணம் நிறைவேற குடிபே-ாதை முற்றாக ஒழிக்க தலைமுடி உதிர்வைத் தடுக்க இன்னும் உங்களது பல குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் என்னை சந்திக்கவும். அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை நடந்தது, நடக்கப்போவது, நடக்க இருப்பது, காதல் வெளிநாட்டுப் பயணம், எதிர்பார்க்கும் விடயங்கள் அனைத்தும் சரிவரும் திகதியை அருள் ஞானத்துடன் கூற முடியும்.**

ஜோதிட மாந்திரிக தத்துவ ஞானி
சொல்லின் செல்வன் பேராசிரியர்
உலகப்புகழ் ஞான சீல, அருள் சீல,
ஆற்றல் சீல, மஹா ஞான தவ
அருள் பேராசிரியர் தேசபந்து
REV, P.K. சாமி (J.D.G.A.N)JP

நல்ல பாம்பு ஆடுவது போல், நாக்களம் பூச்சிக்கு ஆடமுடியாது. இது போன்றே. மாந்திரீகத் துறையில் இனிக்க இனிக்க வசனங்கள் போட்டு விளம்பரம் செய்பவர்கள் சில காலங்களில் மூடு பனியைப்போல். அவர்களை அறியாமலேயே மறைந்து விடுகிறார்கள். என்னைப் பொறுத்த வரை. பாவம் செய்தவனா? கர்மம் செய்தவனா? அல்லது புண்ணியம் செய்தவனா? இவை அனைத்தும் கண்டறிந்து அவரவரின் கிரகப் பலன்களுக்கு அமைய திட்டவட்டமாகவும் தெளி-வாகவும் பரிகாரம் செய்வதினாலே நினைத்தது நினைத்த படி நிறைவேறுகிறது. இது ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக (P.K.Samy Associate (Pvt) Ltd.) 52 வருட காலமாக இயங்கக் காரணம் எமது உண்மை யானதும் தனித்துவமானதுமான சேவையே. இத்துறையில் செலுத்தும் பணத்திற்கு வாடிக்கையாளர் பற்றுச் சீட்டு வழங்கும் ஒரே நிறுவனம் நாம் மட்டுமே.

P.K.Samy Advertising

**ஜோதிட இரகசிய புத்தகம் ரூபா 600/- தபால் செலவு ரூபா 150/-**

● அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் ஸ்தாபனம் ● இது ஒரு மதசார்பற்ற சேவை ஸ்தாபனம்
● இரகசியங்கள் எந்த சூழ்நிலையிலும் வெளியிடப்பட மாட்டாது. உறுதி

எமது ஸ்ரீ துர்க்காதேவி கோயிலில் மாத கடைசியில் சுமார் 4 மணித்தியாலம்
அக்கினி குண்டல பூஜையில் உங்கள் குறை நிறைகளை போக்கிக் கொள்ளலாம். அன்றைய தினம் தானதர்மங்களும் உண்டு.

உங்கள் தேவைக்கு கீழ் காணும் தொலைபேசி வரிசை 10ல் ஒரு எண்ணை அழுத்துங்கள்.உங்கள் பிரச்சினை தீரும்.

# ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
# மலையாள மாந்திரீக உச்சாட்டபீடம்

**தலைமை காரியாலயம்**
23, மேபீல்ட் ரோட், கொட்டாஞ்சேனை கொழும்பு - 13
T.P: 1 011 2342463, 2 011 2342464, 3 0112322189
4 011 2470615 Fax: 5 011 2344831, 6 0112344832
Email : drpksamy23@gmail.com

**தொலைபேசியில் ஆலோசனை பெற**
33, கண்டி ரோட், நுவரெலியா.
T.P: 7 052 2222508, 8 052 2223093
9 052 2235097 J.Ram- 10 0778431761

Airtel மூலம் உங்கள் இராசி பலாபலன்களை இலவசமாக அறிய 2626 தொடர்பு கொண்டு எண் 22 அழுத்தவும்.


இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி. 185ஆம் இலக்கத்தில் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org